துர்க்கா பரமேஸ்வரி




KOVILOOR MADALAYAM

[redacted]

பிரதி
பிரசுர

ஸ்ரீ தக்ஷிணா காளி யந்திரம்



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு தக்ஷிண காளி பிரத்யட்சம். இந்த யந்திரத்தில்தான் தக்ஷிண காளி பூஜிக்கப்படவேண்டும்.

தக்ஷிணகாளி ஸ்துதி 77–80 பக்கங்களில் காணவும்


துர்க்கா பரமேஸ்வரி

(சப்த சதீ, சண்டி ஹோம விளக்கத்துடன்)

ஆசிரியர் :

எஸ். நடராஜன்

(ரஜன்)



— பிரதிபா பிரசுரம்

ராகுகால துர்க்கை ஸ்துதி, தக்ஷிண [illegible],
(கற்பூராதி) ஸ்துதி, ஆத்யகாளி ஸ்துதி, துர்க்கா [illegible]
முதலியவை கொண்டது

வெளியிடுவோர் :
என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்

25, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

உரிமையுள்ளது] விலை ரூ. 3-00

துர்க்கா பரமேஸ்வரி

அக்டோபர் 1974 முதல் பதிப்பு

மே 1976 இரண்டாம் பதிப்பு

விலை ரூ. 3-00

(தபால் செலவு தனி)

பொருளடக்கம்

பூங்குழலி அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-600 014.

MADALAYAM
KOVILUR 30
VIA

தருமபுர ஆதீனகர்த்தரின் அருளாசி

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்

தருமபுரம், மாயூரம்
P. O.
17-10-1974

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

மலரில் மணம் போல் பிரிப்பின்றிச் சிவப்பிரானின் இடப்பாகத்தில் எழுந்தருளியிருந்து அனைத்துயிர்களுக்கும் அன்னையாய் அருளே வடிவாய் விளங்கும் பராசக்தி பல்வேறு பேதங்களில் மக்களால் வழிபடப்பெறுகிறாள். அவ்வன்னையே செல்வத்தைத் தரும்போது திருமகளாய், கல்வியைத் தரும்போது கலைமகளாய், ஆற்றலைத்தரும்போது கொற்றவையாய்க் காட்சி வழங்குகின்றாள். கொற்றவை—துர்க்கை, ஆகமங்கள், உபநிடதங்கள், தேவி புராணம் முதலிய நூல்களில் சக்தி பேதங்களும் அவற்றின் சிறப்புக்களும் தெளிவாகக் கூறப்படுகின்றன. சப்த சதீ என்ற எழுநூறு மந்திரங்களைக் கொண்ட நூல் தேவி மகாத்மியம் எனப் பெயர் பெறும். அந்நூலில் கொற்றவையின் வீர வரலாறுகள் கூறப்படுகின்றன. அம்பிகை சண்டி, சாமுண்டி, மகிஷாசுரமர்த்தினி, மகா காளி, மகா சரஸ்வதி என்ற பெயர்களைப் பெறுவதற்குரிய வரலாறுகள் அந்நூலில் உள்ளன.

சண்டன், முண்டன் என்ற இரு அரக்கர்களை அழித்ததால் சாமுண்டி என்றும், தியவர்களை அழித்ததால் சண்டி என்றும், தன்னை வழிபடும் அடியவர் இடர் களைவதால் துர்க்கை என்றும், மகிஷன் என்ற அசுரனை அழித்ததால் மகிஷாசுரமர்த்தினி என்றும் அம்பிகைக்குப் பெயர்கள் உண்டாயின. இவ்வன்னை நம் நாட்டில் பல கோயில்களிலும் பல்வேறு தோற்றங்களோடு விளங்கி அருள் செய்கின்றாள்.

தருமையாதீனத்தில் விளங்கும் பதினெண்கைகளோடு விளங்கும் ஸ்ரீ அஷ்டதசபுஜ மகா லக்ஷ்மி துர்க்காதேவி திருமகள் கொற்றவை ஆகிய இரு தெய்வங்களையும் இணைத்து நிற்கும் அம்மையின் அருளுருவமாகும். மார்க்கண்டேய மகரிஷியின் தியான சுலோகத்தின்படி அமைந்த இவ்வம்பிகை இருபத்து நான்கு சதசண்டி வேள்விகள், பத்துக்கோடி அர்ச்சனைகள் செய்யப்பெற்று வேண்டுவார்க்கு வேண்டுவன அருளும் அருட்பொலிவோடு விளங்கி வருகிறாள்.

அன்னை பராசக்தியின் பேதங்களில் ஒன்றான ஸ்ரீ துர்க்காதேவியின் வழிபாடு நாடெங்கும் பலராலும் கொண்டாடப் பெறுகிறது. ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் சிறப்புக்களைத் தொகுத்து அனைவரும் அறியும் வகையில் அன்பர் திரு. எஸ். நடராஜன் (நஜன்) நூல் வடிவாக வெளியிடுதல் சிறந்த பணியாகும். செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் திரு. நடராஜன் அவர்கள் நலம்பல எய்துக. அன்பர்கள் இந்நூலைப் பெற்றுக் கற்று அன்னையின் திருவருட் பேற்றுக்கு உரியவர்களாகுக.

பதிப்பாசிரியர் முன்னுரை

எங்களது ஆன்மிகத் தொடர்வரிசையில் மூன்றாவதான துர்க்கா பரமேஸ்வரி புத்தகத்தின் 2-ம் பதிப்பு இப்போது உங்கள் கையில் இருக்கிறது.

இப்புத்தகம் புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி அதிர்ஷ்டானம் பெரியவர்கள் ஸ்ரீ சந்தானந்த சுவாமிகள் நடத்தும் துர்க்கா ஸப்தசதி லக்ஷ ஹோமம் நடைபெறுவதை யொட்டி, அவர் பரிபூரண ஆசி பெற்று வெளியிடப்படுவது எங்கள் பாக்கியமாகும்.

இதில் புதிதாக பல விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஆத்ய காளியின் நாமாக்கள், தக்ஷிண காளி (கற்பூராதி) ஸ்தோத்திரம், நவதுர்க்கைகளின் மூலமந்திரங்கள், சூலினி துர்க்கை திரிசதி ஆகியவற்றை சேர்த்திருக்கிறோம்.

செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் துர்க்கையை வழிபடுவதற்கென்றே மங்கள சண்டிகா என்ற ஸ்துதி இருப்பதை தேடிக் கண்டு பிடித்து இதில் சேர்த்திருக்கிறோம்.

மிக அருமையான முகவுரை தந்து ஆசி வழங்கிய சாஸ்திர ரத்னாகர பிரும்மஸ்ரீ ஜகதீஸ்வர சாஸ்திரிகள் அவர்களுக்கு எங்கள் நமஸ்காரத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கஷ்டங்கள் நீங்க அங்கங்கே சண்டி ஹோமங்கள் நடைபெறுகின்றன. இதன் மகிமையை உணர்ந்த ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் தனது பகைவர்களை வெல்ல மகான்களைக் கொண்டு சதசண்டி ஹோமம், சகஸ்ர சண்டி ஹோமம் எல்லாம் செய்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படிப் பட்ட சப்த சதீ, சண்டி ஹோமம் இவைகளின் அருமை பெருமைகளெல்லாம் ஸ்ரீவித்தை உபாசகர்களுக்கு அநேகமாகத் தெரிந்திருக்கும். ஆனால் இவைபற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதன் பொருட்டே இப்புத்தகம் எழுதப்பட்டது.

எங்கள் புத்தக வெளியீட்டுப்பணியில் பக்கபலமாக இருந்து பெரும் உதவி செய்த ஸ்ரீமதி கல்யாணி மார்க்கபந்து (ஸ்ரீ நாட் அண்ணாஜி ராவ் அவர்களின் குமாரி) அவர்களுக்கும் அட்டைப் படத்தை அழகுடன் அச்சடித்துஉதவிய கலைவேந்தர் திரு. நாதன் அவர்களுக்கும் பூங்குழலி அச்சக அதிபர் ஸ்ரீ முத்துக்கிருஷ்ணன் ஆகியவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

இவ்வரிசையில் இன்னும் அருமையான பல புத்தகங்கள் வெளியிட உத்தேசம். உங்கள் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்ற தைரியத்தில் துணிந்து இப்பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

சென்னை,
5—8—'76

இப்படிக்கு,
என். லலிதாம்பாள்.

முகவுரை

ஆத்மவித்யா பூஷணம், சாஸ்திர ரத்னுகர
பிரும்மஸ்ரீ ஜகதீஸ்வர சாஸ்திரிகள்

நமது சாஸ்திரத்தில் அத்விதிய பரசிவம் என்கிற தத்துவம் ஒன்று உண்டு. அத்தத்துவம் சிவம், சக்தி என்று நாம் உய்யும் பொருட்டு இருவிதமாக பிரிந்து செயல்படுகிறது. ஆனுல் தீபத்தில் ஒளி போலவும், புஷ்பங்களில் வாசனே போலவும் இவ்விரு தத்துவங்களும் ஐக்கியமாகியுள்ளன. சக்தியே சிவம்; சிவமே சக்தி. இவ்விரண்டுக்கும் நாம ரூபமில்லே. ஆனுல் அனுக் கிரக நிமித்தம் பல நாமங்களேயும், பல ரூபங்களேயும் கொண்டு அந்த சக்தி ஆவிர்பவிக்கிறது.

திரிபுரசுந்தரி, சண்டிகா, துர்க்கா பரமேஸ்வரி, சரஸ்வதி, லக்ஷ்மி முதலிய உருவங்கள் சக்தி தத்துவத்தின் அவதாரங் களாகும். இது உபநிஷத் பிரமாண சித்தாந்தமாகும். பண்டாசுரன், மகிஷாசுரன், சும்ப நிசும்பன் முதலிய அரக்கர்கள் இந்த அவதாரங்களால் நிக்கிரஹம் செய்யப்படுகிருர்கள். இது அனுக்கிரஹமே ஒழிய நிக்கிரஹமன்று. உண்மையில் அகந்தை, மமதை, காமக்ரோதம் ஆகிய அசுரர்களே அகற்றி, நற்குணங்களே அடைந்து பேரின்ப வீட்டை அடைய வேண்டும் என்ற உண்மையே சப்த சதீ சுலோகங்களில் மறைந்திருக்கும் உண்மை.

கலி முற்ற முற்ற அநியாயங்களும், அக்கிரமங்களும் பெருகி வருவது கண்கூடு. இத்தகைய கலியில் தர்மம் நசித்து விடாமல் இருக்கவேதான் வியாசர் கடல்போன்ற வேதங்களே சுருக்கி நமக்கு ப்பயன்படும்படி செய்திருக்கிருர். விஷ்ணு சகஸ்ரநாமத்தை பாரா யணம் செய்தால் இக்கலியில் மிக நல்லது. அதற்கும் அவகாசம் இல்லே என்ருல் "ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனேரமே சகஸ்ரநாம தத்துல்யம் ராம நாம வராணனே!" என்று சொன்னுல் போதும். சகஸ்ரநாமத்தை முழுதும் பாராயணம் செய்த பலன் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

காலம் போகிற போக்கில் நல்லனவற்றை எல்லாம் நாம் மறந்து வருகிருேம். தெய்வ பக்தி, தர்மங்கள், நல்ல காரியங்கள் ஓரளவு நடைபெற்ருல்தான் கலியின் கொடுமையைக் கட்டுப்

படுத்த முடியும். இக் கலிகாலத்திற்கு ஏற்ற பாராயண நூல்களில் தேவி பரமான சப்த சதியும் ஒன்று—மிக முக்கியமானது. தேவர் களுக்கு கஷ்டங்கள் வந்தபோது தேவியை துதித்து அக்கஷ்டங் களிலிருந்து விடுபட்டிருக்கின்றனர். இப்போதும் அங்கங்கே சண்டி ஹோமம் நடைபெறுவதைக் காண்கிறோம்.

நம்மிடையே இவ்வளவு அருமையான பொக்கிஷங்கள் உள்ளன. அவைகளின் தத்துவார்த்தங்கள் இவை என்பதை விளக்கும் பணிதான் இக்காலத்திற்கு ஏற்றத் தொண்டு. இப்பணியை ஸ்ரீ நடராஜனும், அவர் பத்தினி ஸ்ரீமதி லலிதாம் பாளும் ஏற்று நடத்தி வருகின்றனர். இவர்கள் இருவரும் ஸ்ரீ சிதானந்தர் அவர்களிடம் முறையாக தீக்ஷைப் பயின்றவர்கள். ஆகவே எங்களுடைய ஸ்ரீவித்யா குடும்பத்தினர்தான். ஸ்ரீவித்தை இவர்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து. ஸ்ரீ நடராஜன் தகப்பனார் தன் கிருஹத்திற்கு 'சிந்தாமணிக் கிரஹம்' என்றே பெயர் வைத்திருக்கிறார். இத் தம்பதிகள் அன்னை பராசக்தியின் எல்லா அம்சங்களையும் தொடர்ந்து புத்தகங்களாக வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

துர்க்கா தேவி பற்றியும், சப்த சதி சண்டி ஹோமம் பற்றியும் இப்போது வெளியிட்டுள்ள இப்புத்தகம் காலத்திற்கேற்றது. லோக க்ஷேமத்திற்கும் நம் ஒவ்வொருவர் க்ஷேமத்திற்கும் இந்தகைய புத்தகங்கள் மிக அவசியம். இந்நூலில் அடங்கியுள்ள அரிய பெரிய விஷயங்கள் யாவும் வடமொழி கற்றிராதவர்கள் பயனடையும்படி அமைந்திருக்கின்றன.

அன்னையின் மகிமையை விளக்கும் 'நஜன்' தம்பதிகளின் இத்தொண்டு பாராட்டுதற்குரியது. குரு கடாக்ஷத்தினாலும், அன்னை பராசக்தியின் அருளாலும் இவர்கள் மேற்கொண்டுள்ள இக்காரியம் வெற்றிபெற ஆசீர்வதிக்கின்றேன். யாவரும் இந்நூலை ஆழ்ந்து படித்து பரதேவதையின் கருணைக்கு பாத்திரர்கள் ஆக வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

"ரமண பவனம்"
திருகம்பாக்கம்,
சென்னை—92.
31—10—1974

ஜகதீஸ்வர சாஸ்திரிகள்

ஆசிரியர் முன்னுரை

உலகில் தோன்றியிருக்கும் பிற பிராணிகளைக் காட்டிலும் பன்மடங்கு திறமையுள்ள மூளையைப் பெற்றிருந்தும் மனிதனுக்கு அச்சம் போகவில்லை. இயற்கை சக்தியைத் திறமையுடன் அடக்கி தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறான். எனினும் இயற்கை அன்னை இவனை ஏமாற்றிவிடுகிறாள். இயற்கை அன்னையின் மகத்துவத்தைக் கண்டு அச்சமெழுவதுடன் வியப்பும் உண்டாகிறது. இத்தகைய நிலையை சிந்திக்கும்போது தனக் கெட்டாத சக்தி ஒன்று இருப்பதைத் தெரிந்துக் கொள்கிறான். அந்த சக்திதான் தெய்வம். மனித உற்பத்திக்கும், வாழ்க்கைக்கும், பிறப்புக்கும், இறப்புக்கும் காரணமாக இருக்கிற இயற்கை சக்தியை வணங்காமல் யாரும் இருக்க முடியாது:

தெய்வ வழிபாடு, பிரார்த்தனை ஆகியவற்றைச் செய்வது மனிதனுடைய ஆதிகாலத்திலிருந்தே தோன்றி யிருக்கும் செயல். ஆதிகாலத்து மனிதன் இயற்கையை அறியாமை நிலையில் கொண்டாடினான். இன்று விஞ்ஞானத்தின் உதவியுடன் இயற்கை சக்தியின் பெருமையைக் கண்டு வியப்புற்று வணங்குகிறான்.

கடல் கொந்தளிப்பு, வெள்ளப் பெருக்கு, புயல் கொடுமை, பூகம்பம், எரிமலை தீக்கக்குதல் ஆகிய இயற்கை உற்பாதங்களை அன்னை பராசக்தியின் "ஊழிக் கூத்து" என்று பாரதியார் வருணிக்கிறார். அன்னை பராசக்தியை தாயாக வருணித்தபின் ருத்திர சொரூபிணியாக அன்னையைப்பற்றி எழுதுவது மிகப் பொருத்தம். ஏனெனில் எத்தகைய தவறையும் பொறுத்துவிடும் அன்னை அக்கிரமங்களைப் பொறுக்கமாட்டாள்; சீறி எழுவாள்.

இறைவனுக்கு போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என்று மூன்று உண்டு.

போகியாய் இருந்துயிர்க்கு போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி உதவுதலும் ஓரார்
வேகியினாற் போல் செய்த வினையினை விட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்.

என்கிறது சிவஞான சித்தியார்.

அருள் செல்வம், பொருள் செல்வம் அளிப்பது போக வடிவம். ஞானத்தை அளிப்பது யோக வடிவம். துன்பங்களைப் போக்குவது வேகம் என்கிற உக்கிர வடிவம். போக வடிவான அன்னை பராசக்தியையும் யோக வடிவான குருவையும் பற்றி புத்தகம்

வெளிவந்த பின் வேக வடிவான துர்க்கா பரமேஸ்வரி வெளிவருவது பொருத்தம்தானே!

துர்க்காதேவி மகிஷாசுர சம்ஹாரிணியாக ரூபமெடுத்து சிங்கத்தையே வாகனமாகக் கொண்டு தோன்றுகிருள். மகிஷாசுரன் என்பது அறிவின்மையின் அறிகுறி. தேவி அஞ்ஞானத்தை நிர்த்நாக்ஷண்யமாய் ஒழிக்கவென்றே அவதரித்திருக்கிருள். ஞானத்தையும் செல்வத்தையும் அவள் கொண்டு வருகிருள். காலம் கலிகாலமாதலால் ஞானம் பெறவும் செல்வம் முதலில் வேண்டியிருக்கிறது. சரஸ்வதி ஞானத்தின் அறிகுறி. செல்வம் பெற லக்ஷ்மி கடாக்ஷத்தை வெளியிட்டோம், ஞான தேவியான சரஸ்வதி பற்றிய 'வாகதேவி வைபவம்' வருகிற நவராத்திரியில் வெளிவருகிறது.

எங்களது குலதெய்வமான மதுரகாளியம்மனை மனதில் தியானித்து அவள் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

சென்னை
அக்ஷய திருதியை, 1976

எஸ். நடராஜன்
(நஜன்)

அன்பே சிவம்

மக்கள் உய்வதற்குரிய

பிரதிபா பிரசுர தெய்வீகக் கனிக (புத்தகங்க) ளான :—

துர்க்கா பரமேஸ்வரி, குரு தத்துவம், ஜகந்மாதா லலிதா,
மூக பஞ்ச சதி, தமிழர் பண்டிகையும் பண்பாடும்,
பாவை உணர்த்தும் தத்துவங்கள், லக்ஷ்மி கடாக்ஷம்,
சுவாமியே சரணம் ஐயப்பா, கருணை காமாட்சி,
அன்னை பராசக்தி

மற்றும் அடுத்தடுத்து வெளிவரும் புத்தகங்களனைத்தும்

சிங்கப்பூரில்

கிடைக்குமிடம் :

கலைமகள் புத்தக நிலையம்

(தொடக்கம்: 1948)

113, சிராங்கூன் சாலை, சிங்கப்பூர்-8.

புதுக்கோட்டை ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் அனுக்கிரஹம் செய்துள்ள

ஆசியுரை

புதுக்கோட்டை, 7—5—'76

பிரதிபா பிரசுர ஆசிரியரும், ஸ்ரீமானும், ஸ்ரீ வித்யோபாஸக ஞானபாஸ்கரருமான ஸ்ரீமான் எஸ். நடராஜன் அவர்களுக்கு, தெரிவித்துக் கொள்வதாவது:

தாங்கள் 28-4-76 அன்று அனுப்பிய கடிதத்தையும், அடுத்து வெளிவரவிருக்கும் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி புஸ்தகத்தையும், ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்கள் பார்வையிட்டு சந்தோஷமடைந்தார்கள்.

இது சமயம் நமது நாட்டின் நலமொன்றையேக் கருதி, தாங்கள் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் சம்பந்தமான நூலை வெளியிடுவதானது ஜகத்ஜனனியான ஸ்ரீ துர்க்கா தேவியின் பூர்ண க்ருபாகடாக்ஷமேயாகுமென்றும், ஸ்ரீ துர்காம்பிகையின் முழு விபரங்களுடன், துர்காதேவி எழுந்தருளியுள்ள ஸந்நிதிகளையும், கலியில் துர்காம்பிகைக்கு மிஞ்சிய தெய்வமில்லை, துர்காம்பிகையின் உபாஸனை ஒன்றே கலியில் அறம், பொருள், இன்பம், வீடுகளாகிய சதுர்வித புருஷார்த்தங்களை கொடுக்கவல்ல தென்பதையும், அன்னையினுடைய மந்திர சாஸ்திரங்களின் சாரமாக உள்ள துர்கா பரமேஸ்வரி தேவியின் மஹாமந்திரங்களையும், ஸப்த சதீ விளக்கங்களையும், எல்லாம் தேவி மயம் என்கிற தங்களுடைய மேலான முடிவையும், தக்ஷிண காளி, விஷயங்களும், மற்றும் காளிகா ஸ்தோத்திரங்கள் மிக முக்கியமான சூலினி துர்கா திரிசதி போன்றவைகளை எல்லாம் ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்கள் பார்வையிட்டு, தமிழக மக்களுக்கு அளவிடமுடியாத ஸந்தோஷத்தைத் தரும் துர்க்கா பரமேஸ்வரி என்கிற தலைப்பில், தாங்கள் வெளியிடும் நூலை, தமிழர்களுக்கு துர்க்கா தேவியின் திருவருள் நிறைந்த பொக்கிஷத்தையே தாங்கள் திறந்து விட்டு விட்டீர்கள் என்றும், இப்படிப்பட்ட மாபெரும் அழிவற்ற தர்ம கைங்கர்யத்தைச் செய்து வரும் தங்களை, ஸ்ரீ வித்யோபாஸக ஞானபாஸ்கரன் என்று போற்றவேண்டுமென்று, ஆதிபராசக்தியானவளும், ஜகத் ஜனனியுமான ஸ்ரீமாதா புவனேச்வரி தேவியின் ஸ்மரண பூர்வகமாக தங்களுக்கு விசேஷ ஆசிர்வாதத்துடன் அனுக்ரஹங்களை இடைவிடாது அனுப்பிக்கொண்டேயிருப்பதாயும்,

மேலும், மேலும், தாங்கள் இத்தகைய புண்ய கைங்கர்யங்களைத் தமிழகத்திற்குச் செய்துக் கொண்டு, திருடகாத்திர சரீரத்துடன் பல்லாண்டு, பல்லாண்டுகள், குறைவற்ற செல்வத்துடனின்புற்றிருந்து வரவேண்டுமென, ஆசீர்வதிப்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படிக்கு,

ஸ்ரீமத் ஸத்குரு ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி

காரியதரிசி.

ஸ்ரீ ஸத்குரு சதாசிவ ப்ரம்மேந்திர சரஸ்வத்யவதூத
சுவாமிகள் அதிஷ்டானம், புதுக்கோட்டை

ஸ்ரீ துர்க்கா ஸூக்த மஹாமந்திர லக்ஷ ஹோமம்

சர்வலோக ஜனனீ ஸ்ரீ புவனேஸ்வரியின் திருவருளைப் பெற்று விளங்கும் புதுக்கோட்டையில் 'ஜட்ஜ்' சுவாமிகள் என்று புகழ் பெற்ற ஸ்ரீ ஸத்குரு சதாசிவ பிரும்மேந்திர சரஸ்வத் யவதூத சுவாமிகளின் அதிஷ்டானத்தில் ஸ்ரீ ஜட்ஜ் சுவாமிகளின் ஜயந்தி மகோத்ஸவத்தில்

உலக க்ஷேமத்தைக் கருதி 11-5-76 செவ்வாய்க்கிழமை ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ துர்க்கா ஸூக்த மஹாமந்திர லக்ஷ ஹோமம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு நக்ஷத்திர மண்டல காலம் 7-6-76 வரை 28 நாட்கள் நடத்த ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த சுவாமிகள் அவர்கள் சங்கல்பித்துள்ளார்கள்.

27 நக்ஷத்திரங்களில் பிறந்துள்ள அனைவருக்கும் சகல பீடா பரிஹாரமாக செய்யப்படும் இந்த ஹோமத்தில் மக்கள் அனைவரும் கலந்துக்கொண்டு துக்க நிவ்ருத்தி பெற்று இன்ப மடையவேண்டுமாகக் கோரப்படுகிறது.

உத்தமர்கள் அனைவரும் நம்பிக்கையும், உறுதியும், உற்சாகமும் கொண்டு ஸ்ரீ ஜய துர்க்கா மந்த்ர ஸஹித ஸ்ரீ வன துர்க்கா மஹா மந்த்ர ஸம்புடித ஸ்ரீ துர்க்கா ஸூக்த லக்ஷ ஹோம கைங்கர்யத்தில் முழு மனதுடன் ஈடுபட்டு, மக்களின் எல்லாக் கொடிய இன்னல்களையும், தீய சக்திகளையும் ஸ்ரீ துர்க்கா தேவியின் திருவருளைக் கொண்டு விரட்டி ஒழித்து, உலக மக்கள் எல்லோருக்கும் எல்லா விதமான இன்பங்களையும் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமென ஸத்ய ஸங்கல்பம் செய்துகொண்டு, மனிதாபிமானத்துடன் லக்ஷ ஹோமத்தை ஸ்ரீ புவனேச்வரியின் ஸந்நிதியில் நடத்திக் கொடுக்க ஊக்கத்துடன் முன் வரவேண்டுமென ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் உள்ளன் புடன் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறார்கள்.

ஹோம பூஜைகளுக்காக ரூ. 18 நன்கொடை அனுப்புபவர்களுக்கு அஷ்ட தசபுஜமஹாலக்ஷ்மி துர்க்கா தேவி உருவமும் ஸ்ரீ புவனேஸ்வரி மாதா திருஉருவமும் கொண்ட வெள்ளி டாலர் ஹோமப் பிரசாதத்துடன் அனுப்பப்படும்.

பின் கண்ட விலாசத்திற்கு பணம் அனுப்பவும்:

எஸ். வைத்யநாத சாஸ்திரிகள்
காரியதரிசி, அதிஷ்டானம், புதுக்கோட்டை


"பிரதிபா"வின் அடுத்த புத்தகம்



தான் பெற்ற இன்பத்தை பிறரும் பெற வேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் கூடியது ''ஆற்றுப்படுத்தல்'' என்ற துறை. சங்க கால இலக்கியங்களில் இத்துறை மிக விசேஷ சிறப்பு கொண்டது.

இந்த ஆற்றுப்படுத்தும் முறையைக் கைக் கொண்டு ''நஜன்'' அவர்கள் எல்லா முருகன் தலங்களுக்கும் அழைத்துச் சென்று முருகனை தரிசனம் செய்து வைத்து அவன் பெருமை, அவன் அடியார்களின் பெருமை, அவன் தலங்களின் பெருமை முதலியவைகளை விவரிக்கிறார்.

'குண்டூசி' பத்திரிகையில் தொடர்ச்சியாக வந்த போதே பல அன்பர்கள், முருகன் தலங்களுக்கு நேரிலேயே சென்று தரிசிப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள்.



விலை ரூ. 3-00

(தபால் செலவு தனி)

விவரங்களுக்கு :

பிரதிபா பிரசுரம்,

25, ஆடம் தெரு, மயிலாப்பூர்,

சென்னை-600 004.

துர்க்கா பரமேஸ்வரி

புதுக்கோட்டை அதிஷ்டானத்தில் நடைபெறும்
துர்க்கா ஸூக்த லக்ஷ ஹோமத்தை யொட்டி
வெளியிடப்படுகிறது.

அன்னை பராசக்தியே
துர்க்கையாகவும், லக்ஷ்மியாகவும், சரஸ்வதியாகவும்
அருள் புரிகிறாள்
இவர்கள் மூவரையும் சேர்த்துவழிபடுவதே

நவராத்திரி

1973	நவராத்திரியில்	அன்னை பராசக்தி
1974	,,	துர்க்கா பரமேஸ்வரி
1975	,,	லக்ஷ்மி கடாக்ஷம்

ஆகிய புத்தகங்களை பிரதிபா பிரசுரம் வெளியிட்டனர்

1976 நவராத்திரியின் போது சரஸ்வதி பற்றி
சகல விவரங்களும் கொண்ட

வாக்தேவி வைபவம்

வெளிவருகிறது

விலை ரூ. 3-00 (தபால் செலவு தனி)

இது வரை வெளியானவை:

1. அன்னை பராசக்தி (2-ம் பதிப்பு) ரூ. 2-50
2. துர்க்கா பரமேஸ்வரி (2-ம் பதிப்பு) ரூ. 3-00
3. லக்ஷ்மி கடாக்ஷம் ரூ. 3-00
4. ஜகந்மாதா லலிதா ரூ. 3-00
5. கருணை காமாக்ஷி ரூ. 3-00
6. குருதத்துவம் (2-ம் பதிப்பு) ரூ. 3-00
7. பாவை உணர்த்தும் தத்துவங்கள் ரூ. 3-00
8. சுவாமியே சரணம் ஐயப்பா ரூ. 3-00
9. மூக பஞ்ச சதி ரூ. 3-00
10. தமிழர் பண்டிகைகளும் பண்பாடும் ரூ. 6-00

(தபால் செலவு தனி)

சமர்ப்பணம்



சிறுவாச்சூர் மதுரகாளி அம்பிகை

சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் மிக வரப்பிரசாதி.
இந்நாட்டிலுள்ள மூலே முடுக்குகளிலுள்ள குடும்பங்கள் பல
அவளைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டுள்ளன.
அவளை அண்டியவர் அனைவருக்குமே அவள் அருள்
கிடைக்கட்டும் எனப் பிரார்த்தித்து
எங்கள் குல தெய்வமான
அவள் பாத கமலங்களில் இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.

—பிரதிபா பிரசுரம

ராகுகால · துர்க்கை · ஸ்துதி

(ஸ்ரீ மங்களா சண்டிகா ஸ்தோத்திரம்)

எப்பேர்ப்பட்ட கஷ்டங்களிலிருந்து விடுபடவும், ஐஸ்வரியங்கள் ஐஸ்வரியமாக நடக்கவும், கலிகாலப் பிரத்யட்ச தெய்வமான துர்க்கையை செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் (மாலை 3—4-30 மணிக்குள்) வழிபடுவது பிரத்யட்ச பலனைத் தருகிறது. ஆலயங்களிலுள்ள துர்க்கை சந்நிதியில் பின் கண்ட சுலோகத்தை சொல்வது நல்லது. இம்மாதிரி ஒன்பது செவ்வாய்க்கிழமை விடாது செய்தால் ஒன்பதாவது செவ்வாய்க்கிழமைக்குள்ளேயே கோரியது நடைபெறுகிறது என்பது பலருடைய அனுபவத்தில் நடந்துள்ளது.

தியானம்

தேவீம் ஷோடஸ வர்ஷியாம் ஸுஸ்திர யௌவனாம் ।
பிம்போஷ்டீம் ஸுததீம் சுத்தாம் ஸரத்பத்ம நிபாநநாம் ॥

ஸ்வேத சம்பக வர்ணாம் ஸுநீலோத்பல லோசநாம் ।
ஜகத்தாத்ரீம் சதாத்ரீம் ச ஸர்வேப்ய: ஸர்வ சம்பதாம் ॥

ஸம்ஸார ஸாகரே கோரே ஜ்யோதிரூபாம் ஸதாபஜே ।
தேவ்யாஸ்ச த்யான மித்யேவம் ஸ்தவநம் ஸ்ருயதாம் முனே ॥

மகா தேவ உவாச

ரக்ஷ ரக்ஷ ஜகந்மாத: தேவி மங்கள சண்டிகே ।
ஹாரிகே விபதாம் ராஸே: ஹர்ஷ மங்கள காரிகே ॥

ஹர்ஷ மங்கள தக்ஷே ச ஹர்ஷ மங்கள தாயிகே ।
சுபே மங்களே தக்ஷே ச சுபே மங்கள சண்டிகே ॥

மங்கள மங்களார்ஹே ச ஸர்வ மங்கள மங்களே ।
ஸதாம் மங்களதே தேவி ஸர்வேஷாம் மங்களாலயே ॥

பூஜ்ய மங்கள வாரே ச மங்களா பீஷ்ட தேவதே ।
பூஜ்யே மங்கள பூபஸ்ய மநு வம்சஸ்ய ஸந்ததம் ॥

மங்களா திஷ்டாத்ரு தேவி மங்களாநாம் ச மங்களே ।
ஸம்ஸார மங்களாதாரே மோக்ஷ மங்கள தாயினி ॥

ஸாரே ச மங்களா தாரே பாரே ச ஸர்வ கர்மணாம் ।
பிரதி மங்கள வா ரே ச பூஜ்யே மங்கல சுகப்பிரதே ॥

பல ஸ்ருதி

ஸ்தோத்ரேண நேந சம்பிஸ்ச ஸ்துத்வா மங்கள சண்டிகாம் ।
பிரதி மங்கள வாரே ராகுகாலே ச பூஜாம் தத்வா கத: சிவ ॥

தேவ்யாஸ்ச மங்கள ஸ்தோத்திரம் ய: ஸ்ருணோதி ஸமாஹித:
தந் மங்களம் பவேத் தஸ்ய நப வேத் தத் மங்களம்
வர்த்ததே புத்ர பௌத்ரஸ்ச மங்களம் ச திநே திநே ॥

KOVILUR ADHEENA
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DT.
PIN: 623 307

துர்க்கா பரமேஸ்வரி

காள்யை, லக்ஷ்ம்யை
சரஸ்வத்யை சண்டிகாயை நமோஸ்துதே ||

* * *

வேதச்ருதி—மஹாபுண்யே பிரஹ்மண்யே
ஜாதவேதஸி | த்வம் பிரஹ்மவித்யா வித்யானும்
மகாநித்ரா சதேஹினும் || ஸாவித்திரீ வேத மாதாச
ததா வேதாந்த உச்யதே | ஸ்துதாஸி த்வம்
மஹாதேவீ விசுத்தேனுந்தராத்மனு ||
ஜயோபவது மே நித்யம் த்வத் ப்ரஸாதாத்ரணுஜிரே |

(இதை ஜபிப்பதால் சத்ரு நாசம் : சகலமும் வெற்றி)

—அர்ஜுனன் பிரார்தித்த துர்க்கா ஸ்துதி.

ஆக்குவது, காப்பது, அழிப்பது இம்முத் தொழில்களையும் தன் முக்குணங்களான சத்வ, ரஜஸ் தமஸங்களால் நடத்துவது அன்னை பராசக்தி. அவளே இம்மூன்று குணங்களைக் கொண்டு மூன்று விதமாக பிரபஞ்சத்தை நடத்தி வரும் பராசக்தியே மகா காளி, மகா லக்ஷ்மி, மகா சரஸ்வதி எனப்படுகிருள். மகா சரஸ்வதி ஞான ரூபம். மகா லக்ஷ்மி கிரியா ரூபம். மகா காளி இச்சா ரூபம். ஆகவே (லக்ஷ்மி 'சத்') (சரஸ்வதி 'சித்') (காளி 'ஆனந்தம்') இம் மூவரும் சேர்ந்து சச்சிதானந்த ரூபிணியாக விளங்குகிருள். இம் மூன்று தத்துவங்களும் ஒன்று சேர்ந்ததே சண்டீ, சாமுண்டா என்பது.

சண்டீ, சாமுண்டா என்ற பதங்கள் ஸ்தூலமாக தெரிவிக்கும் அர்த்தம் 'கோபம் கொண்டவள்', 'சண்ட முண்டரைக் கொன்றவள்' தத்துவார்த்தத்தில் சண்டன், முண்டன் என்ற இரு அரக்கர்களும் தூலா வித்யை மூலாவித்யையை குறிக்கின்றனர். இவ்விருவகையான அவித்தையை ஒழிப்பது ஞான வித்யை.

விக்னத்தை செய்யும் விக்னகாரகரே எப்படி விக்னத்தைப் போக்கும் விக்ன நிவாரகரோ அதுபோல எந்த மாயா சக்தி நம்மை ஆட்டி வைக்கிறதோ அதே சக்திதான் நம்மை இந்த சம்சார மாயை வலையிலிருந்து விடுபடவும் உதவ வேண்டும். அவித்யைக்கு ஆதாரமான மாயையே வித்யைக்கும் ஆதார மானவள். கட்டுவதும் அவள் லீலையே. விடுவிப்பதும் அவள் லீலையே, அவளை வழிபட்டே அவளைக் கடக்கவேண்டும்.

இன்னல் தருவதும், இடுக்கண் தீர்ப்பதும் அவளே!

அம்பிகைக்கு "அவ்யாஜ கருணாமூர்த்தி" என்றொரு பெயர் லலிதா சகஸ்ரநாமத்தில் உண்டு. அதாவது எவ்விதக் காரணமுமின்றி கருணை காட்டுபவள் என்று அர்த்தம்.

ஆனால் உலகத்தில் பெரும்பாலோர் கஷ்டத்தை அனுபவிக் கின்றனர். ஒருவன் வழி தவறிப் போய்க்கொண்டிருந்தான். இருட்டில் தெரியாமல் ஒரு பாழ்க் கிணற்றில் விழுந்துவிட்டான். நல்ல காலம், விழும்போது அவன் கையில்பட்டது ஒரு மரக்கிளை. கிணற்றின் சுவரில் முளைத்திருந்தது. அதைக் கெட்டியாக பிடித்துக் கொண்டான். அக்கிளையும் இவனுடைய உடல் பாரம் தாங்காமல் முறிந்துக்கொண்டிருக்கிறது. அச்சமயத்தில் மேலே தேன் கூட்டிலிருந்து கொட்டிய தேன் இவன் வாயில் விழுந்தது. அதன் சுவையையும் இவித்தான். இம்மாதிரி லோகக் கஷ்டங்களில் நடுநடுவே ஒரு துளி இன்பம் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

"அம்பிகையை கருணாமூர்த்தி என்கிறார்களே! என் கஷ்டத்தை நீக்க அவளுக்குக் கண் இல்லையே" என்று பெரும்பாலோர் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

இது பற்றி காஞ்சி காமகோடி பெரியவர்கள் சொல்லியிருப்ப தாவது: "இம்மாதிரி கஷ்டம் வருவதும் அவள் கருணையே. நாம் இப்போது செய்யும் நல்லதை மட்டும் நினைத்துப் பார்த்து நமக்கு கஷ்டங்கள் வருவது நியாயமா என்று பிரலாபிக்கிறோம். தெய்வத்தை நொந்துக் கொள்கிறோம். ஆனால் எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் நல்லது மட்டும்தானா செய்திருக்கிறோம்?

"இதற்கு முன் ஜன்மத்தில் நாம் என்ன என்ன செய்தோம் என்று நமக்குத் தெரியாது. இந்த விதையைப் போட்டால் இன்ன பயிர்தான் வருமென்பது இறைவன் போட்ட சட்டம். பூர்வ ஜன்மத்தில் செய்த தவறுகளுக்கான பலனை இப்போது அனுபவிக்கிறோம். அதை யெல்லாம் கணக்குப் பார்த்தால் நாம் படுகிறக் கஷ்டம் போதாது என்பதை நாமே ஒப்புக்கொள்வோம்.

"நாம் நல்லது என்று நினைக்கிற சௌக்கியங்களை அம்பிகை தரும்போது மட்டும் கருணை என்கிறோம். நாம் இனிமேல் தவறு செய்யக்கூடாது என்பதை நம்மை நாமே உணர்ந்துக்கொள்ள அம்பிகை இக்கஷ்டங்களைத் தருகிறாள். நல்லது என்று நாம் நினைக்கின்ற சௌக்கியங்களால் பலவிதமான அனர்த்தங்களும் நமக்கே உண்டாகலாம். எனவே நமக்கு சௌக்கியம் தந்து நல்லதைச் செய்கிற கருணையைவிட நம்மையே நல்லவர்களாக்கிக் கொள்ளச் செய்கிற இந்த கஷ்டம் தரும் கருணைதான் விசேஷமானது."

சரி இந்த கஷ்டத்திலிருந்து விடுபட என்ன செய்யவேண்டும்?

ஆபத்து வந்துக்கொண்டே இருக்கிறது. உதவி உடனடியாக தேவை. ஆபத்தில் சிக்கியிருப்பவர் என்ன செய்யவேண்டும்? (ஆப்தி கிம் கரணீயம்)

உலகமாதாவின் இரு பாதங்களையும் நினைக்கவேண்டும். (ஸ்மரணீயம் பதயுகளம் அம்பாயா:)

அந்த நினைப்பு என்ன செய்கிறது? (தத் ஸ்மரணம் கிம் குருதே)

பிரும்மாதி தேவர்களையும்கூட சேவகர்களாக ஆக்கிவிடும். (பிரம்மாதி நபி ச கிங்கரி குருதே)

ஆகவே அம்மாதிரி நேரங்களில் துர்க்கா தேவியை ஸ்தோத்தரிப்பது நல்லது.

துர்க்கா பரமேஸ்வரியின் சாந்த ரூபம் காப்பதற்காகவும், ரௌத்ர ரூபம் துஷ்டர்களை ஒழிப்பதற்காகவும் வழிபடப்படுகிறது. அவள் நம்மிடம் ஜீவ வடிவமாகவும், புத்தியாகவும், பலமாகவும், நித்திரையாகவும், தைரியமாகவும் மற்றும் பலவாகவும் இருக்கிறாள். நம் உடலிலுள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரமாக உள்ளதும் இச் சக்தியே.

இந்த சக்தியின் உதவியினாலேயே பிரும்ம, விஷ்ணு, ருத்ரர்கள் ஆக்கவும், காக்கவும், அழிக்கவுமான தங்கள் பணியைச் செய்து வருகிறார்கள். ராமர் சீதையை நாடியே ராவண சம்ஹாரத்திற்கு புறப்படுகிறார். அதாவது சக்தி பதம் பெற அகங்காரத்தை அழிக்க அவர் முற்படுகிறார் என்பது இதற்குப் பொருள் எனலாம்.

ராவண சாரதி

வங்கமொழியில் கிருத்திவாஸ் என்ற கவி, ராமாயணம் எழுதியிருக்கிறார். கிருத்திவாசரும் சக்தியின் பக்தர்தான். அவர் ராமாயணத்தில் காணப்படுவதாவது: துர்க்கை ராவணனுடைய இஷ்ட தேவதை.

ராவணன் யுத்தகளத்தில் எல்லாமிழந்து பரிதாபமான நிலையை அடைந்தபோது துர்க்கையை நினைத்து ''என்னை எல்லோரும் கைவிட்டுள்ள இச்சமயத்தில் நீ எங்கு போய் விட்டாய்?'' என்று கதறி ஸ்தோத்திரம் செய்தான்.

''பதித பாவனி பாப ஹாரிணி காலிகே
திஞ்ஜன ஜனனீ மாதா ஜகத் பாலிகே
கருணா நயனே கிங்கரனைக் காப்பாய்
எல்லாம் துறந்து உன்னை அழைக்கின்றேன்
தயா மயீ எனப் புராணம் போற்றும்
நீயே சக்தி முக்தி திருப்தியும்
திரிபுவன வியாபகி என்னை ரக்ஷி''

தேவி மனமிரங்கி ராவணனின் சாரதியானுள்.

ராமர் ராவணனுடன் போர் புரியும்போது துர்க்கையை எதிரியின் தேரின்மீது கண்டார். உடனே அவருக்குநாடி தளர்ந்து விட்டது. எப்படியாவது அன்னையின் அருளைப் பெறவேண்டும் என்று காலமில்லா காலத்தில் பூஜை செய்தார். அருள் பிறக்கவில்லை. தனது கண்களையே பிடுங்கி தேவியின் பாதத்தில் வைக்க ராமர் முற்பட்டபோது தேவி மனமிரங்கி அருள் பாலித்தாள். ராவணன் அழிந்தான். இதனால்தான் வடநாட்டில் நவராத்திரியின்போது ராம லீலா கொண்டாடப்படுகிறது.

திரௌபதி—சக்தி உருவம்

திரௌபதி பாண்டவர்கள் பத்தினி என்று புராணம் கூறினாலும் அவள் உலகத்தை காத்து ரட்சித்து அழிக்கும் சக்தி அவள். இவளை சக்தியாகவே சக்தியின் உருவமாகவே பாரதியார் சித்தரித்திருக்கிறார்.

கண்ணன் அருளால் திரௌபதியின் புடவை வளரத் தலைப்பட்டதும்,

> தேவர்கள் பூச்சொரிந்தார்—ஓம்
> ஜெய ஜெய பாரத சக்தி; என்றே
> ...சாவடி மறவ ரெல்லாம்
> ஓம் சக்தி சக்தி சக்தி என்று கரங்குவித்தார்

என்று பாரதி பாடுகிறார்.

பாரத வம்சம் என்ற பாண்டவ குலத்தின் சக்தியாக விளங்கிய பாஞ்சாலி, பாரத சக்தியான இந்தியாவின் அறிகுறி. பாரதியார் பாஞ்சாலியை பாரத சக்தியாகவும் பராசக்தியுமாகக் காண்கிறார்.

அழிப்பதும் அவளே என்பதை உணர்த்த மகா பாரதத்தை திறந்து புரட்டலாம். பாரத யுத்தம் நடைபெறுகிறது. பதினேழாம் நாள் இரவு. பாண்டவர்களும், கண்ணபிரானும் உணவருந்த உட்கார்ந்திருக்கின்றனர். உணவு பரிமாறிய திரௌபதி கண்ணனை கடைக்கண்ணால் நோக்கியதையும், கண்ணன் பதிலுக்கு கண் மூலமே சமிக்ஞை செய்ததையும், அதன்பின் திரௌபதி ஒரு துளி நீரை கண்ணன் முன் ஊற்றியதையும் பீமன் கண்டுவிட்டான். உடனே சந்தேகப் பேய் அவன் மனதில் புகுந்துவிட்டது. ஐந்து புருஷர்கள் இருக்க ஆறாவதாக ஒருவர்மேல் திரௌபதி இஷ்டப் படுகிறாளே என்று அவனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. கண்ணனுக்கு இது தெரிந்துவிட்டது. பீமனும் தன் மனதிலுள்ளதை ஒளித்து வைக்கவில்லை.

கண்ணன் இதைக் கேட்டு சிரித்து "திரௌபதியை உன் மனைவி என்று நீ எண்ணியிருக்கிறாய். பூபாரம் தீர்க்க வந்த

சக்தி தேவி அவள். அவளைக்கொண்டே பாரதப் போரை நடத்தி வருகிறேன். நான் சாரதியாக மட்டுமே இருக்கிறேன். அனைத்தையும் நடத்துபவள் அவளே. வேண்டுமானால் இன்றிரவு அவளைக் கவனி'' என்றார்.

அன்றிரவு பீமன் பக்கத்தில் படுத்திருந்த திரௌபதி, பீமன் நன்றாக தூங்குவதை அறிந்து எழுந்து வெளியே சென்றாள். பீமன் அவளைப் பின் தொடர்ந்தான். கிருஷ்ணனும் பீமனுடன் சேர்ந்துக்கொண்டார்.

குருக்ஷேத்திர போர்க்களத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஒரு உருவம் நிற்பதை பீமனுக்கு கிருஷ்ணன் காட்டினார். இவள் தான் திரௌபதி என்றார். கதிகலங்காத பீமனும் விலவிலத்துப் போனான். ''எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உண்மையை விளக்குங்கள்'' என்று பீமன் கிருஷ்ணனை வேண்டிக்கொண்டான்.

கிருஷ்ணன் விளங்கினார்: ''உணவு அருந்துகையில் தேவி என்னைக் கடைக்கண்ணால் நோக்கினாள். நான் பதிலுக்கு சமிக்ஞை செய்தேன். உடனே அவள் ஒரு துளி நீரை என் முன் ஊற்றினாள். இதற்கென்ன அர்த்தம் தெரியுமா?''

''இந்த பதினேழு நாட்களில் அநேகமாக எல்லாரையும் சம்ஹாரம் செய்துவிட்டேன். நாளை துரியோதனனையும் அழித்து விடுவேன். இந்த ஐவரையும் விட்டு வைப்பதா? இவர்களை சேர்த்து சம்ஹரித்து விடுவதா என்று ஜாடையாக தேவி கேட்டாள். உங்கள் ஐவரையும் காப்பாற்றுவதாக அன்று சகாதேவனிடம் வாக்களித்திருக்கிறேன். அதனைக் குறிப்பாக உணர்த்தவே ஜாடை செய்தேன். அதன்படியே செய்வதை உணர்த்தவே ஒரு துளி தண்ணீர் என் முன் ஊற்றினாள். இதை நீ உணராமால் அவள் கற்புக்கு மாசு கற்பித்தாய். அவள் அக்னியில் பிறந்தவள். பூபாரம் தீர்க்கவே வந்தவள். படுகளத்தில் அவள் பேருருவம் பார்த்தாய். அவள் திரும்பி வந்ததும் அவளிடம் வரம் பெற்றுக்கொள்'' என்றார்.

ஃ ஃ ஃ

ரிக் வேதத்தில் வரும் தேவி ஸூக்தத்திலும் 'ராத்திரி' என்ற பகுதி தலைப்பிலும் தேவியின் சிறப்பியல்புகள் வருணிக்கப்பட்டிருக்கின்றன. யஜுர்வேதத்தில் 'வாஜஸ தேவி சம்ஹிதை'யில் 'அம்பிகா' என்ற பெயர் சூட்டப்படுகிறாள். மார்க்கண்டேய புராணத்தில் சண்டீ காண்டத்தில் ராத்திரீ என்று முடியும் பகுதிகள் சக்தியைக் குறிக்கின்றன. 'மைத்ராயினி சம்ஹிதை' என்கிற பழமையான நூல் அம்பிகை பிரபாவத்தைக் கூறுகிறது. துர்க்கையின் கோலத்தை 'மைத்ரேய உபநிஷதம்' வருணிக்கிறது. ஹிரண்ய கேசி கிருஹ்ய சூத்திரம், பவானி என்னும் தேவியை

அசிமுகப்பந்தி அவளுக்குப் பலி நிவேதனங்களில் பிரியமுண்டு என்கிறது.

சங்காயன கௌரத ஸூத்ரம், பத்ரகாளி, மாகாளி, என்னும் வடிவங்களின் லட்சணங்களை விளக்குகிறது. அதர்வண வேதத்தில் அன்னை வழிபாட்டைப் பற்றித் தகவல்கள் உள்ளன. கேநோப நிஷதும் அன்னையின் அருட்குணங்களை விவரிக்கிறது. வாஜஸ நேய உபநிஷதும் சக்தியின் துர்க்கை வடிவை காயத்ரி என்கிறது. அந்நூல் கன்னியாகுமரிதான் காத்தியாயனி என்கிறது. நாராயண உபநிஷத்தும், தேவி உபநிஷத்தும் சக்தியின் பெருமைகளைச் சாற்றுகின்றன.

துர்க்கை - சொரூபம்

பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்கு சக்தியின் என்னென்னப் பகுதிகள் என்னென்னப் பாங்கில் அமைந்திருக்க வேண்டும் என்பதை துர்க்கா தேவியின் சொரூபம் நன்கு விளக்குகிறது.

எந்தவிதமான ஆபத்துகளையும் தீர்க்கக் கூடியவள் துர்க்கை. துர்க்கம் என்றால் அகழி. அகழி சத்ருக்களை நெருக்கவிடாமல் எப்படி தடுக்கிறதோ அப்படி தடுப்பவள் துர்க்கை. முன் காலத்தில் கோட்டையைச் சுற்றி ஜல துர்க்கம், கிரி துர்க்கம், வன துர்க்கம் முதலியவைகளை அமைத்திருந்தனர். துர்க்கையை கௌரீ, லக்ஷ்மி, சரஸ்வதி இவர்களின் சமஷ்டி என்பர்.

துர்க்கையின் உருவத்திற்கு முன்னோர்கள் செய்துள்ள வியாக்யானம்:

துர்க்கை-பரப்பிரும்மம், சூலம்-ஞானம், சிங்கமும் மகிஷமும்-காமக் குரோதங்கள் மூன்று கண்கள்-மூன்று காலங்கள், லக்ஷ்மி, சரஸ்வதி, விநாயகர்,முருகன் நான்குவித புருஷார்த்தங்கள். தேவி பூஜை செய்து அருள் பெற்றவன் புருஷார்த்தங்களை சாதிப்பதுடன் ஞானத்தையும் பெறுகிறான். காம குரோதங்களையும் வென்று திரிபுரத்தை எரித்த பரமனையும் அறிந்துகொள்கிறான் என்பதே துர்க்கா பூஜையில் அடங்கிய பொருள்.

காளிகா யந்திரம்

காளியின் 15 சக்திகள் 15 மூலைகளிலும், பிராம்மி முதலிய அஷ்ட சக்திகள் 8 தளங்களிலும் 8 பைரவர்களும் தளங்களின் முனைகளிலும் பத்து திசைகளில் பத்து திக்பாலர்களும் நான்கு மூலைகளில் விஷ்ணு, பிரும்மா, ருத்திரன், சதாசிவன் ஆகியோர்களும் இடம் பெற்றுள்ளனர். பிந்துவில் சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக மகாதேவி விளங்குகிறாள்.

காலசொரூபிணி காளி 2

கொடிய வெஞ்சினக் காளி குவலய முழுதும்
முடிவு செய்வள் என்று எழுந்த நாள் முளரியோன் முதலோர்
அடைய அஞ்சலும் அவள் செருக்கு அறிவுற
அழியாக் கடவுள் ஆடலால்
வென்றதோர் வடவரைக் கண்டாள். —கந்த புராணம்

கோடானுகோடி கற்பங்கள் அடங்கப் பெற்ற காலத்தையே அவள் எடுத்து விழுங்கி தன்னகத்து அடக்கின்றமையால் அவள் வடமொழியில் காலீ என்றும், காலிகா என்றும், அழைக்கப் படுகிருள். காலீ என்னும் வார்த்தை தென் மொழியில் காளி எனத் திரிவுபட்டது. அவள் கால சொரூபிணியாக இருந்து கொண்டு பாரெங்கும் பெரும் மாறுதல்களை விளைவித்து வருகிருள்.

காளி நீல நிறமுடையவள். எங்கும் பரந்து வியாபகமாக இருக்கும் பொருள் நீலநிறம் எய்துதல் இயல்பு. கையில் கொஞ்சம் ஜலத்தை எடுத்துப் பார்த்தால் அது நிறமற்றதாக இருக்கிறது. ஆனல் அதே ஜலம் பரந்த கடலில் நீல நிறமுள்ளது போல் தோன்றுகிறது. அன்னை பராசக்தி நீல நிறம் உடையவளாக இருப்பது அவள் எங்கும் நிறைந்த பொருள் என்பதை விளக்குகிறது. எல்லா திக்குகளிலும் அவள் நிறைந்திருக்கிருள்.

பத்து திக்குகளில் அவள் பரந்திருப்பதால் திக அம்பரி (திகம்பரி) என்று பெயர். திக்குகளையே ஆடையாக அணிந்தவள் என்றும் பெயர். துண்டித்த கைகளை உடையாக அணிந்திருப்பது மக்கள் செய்யும் வினையனைத்திற்கும் சக்தியாயிருப்பவள் அவள் ஒருத்தியே என்பதை உணர்த்துகிறது.

வெட்டிய தலைகள் கோர்த்த மாலை—முண்டமாலினி—ஜீவப் பிராணிகள் அவளிடமிருந்து தோன்றி அவளிடமே மறைகின்றன என்பதன் அறிகுறி.

சித்தி எல்லாம் பெற்ருலும் மனிதனது துன்பத்திற்கு முடிவில்லை என்பதை நினைவூட்டுவதற்காக காளிதேவியின் கையில் வாள் விளங்குகிறது. அத்துன்ப வாள் ஓயாமல் வேலை செய்துக் கொண்டிருக்கிறது என்பதை அதில் படிந்துள்ள ரத்தம் காட்டுகிறது. ஆணவத்தோடு மனிதன் செய்யும் காரியங்களை எல்லாம் அவள் காலக்கிரமத்தில் பாழ்படுத்துகிருள்.

இயற்கை நடைமுறைக்கு விரோதமான மாவிடப் பிரயத்தனம் பலிக்காது. அவ்வாறு முயலும் மனிதன் இயற்கைத் தாயின் வாளுக்குப் பலியாவான் என்பதை மற்றொரு கையிலுள்ள வெட்டுண்ட தலை காட்டுகிறது.

காளிகா தேவியை வணங்க விரும்புபவன் வீரனாக இருக்க வேண்டும். பயங்கொள்ளிகளுக்கு அவள் தன் இயல்பைக் காட்ட இசையாள். அவள் மரண ஸ்வரூபிணி. க்ஷணந்தோறும் அவள் சம்ஹாரத் தொழிலையே செய்துகொண்டிருக்கிறாள் (அவளுடைய நீட்டிய நாக்கு இதைக் காட்டுகிறது.)

தேவி தாண்டவமிடும் இடம் சுடுகாடு. மனிதன் தன் மனதை சுடுகாடாக்கிக்கொள்ளவேண்டும். ஆசை, காமம், வெகுளி எல்லாம் பஸ்மமாக வேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

மகான் அரவிந்தர் அன்னை காளி பற்றி எழுதியிருப்பதாவது:

''அன்னை காளி இறைவனைப் பகைத்து நிற்பவர்களுக்கு குரூரமாயும் ஆபத்தாயும் இருப்பாள். பரிபக்குவம் அடையாத வற்றை அவள் சகிக்கவே மாட்டாள். துரோகம், பொய், தூவேஷம் ஆகியவற்றின் மீது கடும் சினம் கொள்வாள். இறைவன் பணியில் காட்டும் அசட்டையையும் அலட்சியத்தையும் மந்த புத்தியையும் அவள் பொறுக்கவே மாட்டாள்.

அவளது வன்முறைப் போலவே அவளது அன்பும் தீவிரமானது. அவளது உள்ளத்தில் ஆழ்ந்த பாசமும் பட்சமும் உண்டு. அவளது சினம் பகைவர்களுக்குப் பயங்கரமாக இருக்கலாம். அழுத்தத்தின் மும்முரம் பலவீனர்களுக்கும் பயங்கொள்ளி களுக்கும் துன்பம் தருவதாக இருக்கலாம். ஆனால் பெரியோர் களும் ஞானிகளும் அவளிடம் அன்பு செலுத்துவர். ஏனெனில் இவள் கொடுக்கும் அடிகளே அவர்களின் வளைவுகளையும் கோணல் களையும் நிமிர்த்தி நேராக்குகின்றன.

அவள் மட்டும் இல்லாவிடின் ஒரே நாளில் ஆகக்கூடியது பல நூற்றாண்டுகள் பிடிக்கும்.'' (''அன்னை'' என்ற நூலில் அரவிந்தர்)

பிற்பநூல் காளியை இரண்டு கைகள் முதல் பதினெட்டுக் கைகளுடன் ஆயுதங்கள் தாங்கி வீற்றிருப்பதாக வருணிக்கின்றன. தேவியினுடைய ஒரு கலை சிவபெருமானுடைய கழுத்திலுள்ள நச்சுக் கறைபடிந்த நெஞ்சின் வழியாக வெளிப்பட்டதால் காளி என்ற பெயரைப் பெற்றது என்றும் கூறப்படுகிறது.

தக்ஷன் வேள்வியை அழிப்பதற்காக தேவியின் சினம் காளியாகத் தோன்றியதாகவும் கூறுவர்.

வைகானஸ த்யான முக்தாவலி என்ற நூலின்படி மூன்றுவது பிராகாரத்தில் கிழக்கு வாயிலில் ஈசானியத்தில் மகா காளி அமைக்கப்பட வேண்டும். சப்தமாதாக்களில் இவளுடையது ஏழாவது ஸ்தானம்.

காளி அவதாரம்

வைகுண்ட வாசியான ஸ்ரீ நாராயணன் கம்ஸாதிகளான துஷ்டர்களை வதம் செய்யவேண்டி பூவுலகில் அவதாரம் செய்தார். அப்போது சக்தி இல்லாத கிருஷ்ணனால் யாதும் செய்ய முடியாது போய்விடும். ஆகவே அவருக்கு உதவியாக சக்தி பலவிதமாக அவதரித்தாள். அதில் இந்த காளி அவதாரமும் ஒன்று. தேவகிக்கு ஏழாவது கர்ப்பம் தரித்தது. பகவான் தன் யோகமாயையை அழைத்து அவளிடம் தேவகியின் வயிற்றிலுள்ள ஆதிசேஷனின் அம்சமான கர்ப்பத்தை எடுத்துக் கோகுலம் சென்று அங்குள்ள வாசுதேவனின் மனைவி ரோகிணி கர்ப்பத்தில் வைத்து அங்குள்ள யசோதையினிடத்தில் நீ பிறப்பாயாக என்று கூறியதாக பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவள் யசோதை வயிற்றில் எப்போது பிறந்தாளோ அப்போது கிருஷ்ணனும் தேவகியிடம் அவதரித்தார். குழந்தைகளை மாற்ற வசுதேவர் கண்ணனை எடுத்துக்கொண்டு கோகுலம் வந்து கண்ணனை, பெண் குழந்தை பக்கத்தில் கிடத்தினார். கண்ணன் அப்பெண் குழந்தையைப் பார்த்து, உனக்கு ஒரு ஆபத்து வரப்போகிறது என்று கண்ணை சிமிட்டினானாம். அப்பெண் குழந்தை கண்ணனைப் பார்த்து, உனக்கு பத்து ஆபத்து வரக் காத்திருக்கிறது என்று பத்து தடவை கண் சிமிட்டியதாம்.

வசுதேவர் பெண் குழந்தையை எடுத்து வந்து கம்ஸனிடம் கொடுத்தார். கம்ஸன் அக்குழந்தையை வெட்ட எத்தனித்தான். அக்குழந்தை திடீரென்று ஆகாயத்தில் பாய்ந்து காளியாக காட்சி அளித்தது. (கம்ஸன் ஒருவன்தான் தேவியின் இரு கால்களையும் சேர்த்து பிடிக்கும் பாக்கியம் பெற்றவன்.)

தர்மபுத்திரர் வனவாசம் முடிந்து அக்ஞாதவாசம் மேற்கொள்ளும்போது துர்க்கா தேவியை மனதில் தியானித்து 27 ஸ்தோத்திரங்களால் பிரார்த்திக்கிறார். இதற்கு ''துர்க்கா நக்ஷத்திர மாலிகா ஸ்துதி'' என்று பெயர். அதில் தர்மர் இந்த காளி அவதாரத்தைக் குறிப்பிடுகிறார்.

யசோதா கர்ப்ப சம்பூதாம் நாராயண வரப் பிரியாம்
நந்த கோப குலேஜாதாம் மங்கள்யாம் குலவர்த்தினீம்

நாராயணனாகிய விஷ்ணுவின் அவதாரங்களில் தானும் தோன்றி அவருக்கு உதவியதாலும் அந்தந்த அவதாரங்களுக்கேற்ப சக்தியும் அவதரித்ததாலும் 'நாராயண வரப்பிரியாம்' என்றார்.

கம்ஸவித்ராவண கரீம் அஸுராஸுரம் க்ஷயம்கரீம்
ஸௌதட விடுக்ஷிப்யாம் ஆகாசம் பிரதிகாமினீம்

எப்போது காளி கம்ஸனிடமிருந்து ஆகாயத்தில் பாய்ந்தாளோ அச்சமயமே கம்ஸனைப் பூண்டோடு ஒழிக்க சங்கல்பம் கட்டிவிட்டாள். பொதுவாக அசுரர்களின் வம்சத்தையே கிருஷ்ணனைக் கொண்டு அழித்து விட்டாள்.

வாசுதேவஸ்ய பகிநீம் திவ்யமால்ய விபூஷிதாம்
திவ்யாம் பரதராம் தேவீம் கட்க கேடய தாரிணீம்.

துர்க்கை பிறந்த நந்தகுலத்தில் கிருஷ்ணன் வளர்ந்தமையால் கண்ணனின் சகோதரியாக விளங்கினாள்.

பவாநியும் காளியே

ஸ்காந்த புராணத்தில் சக்தி வழிபாடு பற்றிய ஒரு வரலாறு காணப்படுகிறது. சுகேது என்ற (குடிகள் நலனையே பெரிதென மதித்து வந்த) மன்னர் போரில் தோற்று தன் மனைவியுடன் தப்பி ஓட நேர்ந்தது. உடல் நோயுற்று நகர முடியாத நிலை ஏற்பட்ட போது அவன் மனைவி அவனை சுமந்து சென்றாள். வழியில் தென்பட்ட ஆங்கிரஸ முனிவரிடம் தன் வரலாற்றைக் கூறினாள். அவர் அவளை பஞ்சவடி தீரத்திற்குச் செல்ல வழி காட்டி அங்கு துர்க்கா பூஜை செய்து வரும்படி யோசனை கூறினார். இதன்படி பத்து நாட்கள் பவானி பூஜை செய்து சகல கஷ்டங்களும் நீங்கி, அரசையும் மீண்டும் பெற அருள் பிறந்தது. மராட்டியர்கள் இன்னும் பவானியைப் பூஜை செய்யக் காணலாம். சிவாஜியின் இஷ்ட தேவதை பவானிதான். மகாராஷ்டிரத்தில் துர்க்காபூரில் இத்தேவி கோயில் கொண்டிருக்கிறாள்.

கொற்றவை வழிபாடு

ஒரிந்து சமயத்தில் சக்தி வழிபாடு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. லோக மாதாவான பராசக்தியே பல்வேறு சக்தி களாகத் தோன்றி உயிர்களை செம்மையாக இயக்கி வருகிறாள். அம்முறைப்படி தன்னை பக்தியோடு வழி படுபவருக்கு வெற்றி அளிக்கும் சக்தியாக விளங்குபவள் கொற்றவை. இக் கொற்றவை வழிபாடு பற்றி சங்க நூல்களில் பல குறிப்புகள் உள்ளன.

தங்களைப் பிரிந்து சென்ற கணவன்மார்கள் விரைவாக வீடு திரும்பும் பொருட்டு பெண்கள் கொற்றவையை வழிபட்டு விரதம் இருப்பார்கள். ஆனால் ஒருத்தி தன் கணவன் குறித்த காலத்தில் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் மற்றப் பெண்டிரைப்போன்று கொற்றவையை வழிபடவில்லை. இந் நிலையை அவள் தன் தோழியிடம் பின்வருமாறு தெரிவிக்கிறாள்.

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM நூல் நிலையம்

விடர்முகை அடுக்கடுந்து விறல்கெழு சூலிக்கு
கடனும் பூஜும் கைந்நூல் யாவாம்
(கடன்-பலிக்கடன்; கைந்நூல்-கங்கணம்.) —குறுந்தொகை

திருமுருகாற்றுப் படையிலும் 'வெற்றிவேற் போர் கொற்றவைச் சிறுவ' என்று வருகிறது. பராசக்தியின் அம்சமே கொற்றவை ஆதலின் முருகன் 'கொற்றவைச் சிறுவ' என்று அழைக்கப்படுகிறான்.

இந்து மத வழிபாட்டு ரீதியில் சக்தி தேவியான துர்க்கையைப் பூஜிக்கும் வழக்கம் எப்போது முதல் வழக்கத்திற்கு வந்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சரித்திர காலத்திற்கு முன்னா தாகவே பல நாடுகளில் சக்தி தேவியை மலைத் தெய்வமாகத் தொழுது வந்திருக்கின்றனர். மகாபாரத யுத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு துர்க்கையை தியானிக்கும்படி உபதேசம் செய்கிறார். பழைய இலக்கியங்கள் பலவற்றில் துர்க்கையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆதி சங்கரரின் 'அமரு சதக'த்திலும், பாண மகா கவியின் 'காதம்பரி'யிலும், 'சண்டீ சதக'த்திலும், சோமதேவரின் 'கதா சரிதசாகரத்'திலும், துர்க்கையைப்பற்றி ஏராளமாகக் கூறப்பட்டுள்ளன.

துர்க்காதேவி தாங்க முடியாத துன்பங்களையும் தாங்க வைப்பதால் அம்பிகைக்கு துர்க்கை என்ற பெயர் ஏற்பட்டது. தேவர்களை கஷ்டங்களில் இருந்தும் சத்ரு பயத்திலிருந்தும் காப்பாற்றியதால் 'துர்க்கா' எனப் பெயர் பெற்றாள்.

அஷ்ட காளிகள்

ஸ்ரீ பத்ரகாளி	ஸ்ரீ காலராத்திரி
ஸ்ரீ மகா காளி	ஸ்ரீ காளி
ஸ்ரீ சரசண்டிகை	ஸ்ரீ சாமுண்டி
ஸ்ரீ பைரவி	ஸ்ரீ சர்வமயமுண்டி

காளிகா தாண்டவம்

காளியும் சிவனும் போட்டி போட்டுக்கொண்டு ஆடின காளிகா தாண்டவம் முடிவில் ஊர்த்துவ தாண்டவமாகிவிடுகிறது. ஒரு காலைத் தரையில் ஊன்றி, மற்றொரு காலை ஆகாயம் பார்த்து தூக்கி இறைவன் ஆட நேர்ந்ததேன்? இது ஒரு சுவாரஸ்யமான வரலாறு. இவ் வரலாறுடன் சம்பந்தப்பட்டத் தலம் திருவாலங்காடு. அங்கு அவளுக்குத் தனி கோயிலும் இருக்கிறது. உலகம் முழுவதையுமே தன்னால் முடிவு செய்யக்கூடும் என்கிற அகங்காரம் அவள் மனதில் எழுகிறது. அவள் நன்றாக ஆடவும்

வல்லவள். அந்த இருமாப்பு வேறு. இவள் கர்வத்தை அடக்க இறைவன் ஆலங்காட்டுக்கு வருகிறார். ஆடல் போட்டிக்கு அன்னை காளியை அழைக்கிறார். அவளும் இசைகிறாள். நடனப் போட்டி மிகக் கடுமையாக இருந்தது. இறைவன் ஆடும் ஒவ்வொரு நடனத்தையும் காளியும் சளைக்காது ஆடுகிறாள். ஆட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது. போட்டியும் மும்முரமாகிக் கொண்டே வருகிறது. வெற்றி கிட்டக்காணோம் இறைவனுக்கு.

இந்த நிலையில் இறைவன் வலது காதிலே உள்ள குழை நழுவி விழுகிறது கீழே. இதற்காக நடனத்தை நிறுத்தாமல் அப்படியே அந்தக் குழையை தனது கால் விரலால் எடுத்து, அக்காலை அப்படியே அநாயாஸமாக உயர்த்தி லாவகமாக குழையை வலது காதிலே பொருத்திவிடுகிறார். ஒரு காலை ஊன்றி ஒரு காலை மேல் நோக்கி தூக்குவது பெண்கள் செய்ய முடியுமா? முடியாமல் வெட்கித் தலை குனிகிறாள் காளி. இப்படிக் காளியை வெல்ல ஆடிய ஆட்டமே ஊர்த்துவத் தாண்டவம்.

மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில் உள் பிரகாரத்தில் காளியும் இறைவனும் நடனப் போட்டியில் தத்ரூபம் ஈடுபட்டிருப்பது போலத் தோற்றமளிப்பதைக் காணலாம். காளியின் முகத்தில் கோபமும், இறைவன் முகத்தில் சாந்தமும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை. தென்காசி விசுவநாதர் கோவிலிலும் இந்த ஆடும் காளியையும், ஊர்த்துவ தாண்டவரையும் தரிசிக்கலாம்.

காளியின் பதமே கைவல்யம்

''காசிக்குப் போய்தான் என்ன பயன். காளியின் பதமே கைவல்யம்''. இப்படி பாடியவர் வங்கத்தில் வாழ்ந்த காளி பக்தர். ''நானே அம்பாளிடம் போய்ச் சேர்ந்து விடுவேன்'' என்று சொல்லி பூஜிக்கப்பட்ட காளி பிரதிமையுடன் கங்கைக்குள் இறங்கி ஜல சமாதி அடைந்தவர்.

உருவக் கடலில் மூழ்கியே நான்
அருவமாமணி தனைக் கண்டேன்

என்கிற இவரது பாடலைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அடிக்கடி பாடுவார். அன்னைக் காளியிடம் ஈடுபாடுகொண்டு மனமுருகும் பண்பை வங்காளிகளிடையே வளர்த்தவை இவருடைய பாடல்களே. இவர் காளி மீது பாடிய பாட்டைக் கேட்டுக் நவாப் சிராஜ் உத்தௌலா மனமுருகி இவரைப் பாராட்டிக் கௌரவித்திருக்கிறான்.

ஸ்ரீ சாமுண்டேஸ்வரி

தேவி! உன் உருவைப் பலவாக்கி பல வடிவங் கொண்டு தர்ம மார்க்கத்தைப் பகைக்கும் கொடிய அசுரர்களை வதம் செய்துள்ளாய். உன்னையன்றி, அம்பிகே! வேறு யாரால் இவ்விதம் செய்தருள இயலும்?

—ஸ்ரீ துர்க்கா சப்தசதி

கொழுத்த எருமை ஒன்று சேற்றில் விழுந்து புரண்டுக் கொண்டிருக்கிறது.

''என்ன இவ்வளவு மந்தமாகப் படுத்திருக்கிறதே இது'' என்கிறுன் சீடன்.

''அது மஹிஷம். அப்படித்தான் இருக்கும்'' என்கிறுர் குரு.

திடீரென்று எருமை எழுந்து கண் மண் தெரியாமல் ஓட ஆரம்பிக்கிறது. செடி கொடிகளை மிதித்துக்கொண்டும் பயிர் பச்சைகளைப் பாழாக்கிக்கொண்டும் ஓடுகிறது.

''என்ன இப்படி வெறி பிடித்தாற்போல ஓடுகிறதே'' என்கிறுன் சீடன்.

''அப்போது அப்பிராணிக்குப் பிரும்மானந்தம் சேற்றில்; இப்போது இந்த நாசகாரியத்திலே'' என்கிறுர் குரு.

வழியில் தென்பட்டவர்கள் சிலரை அந்த எருமை முட்டித் தள்ளி விடுகிறது. சிலர் அதனிடம் அகப்படாமல் தப்பி ஓடுகிறுர்கள். ஐயோ பயிர் பச்சைகள் நாசமாகிறதே! இப்படி ஓடுவதால் பிறருக்கு அபாயம் ஏற்படுகிறதே என்று எல்லோரும் கவலைப்பட்டாலும் ஒருவராவது அதை தடுத்து அடக்க முன் வரவில்லை.

அந்த வயற்காடுகளின் மூன்று உரிமையாளர்களும் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறுர்கள். ஆனல் மூன்று பெண்கள் அந்த எருமையை அடக்க முயல்கிறுர்கள்.

அவர்களில் ஒருத்தி மற்ற இருவரின் ஆற்றலையும் தானே ஆவேசித்துக்கொண்டவள் போல காட்டெருமையை அடக்கி சமாளித்துவிட்டாள்.

''அவள் குழத்தைக் குட்டிக்காரி. அவைகளுக்கு ஆபத்து வருவதை அவள் பார்த்துக்கொண்டிருப்பாளா?'' என்கிறுர் குரு,

இந்த குரு வியாசர்தான். இந்த சம்பவத்தை ஒரு கதையாக சொல்கிறார்.

காட்டெருமைபோல கொழுந்து மந்த புத்தியோடு சேற்றிலே கொழுந்து நின்ற மகிஷாசுரன் அறியாமையின் சொரூபமாகவே இருந்தான். அறிஞர்களுக்கும் சாதுக்களுக்கும் பல வகையிலும் அல்லல் விளைவிக்க வேண்டும் என்ற ஆத்திரம் மகிஷாசுரனின் மந்த கதியை துரித கதியாக்கிவிட்டது.

மகிஷாசுரனுக்கு அஞ்சி மும்மூர்த்திகளும் கூட மக்களை கைவிடத் துணிந்தனர். தந்தை கைவிட்டாலும் தாயுள்ளம் கைவிடுமா? ஆண்மை கைவிட்டும் பெண்மை—தாய்மை—கை விடவில்லை. மூவர் தேவியரும் கலந்து ஓருருவமானார்கள். மகிஷா சுரன் என்ற அறியாமையை வென்ற அன்னை அறிவின் ஸ்வரூபமே. அழகின் ஸ்வரூபமும் அவளே; அருளின் ஸ்வரூபமும் அவளே. தேவியிடம் காணப்படும் ஒரு அற்புத மகிமை அவளிடம் சௌந்தர்யம் பயங்கரம் இரண்டுமே ஒன்றிக் காணப்படுவதாகும். இவளே மகிஷாசுரமர்த்தினி* எனப் பெயர் பெற்றாள்.

துர்க்கா சப்த சதியின் உத்தர பாகத்தில் பரதேவதை மூன்று ரூபங்களில் மகா லக்ஷ்மியாகவும், மகா காளியாகவும் மகா சரஸ்வதியாகவும் தோன்றுகிறாள் எனக் கூறப்படுகிறது. தூய்மைத் தத்துவமான சத்துவம், வீரியத் தத்துவமான ராஜஸம், அஞ்ஞானத் தத்துவமான தாமஸம் மூன்றையும் ஆதிசக்தியான மகாலக்ஷ்மியிடம் காண்கிறோம். தமோ குணத்திற்கு மகா காளியும், சத்வ குணத்திற்கு மகா சரஸ்வதியும் பூர்ணமாக உருவகிக்கிறார்கள்.

இந்த சப்த சதீ பிறந்த இடம் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டாமா?

இமயமலைச்சாரலில் சரயூ நதியும் கோமதி நதியும் சேரும் பாகேஸ்வரர் என்ற இடத்தில் நதியின் நடுவில் ஒரு திட்டு இருக்கிறது. இதை மார்க்கண்ட சிலா என்று அழைக்கி றார்கள். மார்க்கண்ட ரிஷி இங்கு அமர்ந்துதான் 'சப்த சதி'யை இயற்றினாராம். இதில் அமர்ந்து சப்த சதீ பாராயணம் செய்வது மிக விசேஷம் எனக் கூறப்படுகிறது.

சாமுண்டியின் உருவ லட்சணம் ஒரு முகம், மூன்று கண்கள், எட்டுக் கைகள். ஜ்வாலா கேசம் உள்ளவள். பயங்கர வடிவினள்.

காசியில் காளிக் கோட்டத்திலுள்ள காளி இதற்கு உதாரணம். சண்ட முண்ட சம்ஹாரத்தினால் சாமுண்டி என்ற

---

* தேவியின் இவ்வடச் சொற் பெயரை திவாகர நிகண்டு ''மகிடற் காய்ந்தாள்'' என்று தமிழாக்கம் செய்திருக்கிறது. தேவாரத்தில் ''மகிடற் செற்று நிகழ் நீலி'' என்று தேவி குறிப்பிடப்படுகிறாள்.

பெயர் ஏற்பட்டது. மூலாதார [illegible] சக்திகளை பேதிக்கக்கூடிய யோக சக்தியே சாமு[illegible] தத்துவ விளக்கமாகும்.

தெய்வ அன்னை ஸ்ரீ சாமுண்டேசுவரியின் மகத்தான சரிதம் மார்க்கண்டேய புராணத்தில் அற்புதமாக வர்ணிக்கப்படுகிறது.

முந்தைய கல்பம் ஒன்றில் சும்பன் நிசும்பன் என்று இரு அசுர சகோதரர்கள் இருந்தனர். இவர்கள் வரம் பெற்று தேவர்களைக் கொடுமைப்படுத்தினர். தேவர்கள் அகிலாண்ட ஜனனியாகிய அம்பிகையை துதித்தார்கள். அம்பிகையின் திருவுருவிலிருந்து ஒரு எழில் வடிவம் வெளிப்பட்டது. பரம்பொருளின் இணையற்ற சௌந்தரியம் பொருந்திய பெண் உருவே அவ்வடிவம். அவளே பரம்பொருளின் திவ்ய சக்தி.

சும்பனும் நிசும்பனும் இத்தேவியை மணக்க ஆசைப்பட்டு தூது அனுப்பினர். ''எனக்கு உங்களில் ஒருவரை மணக்க ஆட்சேபமில்லை. ஆனால் என்னை போரில் வெல்பவரைத்தான் மணப்பது என்று பிரதிக்ஞை செய்து விட்டேனே'' என்று சொல்லியனுப்பினாள் அம்பிகை.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட சும்ப-நிசும்பர்கள், கேவலம் ஒரு பெண்பிள்ளை போருக்கு அழைப்பதாவது என்றே எண்ணினர். அவளை நயமாக அழைத்து வர முடியாவிட்டால், பலவந்தமாகப் பற்றி இழுத்து வருவதற்காக தூம்ரலோசனன் என்ற வீரனை அனுப்பி வைத்தனர். அவன் தேவியைப் பலாத்காரமாகப் பற்றி இழுத்து வர முயன்றான். அம்பிகை தனது ஹுங்காரத்தினால் அவனை பஸ்மமாக்கினாள். அசுர மன்னன், சண்டன், முண்டன் இருவரையும் தருவித்து, தேவியைக் கைது செய்து கொண்டு வருவதற்காக அவர்களை அனுப்பினான்.

இமய பர்வதத்தின் பொன் போன்ற சிகரத்தில் ஜகன்மாதா முறுவல் பூத்த முகத்துடன் சிம்மத்தின்மீது ஆரோகணித்திருந்த போது சண்ட முண்டர்கள் அவளைச் சென்றடைந்தனர். அவள்மீது யுத்தம் தொடங்கினர். சரமாரி பொழிந்தனர். அன்னைக்கும் கோபம் மூண்டது. தேவி கோபம் கொண்ட நிலையில் அவளின் திரு நெற்றித் தலத்திலிருந்து காளியன்னை வெளிப்பட்டாள். சண்ட முண்டர்களுக்கும் காளிக்கும் பயங்கரமான போர் நடந்தது. சண்டனின் சிரத்தைக் கத்தியால் கண்டனம் செய்த காளி முண்டனையும் சம்ஹாரம் செய்தாள். அசுர கணங்கள் களத்தை விட்டு வெருண்டோடின. சண்டனின் சிரத்தையும் முண்டனின் முண்டத்தையும் தன் வெற்றிக்கு அடையாளமாகத் தேவியிடம் காளியன்னை சமர்ப்பித்தாள். தேவி மகிழ்ந்தாள். 'சண்டனையும் முண்டனையும் நீ சம்ஹாரம் செய்ததால் உலகில் சாமுண்டா எனப் பிரசித்தி பெறப் போகிறாய்' என இனிமையாகக் கூறினாள். மகிமை பொருந்திய சாமுண்டேசுவரியின் அவதார வரலாறு இதுவே.

கும்பனும் நிசும்பனும் தமது நம்பிக்கைக்குகந்த மகா விரர்களான சண்ட முண்டர்களின் வதத்தைப் பற்றிக் கேள்வியுற்றனர். தாங்களே நேரில் சென்று அவளுடன் போரிட்டு வெல்ல வேண்டுமென முடிவு செய்தனர். அசுரப் படைகளுக்கும் தேவியின் மாத்ருகா சேனைகளுக்குமிடையே அதிகோரமான யுத்தம் நிகழ்ந்தது. ரக்தபீஜன் என்ற அசாதாரண சக்தி பெற்ற அசுரன் தெய்வ சேனையிடை புயல் வீசுவதுபோல் போர் செய்து யுத்த பயங்கரத்தை உக்கிரமாக்கினான். அவனது உதிரத்தில் ஒரு சொட்டு நிலத்தில் விழுந்தாலும் உடனே அதனின்று அவனை நிகர்த்த ஒரு வீரன் தோன்றி தேவியின் படைகளைத் தாக்கினான். அசுரர்களின் கையோங்கி, யுத்தம் சகிக்காமல் நடந்தது. அன்னையின் சேனை பலம் குன்றி நின்றது. நிலைமையின் தீவிரத்தைத் தேவி எண்ணிப் பார்த்தாள். சாமுண்டேசுவரியை அழைத்தாள். 'துஷ்டனாகிய ரக்தபீஜனை நான் அஸ்திரங்களால் தாக்கி உதிரம் பெருகச் செய்கிறேன். உதிரத் துளிகள் நிலத்தில் விழுமுன் நீ அவற்றைப் பருகிவிட வேண்டும்' என்று உத்தரவிட்டாள். சாமுண்டா அவ்விதமே செய்தாள். விரைவிலேயே ரக்தபீஜனும் அவன் தோற்றுவித்த அசுர கணங்களும் மடிந்தனர்.

அசுர அதிபர்களாகிய கும்ப, நிசும்பர்களே இதன்பின் போரில் ஈடுபட நேர்ந்தது. தேவி முதலில் நிசும்பனை வதம் செய்துவிட்டுப் பின்னர் கும்பனைச் சூலாயுதத்தால் துளைத்து யமாலயம் அனுப்பினாள். தேவியின் வெற்றியில் தேவர்கள் பரமானந்தமடைந்தனர்.

காளியன்னை சாமுண்டா எனப் பெயர் பெற்றதையும், சண்ட முண்டர்களை வதைத்தது மட்டுமின்றி, ரக்தபீஜ வதத்துக்கும் அவள் உதவியாக இருந்தாள் என்பதையும் காண்கிறோம். சாமுண்டா வேறு, அவள் யாரிடமிருந்து தோன்றினாளோ அந்தத் தேவி வேறு என எண்ணலாகாது. தேவர்கள் அன்னையைத் துதித்துப் பாடிய தோத்திரத்திலிருந்து சாமுண்டேசுவரியும், பரதேவதையும் ஒருவரே என அறிகிறோம். தர்ம மார்க்கத்துக்குத் தடையாய்க் கிளம்பும் கொடிய சக்திகளை அழிப்பதற்காகத் தேவி ஒருத்தியே பல உருவங்களை எடுத்துக் கொள்கிறாள் என தேவர்கள் துதிக்கிறார்கள். விஷ்ணுவின் தெய்விக சக்தியான யோக நித்திரை அல்லது மகா மாயையாக இருந்து பூர்வத்தில் தேவியானவள் மது—கைடபர்களின் அழிவுக்கு உதவியதை தேவர்கள் போற்றுகிறார்கள்.

வேறொரு கல்பத்தில் மகிஷாசுரன் என்று ஓர் அசுரன் தோன்றினான். தேவர்களையெல்லாம் வென்றான். தர்ம வழியில் யாரும் செல்ல முடியாமல் துன்புறுத்தினான். 'நன்றியுடன் என்னை நினைந்தக்கால் உதவ வருவேன்' என்று யோக நித்திரா தேவி முன்பு வாக்களித்திருந்ததை தேவர்கள் நினைவு கூர்ந்தனர். அவ்வாறே அன்னையைத் தியானித்தனர். என்ன ஆச்சரியம்! தேவர்களின் தேஜஸ் அவ்வளவும் ஒன்று சேர்ந்து ஓர் ஒளிக்குவியல்

உண்டாயிற்று; அது தேவியின் திருஉருவமாகப் பொலிந்தது. இவளே பின்னர் மகிஷனை வதைத்த மகிஷாசுரமர்த்தினி. மதுகைடபர்கள் வதத்துக்குக் காரணமான மகாமாயை, மகிஷனை சம்ஹரித்த மகிஷாசுரமர்த்தினி, சும்ப நிசும்பர்களை வதைத்த அம்பிகை யாவரும் ஒன்றேதான். ஒன்றேயான பூரணப் பொருளுடைய இந்தச் சக்தியின் பல தோற்றங்களே அவர்கள். தேவி எனப்படும் இந்தச் சக்தியில்லாவிடில் பரப்பிரம்மத்தினாலும் எதும் செய்ய இயலாது என ஆதிசங்கரர் 'ஸௌந்தர்யலஹரி'யில் கூறுகிறார்.

தேவியிடம் காணப்படும் மற்றோர் அற்புத மகிமை அவளிடம் ஸௌந்தர்யம் பயங்கரம் இரண்டுமே ஒன்றிக் காணப்படுவதாகும். மகிஷாசுரமர்த்தினியின் சரித்திரத்தைப் பாராயணம் செய்யும்போது தேவியின் ஸௌந்தர்யப் பிரகாசமே நம் நெஞ்சில் ஆழப் பதிகிறது. எல்லா தேவர்களின் தேஜஸும் ஒன்று சேர்ந்தவளல்லவா அவள்? விசுவகர்மா அளித்த சூடாமணியையும், குண்டலங்களையும், கடகங்களையும் அணிந்துகொண்டு, சமுத்திரராஜன் சமர்ப்பித்த வாடாத புதுத் தாமரை மாலையும் தரித்து நிற்கும் தேவி அழகோவியமாகத் திகழ்கிறாள். இவளேதான் காலன் அளித்த சக்தியோடும், சிவபெருமான் அளித்த திரிசூலத்தோடும், நாராயணன் அளித்த சக்கரத்தோடும் ரௌத்திரகாரமாகவும் விளங்குகிறாள்.

இதேபோல் சும்ப நிசும்பர்களால் பீடிக்கப்பட்ட தேவர்கள் இமய வரம்பை அடைந்து பார்வதி தேவியைப் பிரார்த்தித்த போது அம்பிகையின் திவ்விய தேஜோமயம் வெளிப்பட, அந்த அசாதாரணமான அழகில் தேவர்கள் திளைத்தனர். அசுரர்களும் அவ்வழகிலேயே திகைத்தனர். அசுரர்கள் மூலம் இந்த லாவண்யத்தைக் கேள்வியுற்றுத்தான் சும்பனும் நிசும்பனும் போர் தொடங்கினர். சுந்தர நாயகியான இவளேதான் மகா பலம் பொருந்திய அசுரர்களை வதம் செய்யும்போது ஆயுதங்களைத் தரிக்கும் காளியாகி, அழகால் கவர்ந்திழுக்காமல் அஞ்சி நடுங்கச் செய்கிறாள். அடியார்களை ஆகர்ஷிக்கும் அன்பான அழகும் அவளே; கொடியாரை அச்சுறுத்தும் கோபத்தின் கோரமும் அவளே என்பது புராணத்தின் தாத்பரியம்.

பராசக்தியின் வேறுபல அவதாரங்களும் நிகழப்போகின்றன; அவள் சாகம்பரியாகவும், துர்க்கையாகவும், பீமா தேவியாகவும், பிராமரியாகவும் தோன்றிப் பிரசித்தி பெறப்போகிறாள் என்று சப்த சதியின் உத்தர பாகத்திலுள்ள 'மூர்த்தி ரகஸ்யம்' என்ற பகுதி கூறுகிறது.

திவ்விய மாதாவான சக்தியைப் போற்றும் தேவர்களின் துதியிலிருந்து அன்னையின் அற்புதப் பிரபாவங்களை அறிகிறோம். ஒலியின் இயல்பு பொருந்திய தேவி சித்கலை என்ற ஞான வடிவானவள். உலகின் தோற்றத்துக்கும், பரிபாலனத்துக்கும்,

அறிவுக்கும் அவளே காரணம். ஓயாமல் மாறி மறையும் பிரபஞ்சத்தைச் சுழல விடுபவள் அவளே. ஜீவராசிகளை அவித்யை என்னும் அஞ்ஞானத்தின் பாற்படுத்துபவளும் அவளே. வாழ்க்கையை நடத்துவதற்கான சக்தியும், ஞானமும் அவளிடமிருந்தே பெற்றாக வேண்டும். கருணாமயமானவள் அவள். அவளது கருணையைப் பெற்றவன் சம்சாரத் தளையிலிருந்து விடுபட்டு மோக்ஷ சுகம் பெறுகிறான்.

பாணபட்டரின் சண்டீ சதகம், 102 ஸ்லோகங்கள் கொண்ட தேவி ஸ்துதி. காதம்பரி, ஹர்ஷ சதகம் என்ற வசன காவ்யங்களை எழுதியவர் இவர்.

இதில் ஒரு ஸ்லோகம்: அம்பாளுடைய வீரியத்தைக் கண்டு சந்தோஷித்த சிவபெருமான் பரிகாசமாக ''ஆண் பிள்ளைகளும் செய்ய முடியாத பராக்கிரமத்தை செய்யும் உன்னை ஸ்திரீ என்றும் என் மஹிஷி என்றும் எண்ணி உன்னுடன் நான் எப்படி உல்லாசமாக காலங்கழிப்பது'' என்று சொல்வதைக் கேட்டு அம்பாள் வெட்கத்தால் தலை குனிந்தாள் என்று வர்ணிக்கிறது.

அம்பிகைக்குப் பதில் சொல்லத் தெரியாதா? அவள் மஹிஷனை சம்ஹாரம் செய்த காலத்தில் அவனைப் பார்த்துக் கூறுகிறாளாம்.

''மேரு பர்வதத்தை உன் கொம்பால் குத்திப் பிளந்ததில் எனக்கு உன்னிடம் கோபம் இல்லை. ஆனால் நீ செய்த ஒரு குற்றத்தை மட்டும் என்னால் பொறுக்க முடியாது. கடலை த்வம்ஸம் செய்து அதனால் சிவன் தலையிலுள்ள கங்கையைக் கலங்கச் செய்தாயே அதை என்னால் மன்னிக்க முடியாது'' என்று தன் கணவர் பரஸ்திரியிடம் (கங்கையிடம்) மோகம் கொண்டிருக்கிறார் என்பதை சொல்லாமல் குத்தி காட்டுகிறாளாம். கம்ஸனின் கையிலிருந்த விடுபட்ட சக்தி அம்பிகை அந்த க்ஷணமே கம்ஸனைக் கொன்றிருப்பாள். கிருஷ்ணனின் பெருமை வெளிப்பட்ட கம்ஸனைக் கொல்லாமல் விட்டாள்'' என்கிறார் பாணபட்டர்.

சப்தசதியில் (700-ல்) மிகவும் பிரதான மகாமந்திரம்

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிம் அசேக்ஷ ஜந்தோ
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிம் அதீவ சுபாம் ததாஸி
தாரித்ய துக்க பயஹாரிணி கர்த்வதந்யா
ஸர்வோபகாரணாய ஸதார்த்ர சித்தா

ஆத்ம ஞானம், செல்வம் தருவதுடன் ஆதி பௌதிகம், ஆதி தைவிகம், ஆத்யாமிகம் என்ற மூன்று தாபங்களையும் போக்கக் கூடியவள் துர்க்கா பரமேஸ்வரி.

சப்த சதீ 4
(தேவி மகாத்மியம்)

கட்கம் சக்ர கதேஷு சாப பரிகான் சூலம் புசுண்டிம் சிர:
சங்கம் ஸந்ததீம் கரைஸ் திரிநயனாம் ஸர்வாங்க பூஷாவ்ருதாம்
யாம் ஹந்தும் மதுகைடபௌ ஜலஜபூஸ்-துஷ்டாவ ஸுப்தே ஹரௌ
நீலாச்ம-த்யுதி-மாஸ்ய-பாத தசகாம் ஸேவே மகா காலிகாம்

—மகா காளீ தியானம்

அக்ஷஸ்ரக்-பரசும் கதேஷு குலிசம்
பத்மம் தனு: குண்டிகாம்
தண்டம் சக்தி-மஸிஞ்ச சர்ம
ஜலஜம் கண்டாம் ஸுரா பாஜனம் ।
சூலம் பாச சுதர்ஸனே சததீம் ஹஸ்தை:
ப்ரவால பிரபாம்
ஸேவே ஸைரிப-மர்த்தினீ
மிஹ மஹா லக்ஷ்மீம் சரோஜஸ்திதாம்.

— மகாலக்ஷ்மி தியானம்

கண்டா சூல ஹலானி சங்க
முஸலே சக்ரம் தனு ஸாயகம்
ஹஸ்தாப்ஜைர் தததீம் கனந்த
விலஸத் சீதாம்சு துல்ய பிரபாம்
கௌரீ தேஹ ஸமுத்பவாம் திரிஜகதா
மாதார பூதாம் மஹா
பூர்வா மந்த்ர ஸரஸ்வதி மனுபஜே
சும்பாதி-தைத்யார்த்தினீம்.

மகா சரஸ்வதி தியானம்

பகவத் கீதை 700 சுலோகங்கள் கொண்டது. அது மகா பாரதத்தில் நடுநாயகமாக விளங்குகிறது. அதுபோல மார்க்கண்டேய புராணத்தில் 700 மந்திர வடிவமான தேவி மகாத்மியம் அமைந்திருக்கிறது. இது சண்டிகா தேவியின் பெருமையைக் கூறுவதால் 'சண்டீ' என்றும் 700 மந்திரங்கள் அடங்கியதால் 'சப்த சதீ' என்றும் கூறப்படுகிறது.

இந்த 700-ல் ஒரு விசேஷம். தர்ம (அறம்), அர்த்த (பொருள்), காம (இன்பம்), மோக்ஷம் (வீடு), இந்த நான்குக்குமே நான்கு நூல்கள் உள்ளன. இவை முறையே மனுதர்ம சாஸ்திரம்,

தேவி மகாத்மியம், வாத்ஸாயனர் காம சூத்திரம், பகவத்கீதை, இவை ஒவ்வொன்றும் 700 சுலோகங்களைக் கொண்டவைகளே.

சப்த சதியின் பூர்வ பாகத்தில் கவசம், அர்க்கலம், கீலகம், ராத்ரி ஸூக்தம், (இதற்கு வனதுர்க்கா ஸூக்தம் என்று பெயர்) நவாக்ஷரி ஜபவிதியும், நடுவில் மூன்று சரித்திர வடிவில் தேவி மகாத்மியமும், கடைசியில் தேவி ஸூக்தம் ரகஸ்யத்திரயம் ஆகியவை அடங்கியுள்ளன.

அனுபந்தமாக துர்க்கா சப்த ஸ்லோகி, துர்க்கா ஸூக்தம், இந்திராக்ஷி ஸ்தோத்திரம், அபராதக்ஷமாபண ஸ்தோத்திரம், தேவ்யபராத் க்ஷமாபண ஸ்தோத்திரமும் அடங்கியுள்ளன.

தேவி மகாத்மியம் என்ற இந்த சப்தசதி பற்றி பரமேஸ்வரன் டாமர ரகஸ்யத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார். "இதை படிப்பவர் எல்லா வகையிலிருந்தும் விடுபடுவர். சின்மயமான திரிபுரா மூன்று வடிவம் கொண்டவள். அசுரர்களை ஒழித்து தேவர்களுக்கு அருள் புரியும் பொருட்டு பரதேவதை காளி உருக்கொண்டாள். அவள் மகிமையை விளங்கும் இதைப் படிப்பவர் எல்லா தொல்லை களிலிருந்தும் விடுபட்டு சகல சௌக்கியங்களையும் அடைவர்".

பிரும்ம வித்தையும் ஸ்ரீவித்தையும் ஒன்றே. பிரம்ம வித்தையான வேதாந்தம் கூறும் உண்மைகளை அனுபவத்திற்கு கொண்டுவர வழி காட்டுவது ஸ்ரீவித்தை. ஒரே பரம்பொருள்தான். 'ஓம்' என்ற பிரம்ம வித்யா மந்திரத்தாலும், 'ஹ்ரீம்' என்ற ஸ்ரீவித்யா மந்திரத்தாலும் கூறப்படுகிறது என்று ஆதிசங்கரர் கூறுகிறார். ஹ்ரீம் என்கிற பீஜத்திலிருந்து மகா காளி, மகா லக்ஷ்மி, மகா சரஸ்வதி தோன்றுகின்றனர்.

சப்த சதிக்குப் பல உரைகள் உள்ளன. ருத்ரயாமளம், மேரு தந்திரம், டாமர ரகஸ்யம், மரீசி கல்பம் முதலிய ஆகம நூல்களில் தேவி மகாத்மியத்தின் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

இந்த சப்தசதியின் அதிதேவதை துர்க்கை. அவளுடைய லக்ஷணங்கள் ஒன்பது ரூபமாகக் கவசத்தில் கூறப்படுகிறது.

1. சைலபுத்ரி,	2. பிரம்மசாரிணி,	3. சந்திரகண்டா,
4. கூஷ்மாண்டா,	5. ஸ்கந்தமாதா,	6. காத்யாயினி,
7. காலராத்திரி,	8. மகா கௌரி,	9. சித்திப்பிரதா.

துர்க்கையின் உபாசனா கல்பத்திரயம் என்ற நூலில், ஜயா, விஜயா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகி, பிரசண்டா, வியாக்கிரமுகி, பத்ரா, சிம்கமுகி என்றும், வன துர்க்கை, ஜல துர்க்கை, வன்னி துர்க்கை, பாதாள துர்க்கை, விஷ்ணு துர்க்கை, பிரம்ம துர்க்கை, ருத்ர துர்க்கை, சூலினி துர்க்கை, மகா துர்க்கை என்று கூறப் பட்டுள்ளது.

புராண காலத்தில் மதுகைடபர் என்று இரு அரக்கர்கள் இருந்தார்கள். இவர்களோடு மகாவிஷ்ணு நீண்ட காலம் போரிட்டு வெற்றியடைய முடியவில்லை. இந்த வெற்றி எக்களிப்பில் அவர்கள் விஷ்ணுவைப் பார்த்து 'உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்' என்றார்கள். 'மகா வீரர்களாகிய உங்கள் இரு வரையும் கொல்லும் வரம் வேண்டும்' என்று விஷ்ணு கேட்டார். மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவே தங்களிடம் வரம் கேட்கிறார் என்ற பூரிப்பில் 'ஆகட்டும்' என்று சொல்லி விட்டார்கள். பின்னர் தங்கள் முட்டாள் தனத்தை உணர்ந்தனர். வரம் தந்தாகிவிட்டதால் ஒரு நிபந்தனை போட்டார்கள். தங்கள் இருவரையும் பூமியில் கொல்லக்கூடாது என்பது அந்த நிபந்தனை. விஷ்ணு தன் மாயா சக்தியால் தனது துடையையே பூமியாகக் கொண்டு அவ்விரு அரக்கர்களையும் அங்கு வைத்து சம்ஹரித்து விட்டார். அந்த அசுர சக்திகள் எங்கு மீண்டும் தலை தூக்கப் போகிறதோ என்று தன் கையினால் துடையைப் பிடித்துக் கொண் டிருக்கும் விஷ்ணு மூர்த்தங்களைப் பார்க்கலாம். இந்த சம்ஹாரத்தில் விஷ்ணுவுக்கு துணையாக இருந்தது பராசக்திதான்.

தேவி மகாத்மியத்தில் அம்பிகை மகிஷாசுரனை சம்ஹரித்த வரலாறு காணப்படுகிறது, இவன், பெண் தவிர வேறு யாராலும் மரணம் ஏற்படாது என்று வரம் வாங்கியவன். மும்மூர்த்திகளால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்னை பராசக்தியை அவர்கள் வேண்டினார்கள்.

சுயநலம், அதற்காக பிறரை ஹிம்சிப்பது, தமோ குணம், சோம்பல், தானும் கெட்டு பிறரையும் கெடுப்பது போன்ற அசுர சம்பத்தே மகிஷாசுரன் உருவில் கற்பிக்கப்பட்டது.

எத்தனையோ உருவமிருக்க அவனை எருமை உருவகமாக சொன்னது ஏன்?

அஞ்ஞானத்திற்கும் எருமைக்கும் மிகமிகப் பொருத்தம் இருக்கின்றது. தமோ குணம் கறுப்பு வர்ணம். எருமையும் கறுப்பு. எருமையின் சோம்பல், நடை, அநாசாரத்தில் ருசி தன்னையும் அசுத்தமாக்கி தன்னை அண்டியவரையும் அசுத்தமாக்குகிறது.

பாராயண முறை

சப்த சதியை ஒரே தடவையில் 13 அத்தியாயங்களையும் பாராயணம் செய்ய அவகாசம் இல்லாதபோது மத்திம சரித் திரத்தை மட்டும் படிக்கலாம். அல்லது தொடர்ச்சியாக ஏழு தினங்களில் 1; 2-3; 4; 5-6-7-8; 9-10; 11; 12-13 என்ற க்ரமத்தில் படிக்கலாம்.

தேவியின் தோற்றம்

சர்வ தேவதா ஸ்வரூபமான மகா சக்தியானவள் ஒவ்வொரு தேவரிடத்திலிருந்தும் தனித்தனியாக வெளிப்பட்டு திரண்டு நின்று தேஜோமயமான வடிவினளாகக் காட்சியளித்தாள்.

பிரும்மாவிடமிருந்து தோன்றிய தேஜோமயமானது இரத்த நிறம் வாய்ந்ததாகவும், பத்மராகம் போன்ற ஒளியையுடைய தாகவும், தட்ப வெட்பங்கலந்த காந்தியுடையதாகவும் பிரகாசித்தது.

விஷ்ணுவின் தேஜோ ராசியானது பச்சை நிறத்துடன், மரகதம் போன்ற ஒளியுடன் சத்துவ குணமாகப் பிரகாசித்தது.

சிவபெருமானிடமிருந்து தோன்றிய தேஜோ ராசியானது சுத்த வெண்மை நிறமுடையதாய் அசுரர்களுக்கு பயங்கர மூட்டத்தக்கதாகவும், அடியார்களுக்கு அருள் செய்வதாகவும் பிரகாசித்தது.

இந்த ஜோதி மயத்தில் வெண்மை ஒளி வீசும் முகத்தோடும், கரு விழிகளோடும், பவழம் போன்ற உதடுகளோடும், பதினெட்டு ஆயுதங்கள் ஏந்திய பதினெட்டு திருக்கரங்களுடன் தேவி பிரசன்ன மானாள்.*

சிவபெருமான் சூலத்தையும், விஷ்ணு சக்கிரத்தையும் வருணன் சங்கையும், அக்னி சக்தி என்கிற ஆயுதத்தையும், வாயு அம்புகளையும் வில்லையும், இந்திரன் வஜ்ராயுதத்தையும், யமன் தண்டாயுதத்தையும், பிரம்மன் கங்கை நீர் கொண்ட கமண்டலத்தையும், குபேரன் மது நிறைந்த தங்க பாத்திரத்தை யும், துவஷ்டா கௌமோதகி என்ற ஆயுதத்தையும், சூரியன் ஒளிக் கிரணங்களையும், விசுவகர்மா கங்கணத்தையும், பரசு ஆயுதத்தை யும், பாற்கடல் ஆடைகளையும், அணிகளையும், மலையரசன் சிம்ம வாகனத்தையும், ஐராவதம், ஒளியுள்ள மணியையும் அம்பிகைக்கு அளித்தனர்.

தேவர்கள் தேவியை மூலப் பிரகிருதியாக துதிக்கிறார்கள். 'சத்வம் ரஜஸ் தமஸ்' என்ற மூன்று குணங்களின் உருவானதும் அக் குணங்கள் மூலம் பஞ்ச மகா பூதங்களை சிருஷ்டி செய்வது மான மூலப் பிரகிருதி இவ்வுலகத் தோற்றத்திற்கே மூலமானது. சத்துவம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களுக்கு ராஜத்து வேஷாதிகளும் லக்ஷணமாகும். ஆனால் தேவியிடம் இத் தோஷங்கள் இல்லை என்பது 'தோஷைர் ந ஞாயஸே' என்பதால் சொல்லப்பட்டது.

பிரக்ருதிக்கு அப்பாலுள்ள புருஷனை ஸாக்ஷாத்கரிக்க ஸாதன மான பிரும்மவித்தையும் நீயே என்று துதிக்கப்படுகிறாள். பின் சப்த பிரம்மமாகக் கூறி வேதம் மட்டுமல்ல, லோகயாத்ரைக்கு ஆதாரமான வித்தையும் அவளே என்கின்றனர்.

---

* தேவியின் இவ்வுருவமே அட்டைப் படத்தில் உள்ளது.

இவர்கள் என்னை காப்பாற்றட்டும்

கிழக்கில்-இந்திராணி; அக்னி மூலையில் அக்னி; தெற்கில் வாராஹி, நிருதி மூலையில் கட்க தாரிணி; மேற்கில்-வாருணி, வாயு மூலையில் மிருக வாகினி; வடக்கில்-கௌமாரி, ஈசான மூலையில் சூலதாரிணி; மேலே பிரும்ம சக்தி, கீழே விஷ்ணு சக்தி; பத்து திசைகளையும் சாமுண்டா தேவி காத்தருள வேண்டும்.

முன்னால் ஜயா சக்தி, பின்னால் விஜயா சக்தி. இடது பக்கம் அஜிதா, வலது பக்கம் அபராஜிதா. சிகை-உத்யோதினி சக்தி; சிரசு-உமா; நெற்றி-மாலாதரி; புருவம்-யசஸ்வினி. புருவ மத்தியில் திரிநேத்ரா தேவி. நாசிகை யமகண்டா தேவி. கண்கள் சங்கினி சக்தி. காதுகளில்-துவார வாசினி.

கிழுதட்டில் அம்ருதகலா, நாக்கில் சரஸ்வதி, பற்கள்-கௌமாரி, கழுத்து-சண்டிகை, உள் நாக்கு-சித்திர கண்டாதேவி, தாடைகள்-மகா மாயை, முகவாய்க்கட்டை-காமாக்ஷி, வாக்கு-சர்வ மங்களா தேவி, கழுத்து-பத்திரகாளி, முதுகெலும்பு-தனுத் தரீதேவி, கழுத்தின் வெளி-நீலக்கிரிவா தேவி, கழுத்தெலும்பு-நளகூபரீ தேவி.

இரு தோள்கள்-கட்கதாரிணி, இரு புஜங்கள்-வஜ்ரதாரிணி, கைகள்-தண்டினி, விரல்கள்-அம்பிகை, நகங்கள்-சூலேஸ்வரி, கக்ஷங்கள்-அனலேசுவரி, ஸ்தனங்கள்-மகாதேவி, மனது-சோக விநாசினி.

இருதயம்-லலிதாதேவி, வயிற்றில்-சூலதாரிணி, நாபி-காமினி தேவி, ரகஸ்ய ஸ்தானம்-குஹ்யேஸ்வரி, லிங்கம்-பூதநாதா, அபானத் துவாரம்-மகிஷவாஹினி, இடுப்பு-பகவதி, முழங்கால்-விந்தியா வாஸினி, துடைகள்-மகாபலா தேவி, முழங்கால்நடு-விநாயகீதேவி, கணுக்கால்-நரசிம்மிதேவி, பின்னங்கால்-மிதௌஜஸி, கால் விரல்கள்-ஸ்ரீதரி, கீழ்பாதம்-தலவாசினி, நகங்கள்-தமஷ்ராகராலி, கேசம்-ஊர்த்துவகேசி, மயிர்க்கால்-கௌபேரி, தோல்-வாகீஸ்வரி இரத்தம், வீரியம், கொழுப்பு, மாம்சம், எலும்பு, மூளை இவைகள் பார்வதி.

குடல்கள்-காளராத்திரி, பித்ததாது-முகுடேசுவரி, ஆதாரக் கமலம்-பத்மாவதி, கபதாது-சூடாமணி, நகங்களின் பிரகாசம்-ஜ்வாலாமுகி, எல்லா சந்திகள்-அபேத்யா தேவி, சுக்லம்-பிரும் மாணி, நிழல்-சத்ரேஸ்வரி.

அகங்காரம், புத்தி, மனம்-தர்மசாரிணி, பிராணன் அபானன், வியானன், சமானன், உதானன், இவர்களையும் தர்மசாரிணியே ரக்ஷிப்பாள். புகழ், கீர்த்தி, அழகு-சக்ரிணீ, கோத்திரம்-

இந்திராணி, பசுக்கள்-சண்டி, புத்திரர்கள்-மகாலக்ஷ்மி, மனைவி-பைரவி, வழி-க்ஷேமங்கரி, எல்லாப் புறங்களிலும் விஜயா.

எந்த இடம் கவசம் இல்லாமல் காக்கப்படாமல் உளதோ அதை எல்லாம் ஜயந்தி எனவும், பாபநாசினி எனவும் பெயர் பெற்ற நீ காத்தருள வேண்டும்.

சப்தசதி அடங்கிய அக்ஷமாலை

சப்தசதியிலுள்ள 700 சுலோகங்களும் 15 மணிகளில் எழுதப்பட்டுள்ளன. இவை எப்படித்தான் எழுத முடிந்தது என்று தெரியவில்லை. பூஜை செய்யப்படவேண்டிய இந்த அக்ஷமாலை காட்சிப் பொருளாக திருவனந்தபுரம் ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட்ஸ் நூலகத்தில் உள்ளது. சுவடிகள் வட்டமாக நறுக்கி அவைகளில் சுலோகங்களை எழுதி 15 மணிகளாக்கி இதை மாலையாக செய்திருக்கிறார்கள்.

இது 200 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டிருக்க வேண்டும். திருவனந்தபுரத்திற்கு 26 மைலிலுள்ள முஞ்சிரா என்ற அரச குடும்பத்தினர் வழிவந்த குடும்பத்தினரிடம் இது இருந்ததாம்.

நமோ தேவ்யை மகா தேவ்யை...நமோ நம:

[தேவி மகாத்மியத்தில் தேவர்கள் அம்மனை துதிக்கும் இப்பகுதி (தேவி தூத சம்வாதத்தில் வருகிறது) மிகவும் முக்கியமானது. (8-வது சுலோகமான 'நமோ தேவ்யை' முதல் 82-வது சுலோகம் வரை பிரார்த்தனைதான்). அந்த சுலோகங்களின் சுருக்கம் :]

தேவிக்கு, மகா தேவிக்கு, சுப வடிவினளுக்கு, பிரகிருதிக்கு, மங்கள ஸ்வரூபிணிக்கு நமஸ்காரம். பயங்கர வடிவினள், நித்தியமானவள் கௌரி, உலகைத் தாங்குபவள், ஒளி வடிவினள், இன்ப வடிவினள்-நமஸ்காரம்.

சரணடைந்தோர்க்கு எல்லா நலன்களுமாகிறவள், வளர்ச்சியும், வெற்றியும் ஆகியவள், கஷ்டங்களைக் கடத்துவிக்கும் துர்க்கை, அனைத்தின் சாரம், கியாதி வடிவினள், கரிய வடிவினள், புகை வடிவினள்-நமஸ்காரம்,

தேவர்கள் துர்க்கா பரமேஸ்வரியைப் பார்த்து, 'நீர் யார்' என்று கேட்க, தேவி தனது உண்மையான ஸ்வரூபத்தை கீழ்கண்டவாறு திருவாய் மலர்ந்தருளுகிறாள். (இது தேவி ஸூக்தத்தில் உள்ளது.)

"நான் பிரம்ம ஸ்வரூபிணி; பிரகிருதி; புருஷாத்மகமாயுள்ள இந்த ஜகத்தின் சூன்ய ஸ்திதியும், அசூன்ய ஸ்திதியும் நானே.

இத்தகைய பிரபஞ்சம் என் சுவரூபத்திலிருந்தே தோன்றுகிறது. நானே ஆனந்தமாகவும், அநாநந்தமாயும் விளங்குகிறேன். ஞானமும் நானே, வித்தையும் நானே, அவித்தையும் நானே. நானே ஏகாதச ருத்திரர்கள், அஷ்ட வசுக்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள், விச்வ தேவர்கள், மித்ரா வருணர்கள், இந்திராக்னிகள், அச்விநீ தேவதைகள், சோமன், துவஷ்டா, பூஷன் முதலிய தேவதைகளையும், ஷட்வித ஐசுவரியங்களையும், தரித்து விளங்குகின்றேன்.

நல்ல ஹவிஸ்ஸை சிரத்தையோடு ஹோமம் செய்கிறவனும் அதனால் பல தோஷம் நீக்கப்பெற்ற சுந்தாந்த கரணத்தையுடைய முமுக்ஷுவிற்கு அந்தர்முக திருஷ்டியை அருளி அவனுக்கு வேண்டிய யோக க்ஷேமங்களை அருள்பவளும் நானே.''

விஷ்ணுவின் யோக நித்ரையான மகா மாயையினால்தான் உலகமே மயக்கப்படுகிறது. இவள் ஞானிகள் மனதையும் வலுவில் இழுத்து மோகத்திற்கு ஆளாக்குகிறாள். இப்பிரபஞ்சம் அவளால் படைக்கப்படுகிறது. மனிதரின் முக்திக்கு அவளே காரணமாகிறாள்.

விஷ்ணு அருதுயில் கொண்டிருக்கும்போது மதுகைடபர்கள் தோன்றி பிரும்மாவைக் கொல்ல முயன்றனர். நாபிகமலத் தாமரையிலுள்ள நான்முகன் நித்ரா தேவியான (மகா மாயை) விஷ்ணு பத்னியை துதித்தார். ''நீயே ஸ்வாஹா, நீயே ஸ்வ்தா, நீயே வஷட்காரம், நீயே ஸ்வரூபமானவள், நீயே அம்ருதம், நீயே பிரணவம்.''

(அக்னி முதலிய தேவதைகளுக்கு அர்ப்பணம் செய்யப்படுவது ஸ்வாஹா, பித்ருக்களுக்கு கொடுக்கப்படுவது ஸ்வதா.)

வஷட்காரம் என்பதால் குறிக்கப்படுவது யக்ஞம். ஸ்வரம் என்பது வேதத்திற்கு உரிய உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்று அம்ருதம் தேவ உணவு. அ, உ, ம என்ற பிரணவம் உருவாகும் எழுத்துக்கள். ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி அவஸ்தைகளைக் குறிக்கும்.

''கால ராத்திரி, மகா ராத்திரி,
மோஹ ராத்திரி நீயே''

கால ராத்திரி-கல்பத்தின் முடிவு. மோஹ ராத்திரி-அஞ்ஞானத்தை விளைவிக்கும்படியான மோகம். மகா ராத்திரி-பிரம்மாதிகளின் முடிவான ராத்திரி. பாஸ்கரராயர் தம் உரையில் இம் மூன்று ராத்திரிகளுக்கும் விசேஷ அர்த்தம் கூறுகிறார். பிரளயம், பிரும்ம பிரளயம், மஹா பிரளயம் என்று மூன்று விதமான சக்திகளைத் தெய்வமாகக் கொண்டு ராத்ரி ஸூக்தத்தால் கொண்டாடப்படும் ராத்திரி தேவதை என்கிறார்.

துர்க்கா ஸூக்தம்

யஜுர் வேதத்தில் உபநிஷத் பிரகரணத்தில் பரதேவதா பிரகாசமான ஸ்ரீ துர்க்கா ஸூக்தம் அமைந்துள்ளது.

1. ஜாதவேத ஸே ஸுநவா ஸோம
மராதி யதோ நிதஹாதி வேத : ।
ஸுந : பர்ஷதி துர்க்காணி விஸ்வா
நாவேவ ஸிந்தும் துரிதாத் யக்னி : ॥

2. தாமக்னி-வர்ணாம் தபஸா ஜ்வலந்தீம்
வைரோசனீம் கர்மபலேஷு ஜுஷ்டாம் ।
துர்க்காம் தேவீம் சரணமஹம்
ப்ரபத்யே ஸுதரஸிதரஸே நம : ॥

3. அக்னே த்வம் பாரயானவ்யோ
அஸ்மான் ஸ்வஸ்திபிரதி துர்க்காணி விஸ்வா ।
பூச்ச ப்ருத்வீ பஹுலாந உர்வி
பவா தேகாய தனதாய சம்யோ : ॥

4. விஸ்வானி நோ துர்க்கஹா
ஜாதவேதஸ்-ஸிந்தும் ந நாவா-துரிதாதி பர் ஷி ।
அக்னே அத்ரிவன் மனஸா
க்ருணானோ அஸ்மாகம் போத்ய விதா தனூனும்

5. ப்ருதனாஜித ஸஹமான முக்ர
மக்னி ஹுவேம பரமாத் ஸதஸ்தாத் ।
ஸந : பர்ஷதி துர்க்காணி விச்வா
க்ஷாமத்தேவோ அதிதுரிதாத் யக்னி : ॥

6. ப்ரத்னோஷிக-மீட்போஅத்வ ரேஷு
ஸனாச்ச ஹோதா நவ்யச்ச ஸத்ஸி ।
ஸ்வாஞ்சாக்னே தனுவம்
பிப்ரயஸ் வாஸ்மப்யஞ்ச ஸௌபக மாய துஸ்வ ॥

7. கோபிர்-ஜுஷ்ட-மயுஜோ நிஷிக்தம்
தவேந்திர விஷ்ணோரனு ஸஞ்சரேம ।
நாகஸ்ய ப்ருஷ்ட மபிஸம்
வஸோனு வைஷ்ணவீம் லோக இஹ மாதயந்தாம்

(துர்க்கா காயத்ரி)

காத்யாயநாய வித்மஹே கன்யாகுமரி தீமஹி
தந்நோ துர்க்கி : ப்ரசோதயாத்

(கன்னியாகவும் குமரியாகவுமுள்ள தேவியை தியானிக்கிறோம். பரமேஸ்வரனுக்காகவே தோன்றி பரமேஸ்வரனை அடைந்த அவளை வழிபடுகிறோம். அந்த துர்க்காதேவி எங்களை நல் வழியில் செலுத்தி ஆட்கொள்ள வேண்டும்.)

சகல வேதங்களும் பரபிரும்ம ஸ்வரூபியான அம்பிகையினிட மிருந்தே உண்டாயின. ஆகவே வேதம் அம்பிகையை 'ஜாத வேதஸே' என்று அழைக்கிறது.

துர்க்கா ஸூக்தம் ஏழு மந்திரங்கள் கொண்டது.

முதல் மந்திரத்தினால் சத்துரு நிவ்ருத்தியையும், சகல துக்க நிவ்ருத்தியையும் வேண்டிக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது மந்திரத்தினால், சகல வல்லமை பொருந்திய ஜகன்மாதாவை சரணடைந்தாகி விட்டது.

மூன்றாவது மந்திரத்தினால் நாடு செழிப்படையும்.

நாலாவது மந்திரத்தினால், காயிக வாசிக மானசிகங்களிலுள்ள 'காமக்குரோதங்களை விட்டு வழிபட வேண்டிய உபாயத்தைக் கொடு' என்று வேண்டப்படுகிறது.

தான் இருக்குமிடம் வந்து குற்றங்களை நீக்கி அருள் புரியுமாறு ஐந்தாவது மந்திரத்தின் மூலம் வேண்டப்படுகிறது.

'என் பூஜையால் திருப்தியடைந்து சகல சௌபாக்கியங் களையும் கொடு' என்று ஆறாவது மந்திரம் கோருகிறது.

உன்னுடன் சகல தேவர்களும் என்னை காப்பாற்ற வேண்டும் என்று கடைசி மந்திரத்தில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சரணம் அஹம் பிரபத்யே !

துர்க்காம் தேவீம் சரணமஹம் பிரபத்யே
ஸுதரஸி தரஸே நம:

எந்தக் காரியம் செய்தால் கடவுடைய அனுக்ரஹம் ஏற்படுமோ அதைச் செய்வதுதான் பக்தி. அந்த பக்தியும் ஸ்திர மாகத் தொடர்ந்து செய்யவேண்டும். அப்படி பக்தி செய்தால் அவனுக்கு இறைவன் சுலபமாகவே அனுக்கிரகம் செய்கிறான்.

ஆகவே துர்க்காம்பிகையை சரண் அடைகிறேன் என்று வேதம் சொல்கிறது. பிறரின் ஹிம்ஸை ஏற்படும்போது அதைத் தானாக விலக்கிக்கொள்ள முடியாது போகுங்கால், பிறரை அண்டி அவ்வபாயத்தினின்றும் விடுவித்து தனக்கு நன்மை பயக்குமாறு அடைக்கலம் புகுவதே தான் சரணாகதி என்பதன் பொருள்.

வால்மீகியும்,

''பிரணிபாத ப்ரஸந்நாஹி மைதிலி ஜனகாத்மஜா'' !

''நமஸ்காரம் செய்த மாத்திரத்திலேயே சீதை உங்களுடைய குற்றத்தைப் பொறுத்து மன்னித்து விடுவாள் என்று திரிஜடை

ராக்ஷஸிகளைப் பார்த்து சொல்லுகிறாள்'' என்கிறார். விபிஷண சரணாகதியும் இதை நமக்கு நன்கு விளக்குகிறது.

அஸ்மாகம் போத்ய விதா தனானாம்

தூங்குகின்ற (அஞ்ஞானிகளாகிய) எங்களை விழிப்படையும்படி (ஞானிகளாக) செய். தூங்குகின்றவர்களை எழுந்திருங்கள், பொழுது விடிந்துவிட்டது என்கிறோம். அஞ்ஞான இருளில் மூழ்கி கிடப்பவர்களை இம்மாதிரி தட்டி எழுப்பவே வேண்டும். இதை செய்யக்கூடியவள் அம்பிகைதான். காயத்ரி மந்திரமும் இதைத் தான் விளக்குகிறது. கீதையிலும் கிருஷ்ணன், சோகம் கொண்ட அர்ஜுனனை 'எழுந்திரு; நற்புகழை அடை' என்கிறார். இதுதான் கீதையின் சாரம். ஆகவே கீதா மந்திர தத்துவம், இம் மந்திரத்தில் அடங்கியுள்ளது.

கும்பகர்ணன் வரம் கேட்கும்போது நித்திரைத்துவம் வேண்டும் என்று கேட்டுவிட்டானும், அதுபோல நாம் நமக்கு எது ஹிதம் என்று தெரியாமல் எதையாவது கேட்டுவிடப்போகிறோமே என்று கருணையுடன், 'அஸ்மாகம் போதி', 'என்னை விழித்துக் கொள்ளும்படிச் செய்', 'அறிவைக் கொடு' என்று தேவியை பிரார்த்திக்கவேண்டும் என்பதை வேதம் நமக்கு உபதேசம் செய்கிறது.

நவாக்ஷரீ

மாதர்மே மதுகைடபக்னி மஹிஷ ப்ராணாப ஹாரோத்யமே
ஹேலா நிர்மித தூம்ரலோசன-வதே ஹே சண்ட முண்டார்த்தினி
நீ : சேஷீ-க்ருத-ரக்தபீஜ-தனுஜே-நித்யே-நிசும்பாபஹே
ஸம்ஹராசு துரிதம் துர்க்கே நமஸ்தேம்பிகே. [சும்பத்வம்ஸினி

—நவாக்ஷரீ தியான சுலோகம்

தாயே! மதுகைடபர்களை வதம் செய்தவளே! மகிஷனுடைய பிராணனைப் போக்கியவளே! விளையாட்டாக தூம்ரலோசனனை வதைத்தவளே! சண்ட முண்டர்களை அழித்தவளே! ரக்த பீஜாசுரனை நிர்மூலமாக்கியவளே! துர்க்காம்பிகையே! உன்னை நமஸ்கரிக்கின்றேன். விரைவில் என் பாபத்தைப் போக்கி யருள்வாய்.

நவாக்ஷரீ மந்திரத்தின் பொருள்

''காரிய காரண அக்ஞானங்களை ஒழித்த ஞான சுவரூபிணியே! எப்பொழுதும் அக்ஞான சம்பந்தம் அற்பமுமின்றி விடுபட்டுள்ளவளே! எல்லாவற்றுள்ளும் பரம சிரேஷ்டமாய் யாவராலும் மதிக்கப்படும் பிரம்மானந்த ஸ்வரூபிணியே, கால தேச வஸ்து பரிச்சேதங்களற்ற ஜீவ பிரஹ்மைக்கிய வித்தையின் பொருட்டு நான் உம்மை சதா அனுசந்தானம் செய்கிறேன்.''

ஏற்கனவே ஒன்பது சக்திபரமான எண் என்பது விளக்கப் பட்டுள்ளது. இந்த நவாக்ஷரியிலுள்ள 9 எழுத்துக்கள்.

ஐம் ஹ்ரீம் க்லீம்	—	3
சா மு ண் டா ய		5
வி ச் சே		1
		9

ஐம் என்பது சித்தஸ்வரூபிணியான மகா சரஸ்வதி.

ஹ்ரீம் சித்தாத்ம ஸ்வரூபிணியான மகா லக்ஷ்மி.

க்லீம் ஆநந்தரூபிணியான மகா காளி. இந்த நவாக்ஷரீ மந்திரத்திற்கு மார்க்கண்டேயர் ரிஷி, ஜகதீச் சந்தஸ், துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி தேவதை.

காலஞ்சென்ற சி. வி. சுவாமிநாதய்யர்* (விவேக சிந்நாமணி ஆசிரியர்) இந்த பொருள் பற்றி எழுதியிருப்பதாவது :

27 என்ற எண்ணைக் கூட்டினால் 9 வரும். இந்த 27 எண்ணின் உட்பொருள் 'சப்தவிம் சதி சாயுஜ்யம்'. இந்த 'பஞ்சவிம் சதி பாக்கியம்' பெற்றவன் பாராளும் வேந்தரில் பெரியவன் என்பர்.

காலம் முதல் பேதம் வரை ஒன்பது கட்டங்கள்.

1. காலத்திலே முளைத்தது நேசம்
2. தேசத்திலே முளைத்தது பாசம்
3. பாசத்திலே முளைத்தது மோகம்
4. மோகத்திலே முளைத்தது கோசம்
5. கோசத்திலே முளைத்தது ரோஸம்
6. ரோஸத்திலே முளைத்தது கிலேசம்
7. கிலேசத்திலே முளைத்தது நேசம்
8. நேசத்திலே முளைத்தது விஷயம்
9. விஷயத்தில் கண்டது பேதம்

பேதத்தில் உண்டுகாண் சுகதுக்கம். இந்த ஒன்பது அவஸ்தை களையும் ஒழிக்க துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி தயவு அவசியம் வேண்டும்.

25 (பஞ்சவிம் சதி) என்கிற எண் குருவருளையும், 26 (ஷட்வி மஜக பாவம்) என்கிற எண் ஜகத்பாவத்தையும் குறிப்பிடுகிறது. 27 எண் மூலாவரணமாம் மறைப்பு சக்தியைக் குறிக்கும். இதையே உலகத்தார் யமன் என்றும், மரணம் என்றும் குறிப்

---

* இப்புத்தக ஆசிரியரின் தகப்பனார்.

பிடுவர். இந்த யமனுகிய மிருத்யுவை வென்றவர் மார்க்கண்டேய ரிஷி. (அதனுல்தான் நவாக்ஷரீ மந்திரத்தின் ரிஷியும் இவரே.)

ஷட்விம (26) ரூபமாகவுள்ள ஜகத் பாவத்தை அறிந்தபின் 27 ரூபமாகவுள்ள மரணத்தை அறிய வேண்டும்.

ப்ரணவமுக்தி : பிராண : சக்தி : ப்ராண-பிரணவ
ஸம்யமஸ்திதி புருஷரூப : ப்ரணவத்யாகேந
ப்ராண கர்ப்பஸ்திதி : இதி ஸ்ரீரூப :
ஸ்ரீபுருஷ ஸம்யமவ சரத் ஜீவ :

இதன் பொருள்.

அகார, உகார, மகார ரூபம் சேர்ந்த பிரணவம் எப்போதும் முக்தி ஸ்வரூபமாக விளங்குவது. சிவாய நம வென்றும் (ஐம், ஹ்ரீம், க்லீம், வேம் ஸௌம் என்றும்) பஞ்ச சங்க்யோப சாராத்மகமான பிராணன் சக்தி ஸ்வரூபமாக விளங்குகிறது.

பிராண ப்ரணவஸம் யமஸ்திதி புருஷ ரூப:—பிராண முக்தியும், பிராண சக்தியும் ஏகரஸமாய் ஐக்கியப்பட்டிருக்கும் ஸ்திதி ஒன்றெதுவோ அது புருஷ ரூபம். அதாவது விஷ்ணுபதம். இது எப்போதும் அஷ்ட பீஜமாகவே விளங்கும். அஷ்டாக்ஷரம் என்று சொல்லப்படும். சக்தி ஸ்வரூபமான தேவி பஞ்ச ஸங்கியோப சாரிணியாயிருப்பது போல புருஷ ரூபமாம் விஷ்ணு அஷ்ட ஸங்கியோப சாரணராக இருக்கிறுர்.

இந்த புருஷ ரூபத்திற்கு ஸ்ரீரூபமான மகா லக்ஷ்மி எப்போதும் ஷட் சங்கியோப சாரணியாய் ஷட் பீஜம், ஷடாக்ஷரி என்கிற ரகஸ்ய நாமாக்களால் விளங்குகிறுள். இந்த ஷடாக்ஷரியுடன் அ, இ, உ மூன்று மயமாயிருக்கிற பிரணவம் சேர்ந்தால் நவாக்ஷரீ என்கிற அபின்ன சக்தியாகிறது. இந்த நவாக்ஷரீ எப்போதும் ஏகரூபமாக உள்ளது.

பிரணவமுக்தி மூன்று மயமாக இருப்பது	3
ப்ராணசக்தி பஞ்ச சங்கியையாக இருப்பது	5
புருஷ ரூபம்-அஷ்ட சங்கியை	8
ஸ்திரீ ரூபம்-ஷட் சங்கியாத்மகமாக இருப்பது	6
நவாக்ஷரீ-நவஸங்கியத் மகமானது	9
ஏக ரூபம்-நவாக்ஷரீயின் சமஷ்டி ரூபம்	1
	32
இந்த 32-ன் சமஷ்டி	1
	33

இப்படியாக பரதத்துவங்களெல்லாம் 33 என்கிற இரகசிய சங்கியையில் அடங்கும்.

'கலௌசண்டீ விஞயகௌ' கலியுகத்தில் எல்லோராலும் சுலபமாக உபாசித்து அவரவர் வேண்டிய விருப்பத்தை வேண்டிய வுடன் அளிக்கும் தெய்வங்கள் துர்க்கையும், விநாயகரும்தான் என்கிறது இவ்வாக்கியம்.

''சதுர்வர்க்காய சண்டிகாம்'' என்பது பத்ம புராணத்தில் ஒரு வாக்கியம். அதாவது நோயற்ற வாழ்வுக்கு சூரியனை உபாசிக்க வேண்டும். தருமம், மோக்ஷம் இவ்விரண்டையும் பெற மாதவனை வழிபடவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற இந் நான்கையும் பெற சண்டிகையை வழிபட வேண்டும்.

'ஸார ஸங்கிரஹம்' என்னும் கிரந்தத்தில் ஸாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்று வகையான தியானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வன துர்க்கா தேவிக்குள்ள மூல மந்திரம் மிக இரகசியமானது. அதன் அர்த்தம்:

> ''புருஷத்தன்மை யுடையவளே! எழுந்திரு! ஏன் உறங்கு கிறாய்? எனக்குப் பயம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அபாயத்தை சமனம் செய்வாயாக!''

சண்டி ஹோமம்

யதா வேதோ ஹ்யனாதிர் ஹி தத்வத் ஸப்தஶதீ ஸ்ம்ருதா ।

வேதம் எப்படி அனாதியோ அப்படி ஸப்த சதியும் அனாதி யானது என்று புவனேஸ்வர சம்ஹிதை கூறுகிறது. இதைப் பாராயணம் செய்ய நித்ய கர்மாவை முடித்து ஆசமனம், பிராணாயாமம், சங்கல்பம் முதலியவைகளை செய்துகொண்டு சாவதானமாக ஆறு அங்கங்களுடன் முன் பின் நவாக்ஷரீ ஜபத்துடன் கைக்கொள்ள வேண்டும்.

100 தடவை சப்த சதீ பாராயணம் செய்தால் ஒரு சண்டி ஹோமம் செய்வது சிரேஷ்டம், பாராயணம் செய்யாமலும், சண்டி ஹோமம் செய்வதில் தவறொன்றுமில்லை. ஸ்ரீ வித்யா ஹோமம் செய்து ஏற்பட்ட லலிதா அக்னியிலேயே இதர ஹோமங்களை செய்வது வழக்கம்.

சண்டி ஹோமத்தில், சர்க்கரைப் பொங்கல், நெய், சமித்து, பழங்கள், புஷ்பங்கள், (சிவப்பு புஷ்பங்கள் இருந்தால் நல்லது) இவைகளை அக்னியில் மந்திரத்தைச் சொல்லி இடுவது வழக்கம். (ஸ்ரீஸூக்த ஹோமத்தில் தாமரைப் பூ விசேஷம்).

இந்த சண்டி ஹோமம் முடிவில் பூரண ஆஹுதியின்போது சிவப்பு நிற புடவை, அல்லது ரவிக்கை இவைகளை அக்னியில் சமர்பிக்க வேண்டும். இந்த சண்டி ஹோமம் இக் கலியில் மிகவும் பலனைத் தரக்கூடியது. இக்கலிகாலத்தில் கீதை, விஷ்ணு சகஸ்ர

நாமம், தேவி மகாத்மியம், லலிதா சகஸ்ரநாமம் இந் நான்கும் பயன் தரும் ஸ்தோத்திரங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தேவியை தேவர்கள் மும்முறை சப்த சதியில் பிரார்த்திக்கிறார்கள். ஒன்று நான்காவது அத்யாயத்தில் மகிஷாசுர வதம் ஆன பிறகு தேவர்கள் செய்த ஸ்தோத்திரம் (தேவ்யா யயாதத மிதம் ஜகத, என்று ஆரம்பமாகிறது இது.)

ஐந்தாவது அத்யாயத்தில், சும்ப நிசும்ப வதத்தின் பொருட்டு தேவர்கள் செய்த தேவி ஸ்தோத்திரம் இரண்டாவது (நமோ தேவ்யை, மகா தேவ்யை, சிவாயை ஸததம் நம: என்று இது ஆரம்பமாகிறது, யாதேவி, சர்வ பூதேஷு என்கிற பிரசித்தி பெற்ற ஸ்தோத்திரம் இதில்தான் வருகிறது.)

பதினோராவது அத்யாயத்தில் சும்ப வதம் ஆன பின்பு தேவர்கள் செய்த தேவி ஸ்தோத்திரம் மூன்றாவது (தேவி பிரபன்னார்த்தி ஹரே ப்ரஸீத என்று இது ஆரம்பமாகிறது.)

இம் மூன்று ஸ்தோத்திரங்களையும் சொல்லி தேவர்கள் தேவியை பிரார்த்தித்தபோது, தேவி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாளாம். ஆகவே, அவளுக்கு மகிழ்ச்சி அளித்த அதே ஸ்தோத்திர மந்திரங்களைக் கூறி அக்னி ரூபமாக உள்ள அவளுக்கு ஹோமம் செய்வதில் பூரண பலன் உண்டு. நம்மிடையேயுள்ள காமம், குரோதம், கோபம், மோகம், அகங்காரம், வறுமை, எல்லாவித ரூபமாக உள்ள அசுரர்களை அவள் சம்ஹரித்து ரக்ஷிப்பது நிச்சயம்.

இந்த சண்டி ஹோமத்தின் ஆவர்த்திகளை அதிகரித்து 1000 மாகச் செய்வதுதான் சத சண்டி ஹோமம்.

கஷ்டங்கள் நீங்க அங்கங்கே சண்டி ஹோமங்கள் நடைபெறுகின்றன. இதன் உண்மையை உணர்ந்த ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் தனது பகைவர்களை வெல்ல மகான்களைக் கொண்டு சத சண்டி ஹோமம், சகஸ்ர சண்டி ஹோமம் எல்லாம் செய்திருக்கிறார்கள்.

துர்க்கா சூக்தத்தை மகா மந்திரமாக ஜபித்து ஆவர்த்தி கணக்கெடுத்து ஹோமம் செய்வதும் உண்டு. ஸ்ரீ ஜய துர்க்கா மந்திரத்தை முதலிலும், அடுத்து வன துர்க்கா மஹா மந்திரத்தையும், ஸ்ரீ துர்க்கா ஸூக்த வேத மந்திரங்களை நடுவிலும் மறுபடியும் ஸ்ரீ வன துர்க்கா, ஜய துர்க்கா மந்திரங்களையும் சேர்த்து ஸம்புடிகமான ஸ்ரீ ஸூக்த ஹோமத்தை செய்வது மிக விசேஷமாகும்.

தச மஹாவித்யாக்களில் உக்கிர சொரூபிணிகள் 5

வித்யுத்தாம சமப்ரபாம் ம்ருகபதி ஸ்கந்த ஸதிதாம் பீஷணும்
கன்யாபிஹி: கரவால கேட்ட விலஸத் தஸ்தா பிராஸேவிதாம் |
ஹஸ்தைஸ்ச க்ரகதா சிசவேட்ட விஷிகஸ்சாபம் குணாம் தர்ஜனீம்
விப்ராண மன லாத்மிகாம் சசிதராம் துர்க்காம் திரிநேத்ராம் பஜே ||

—சண்டி தியான சுலோகம்

அண்ட சராசரம் யாவுமாகி இந்த பிரபஞ்சத்தையே இயக்கி வரும் பராசக்தியை பத்து வடிவங்களாக அனுபூதிமான்கள் பிரித்திருக்கிறார்கள். இவர்கள் காளி, தாரா, திரிபுரசுந்திரி, புவனேஸ்வரி, திரிபுரபைரவி, சின்னமஸ்தா, தூமாவதி, பகளாமுகி, மாதங்கி, கமலாத்மிகா. சில தந்திரங்கள் 18 மகா வித்தைகளைக் குறிப்பிடுகின்றன.

தாரா, சத்வகுணாத்மிகா, தத்வ வித்யாதாயினி, மகா திரிபுர சுந்திரி, புவனேஸ்வரி, சின்னமஸ்தா இவர்கள் ராஜப்பிரதான, சத்வ குணாத்மிகா. ஆகவே அவர்கள் ஞான முக்தி அளிக்கவல்லவர்கள். தூமாவதி, பகளா, மாதங்கி, கமலா, இவர்கள் தமஸ் பிரதானமுள்ளவர்கள். சத்கர்மாக்களுடன் வழிபட வேண்டியவர்கள். சுருங்கக்கூறின் மகாதேவியின் இந்த பத்து ரூபங்களும் சௌபாக்கியத்தையும், மோக்ஷத்தையும் அளிக்கவல்லதே.

காளி

பத்து மகா வித்தைகளில் காளி, சுத்த சத்துவ குண பிரதான நிர்விகாரா நிர்க்குண பிரம்ம ஸ்வரூபமாக உள்ளவள். கைவல்யத்தை தரக்கூடியவள் காளியேதான். காமதேனு தந்திரத்தில் 'கைவல்யத்தை அளிக்கக் கூடியவள் காளி ஒருவளே' என்று சிவபெருமான் குறிப்பிட்டுள்ளதாகக் காணப்படுகிறது.

முதல் மகா வித்யையான காளிகாவுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நிகமா கல்பதரு ''எல்லா சாதகர்களைக் காட்டிலும் சாக்தர்கள் மேம்பட்டவர்கள்; சாக்தர்களில் காளி மந்திரத்தைக்கொண்டு வழிபடுபவன் சிறந்தவன்'' என்கிறது. பிச்சிலா தந்திரம் எல்லா தேவதைகளின் மந்திரங்களைவிட காளிகா மந்திரம் சிறந்தது என்கிறது. மிகவும் பாபம் செய்தவனும் இந்த காளிகா மந்திர அனுஷ்டானத்தால் நற்கதி அடையலாம் என்று மோகினி தந்திரம் கூறுகிறது.

பகளாமுகி

காளி ஒரேயடியாக அழிக்கிருள். பகளாமுகியோ செயல், முன்னிலும் நிரம்பட நடைபெறும் பொருட்டுச் செயலைத் தடைப்படுத்துபவள். பிறகு விட்டுவிடுகிருள்—மூச்சை இறுக்கிப் பிடிப்பது தடை போடத்தான். ஆனால் இம்மாதிரி சிறிதுபோது செய்து பிறகு அதை விட்டால் அதுவே உயிர் வளர்க்கும் பிராணு யாமம் ஆகிறதல்லவா? இப்படிப் பிடித்து வைப்பதை 'ஸ்தம்பனம்' என்பர். பகளாமுகி குறிப்பாக வாக் ஸ்தம்பனக்காரி. அதாவது பேச்சைத் தடுத்து நிறுத்துபவள். அதன் மூலம் அவர்களைச் சிந்திக்கச் செய்பவள். இவள் தனது இடது கையால் ஒருவனின் நாவைப் பிடித்திருப்பதாகவும், வலது கையால் கதை தாங்கி அவனது சிந்தனையை அடித்து வீழ்த்தத் தயாராக இருப்பதாகவும் சித்திரிக்கப்படுகிருள். 'வல்கா' என்ருல் 'லகான்'. எதிராளியின் வாயில் (முகத்தில்) லகான் போட்டுத் திணற அடிக்கும் வல்கா முகியே வகலாமுகி யானதாகச் சொல்வோர் உண்டு. வடமொழி யில் 'வ'வும் 'ப'வும் ஒன்றுக்கொன்று மாறும்.

இவளது நிறம், ஆடை, ஆபரணம், ஹாரம் யாவும் மஞ்சள், பொன்னைப்போல் ஒளியை வெளிவிட்டுப் பளிச்சிடாமல், தனக் குள்ளே அமுக்கி வைத்துக்கொள்வது மஞ்சள் நிறம். சிற்றறிவின் நிறம் மஞ்சளே என்றும் இதுவே செம்மையான உள்ளறிவு பொங்கி வருவதைத் தடுப்பது என்றும் கூறுவதை இங்கு பொருத்திப் பார்க்க வேண்டும். இவளை உபாசிப்பவனும் மஞ்சள் ஆடை உடுத்தி, மஞ்சள் கிழங்குகளான ஜப மாலையை உருட்டி இவளது மந்திரத்தை ஜபிக்க வேண்டும். அவனுக்கு வாதங்களில் வெற்றி கிடைப்பது மட்டுமின்றி, ஜல ஸ்தம்பனம், அக்னி ஸ்தம்பனம் ஆகியன செய்து நீருக்குள்ளும், நெருப்புக்குள்ளும் நீண்ட நேரம் நிலைகுலையாமல் வாழும் சித்தி கைகூடும், ஓரிடத்தில் உள்ள மேகத்தை அங்கேயே ஸ்தம்பனம் செய்து இறுகுவித்து மழையாகப் பொழியும்படி செய்கிற ஆற்றல் உண்டாகும். இவளே வாராஹி.

சின்னமஸ்தா

காளியின் பயங்கரத்தையும் அற்பமாக்கும் ஒரு கோரம் உண் டெனில் அது சின்னமஸ்தாவே ஆகும். காளி கால ரூபத்தில் ஒரு நியதிக்கு அடங்கியே வெளி உருவை அழிக்கும் பிராண சக்தி. இவளோ எதற்கும் அடங்காமல் தத்க்ஷணமே வெளி உருவை அழித்து உள் அனுபவத்தைத் தரும் மின்சக்தியாம் வித்யுத் சக்தி. நம் பூர்வீக ரிஷிகளுக்கு மின்சாரம் எவ்வளவு நன்ருக தெரியும் என்பது இவளைப்பற்றி அறிந்தால் வெள்ளிடைமலையாகிறது.

நெருப்புச் சக்தியான 'வஜ்ர வைரோசனி'யே சின்னமஸ்தா. மனிதனின் முதுகெலும்பில்தான் மின்சாரச் சக்தி ஓடுகிறது. ததீசி போன்ற முனிவரின் விஷயத்தில் அது ஜீவனின் அற்ப சக்தி

யாக இல்லாமல் ஜீவாதார பராசக்தியாகவே உள்ளது. புருவ மத்தியில் இடை, பிங்கலை, சுஷும்னை என்னும் மூன்று நாடிகளும் கூடுமிடத்தில் இதன் மின்வெட்டை மகா யோகியர் உணருகின்றனர். இந்த மின்னல் சிர உச்சியில் மூட்டினால் அங்கிருந்து அமுதப் பிரவாகமே சகல நாடிகளிலும் சொரியும். இந்திரிய நிக்கிரகத்தின் வடிவம் இவள் என்பதாலேயே, ரதிமதன ஜோடியரை மிதித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு கையில் வெட்டப் பட்ட ஒரு தலை. யாருடைய தலை? சாட்சாத் இவளுடையதே தான்! அதனால்தான் இவளுக்கு சின்னமஸ்தா என்றே பெயர். (சின்ன-துண்டித்த; மஸ்தா-தலையினள்) இந்திரியங்கள் போனால் போதாது; அகங்கார மனம் தொலைய வேண்டும் என்று காட்டத் தன் தலையையே கொய்து கொண்டிருக்கும் தியாக ஸ்வரூபிணி இவள்.

வெட்டிய கழுத்திலிருந்து முன்பு சொன்ன மூன்று நாடிகளினின்று மூன்று குருதி ஊற்றுக்கள் பீச்சிடுகின்றன. வாருணி, டாகினி என்ற இவளது சேடியர் இருவர் இடை, பிங்கலையிலிருந்து வரும் குருதியைப் பருகுகின்றனர்; இவளது வெட்டுண்ட தலையே மத்ய நாடியாம். சுஷும்னையின் சக்தியைப் பருகுகிறது. இடி, மின்னல், என்ற அடையாளங்களைக் காட்டி ஒலி, ஒளி என்ற இரு சக்திகளைப் பிரம்மத்திலிருந்து பேதப்படுத்தி வெளிக் கொணர்ந்த மகா சக்தி ஒவ்வொரு ஜீவனிலும் இந்த ஒலி ஒளிகளோடு ஞானமாகவும் புகுகிறாள். இம் மூன்று நாடிகள் மூலமாக. அதையே இந்த மூவரின் ரத்த பானம் சித்தரிக்கிறது. மீண்டும் மூலத்தில் தோய வேண்டுமாயின் ஜீவ முடிச்சை வெட்ட வேண்டும். அதனால்தான் இவள் ஒரு கரத்தில் கத்திரிக்கோல் வைத்திருக்கிறாள். ஆக இவளது உருவம் கொடுமையா யிருப்பினும் செயலோ மிக மதுரமாக இருக்கிறது. அபய வரஹஸ்தங்களை இவளும் காட்டுகிறாள்!

தூமாவதி

சின்னமஸ்தாவிடம் எத்தனைக்கெத்தனை வேகம் பொங்குகிறதோ, அத்தனைக்கத்தனை சாம்பி, சோம்பிக் கிடப்பவள் ஒருத்தி உண்டெனில், அவளே தூமாவதி. ஒன்று அழிவதற்கும் மற்றொன்று உண்டாவதற்கும் இடையில் செயலற்றதோர் இடைவெளி உண்டல்லவா? அதுவே இவள். இது உண்மையில் பாழிடம்தானா' ஒன்றின் நிறைவும் அதில்தான்; இன்னொன்றின் வித்தும் அதில்தான். அதை எப்படிச் சூனியம் எனலாம்? எனவேதான் இவளை 'இருட் சக்தி' என்னாமல் 'புகைச் சக்தி' என்பர். (தூமம்-புகை) புகை, இருள் போலத்தான் இருக்கிறது. ஆனால் ஒளிமய அக்கினி இன்றி இது இல்லையே! மகாவிஷ்ணுவின் யோக நித்திரை இவளேயாவள்.

இதனால்தான் எதையுமே சிதைத்து, தப்பர்த்தம் கற்பித்துக் காட்டுகிற ஏமாற்றுச் சக்திக்கும் தூமாவதி அதிதேவதையாக

கூறப்படுகிருள். இது ஆக்க சக்தி அல்லவே! இதனுல்தான் இவள் வெளியிப் போனவளாகச் சித்தரிக்கப்படுகிருள். இவள் தளர்ந்தவளாக, அங்கங்கள் தொங்கித் தளர்ந்து பல்லிழந்து சீவாத முடியும், அழுக்கு உடையுமாகக் காட்சி தருகிருள். போதாததற்கு காக்கைக் கொடி வேறு!

ஆனுல் இதென்ன, இவளுடைய ஒரு கையில் முறம்? அது தவிட்டைப் புடைத்து அரிசியை மட்டும் தேக்க வைக்கும் உத்தமமான உபகரணம் அல்லவா? அதேபோல் இவளது மற்ற கரமும் வரம் நல்கும் உத்தம பாவத்தில் அல்லவா உள்ளது? ஆம், அசங்கியமாகத் தோன்றும் தூமாவதிதான் நம் சிந்தனை என்கிற தவிட்டை புடைத்து, உண்மை மயமான ஆத்ம அரிசி மட்டுமே நிற்கிற தூக்க நிலையை நமக்கு அன்றன்றும் அளித்துக் களைப் பாற்றும் கருணைத் தாய். ஆனுல் இந்நிலையில் நாம் ஆத்மாவை உணராமல் பாழ்மாதிரிக் கிடக்கிருேம். அதனுல் இவளும் பாழ் நெற்றியாக இருக்கிருள். தசா மகா வித்யைகளுள் இவள் ஒருத்தியே விதவை. ஆத்மன் என்கிற புருஷன்—பரம—புருஷன் பெரும் ஆள்—பெருமாள் உறங்கிக் கொண்டே இருக்கும்போது இவள் புருஷனற்றவள் போலத்தானே இருந்தாக வேண்டும்?

திரிபுர பைரவி

திரிபுரசுந்தரி அன்பின் வடிவம். பைரவம் என்ருல் அச்சமூட்டுதல். இவள் திரிபுர பைரவி. ஆனுல் கோரச் செயல் செய்து அச்சமூட்டவில்லை. தங்களது மகிமை காரணமாகவே சிலர் தம்மை நாம் அணுகவொட்டாமல் அச்சுறுத்தவில்லையா? அப்படித் தபோ சக்தியாலேயே நமக்கு 'பைரவி' ஆனவள்.

தவம் என்ருலே எரிப்பது என்று பொருள். சிந்தனை ஒருமுகப்படுவதன் தீவிர நிலையே தவம். அது அக்கினி மாதிரியானது. 'அக்னிவர்ணும், தபஸா ஜ்வலந்தீம்' என்று வேதம் போற்றும் துர்க்கை இவளுள் கலந்து நிற்கிருள்.

தவத்தில் ஒன்றையே எண்ணுவதால் மற்றவற்றை விட்டுத் தானே ஆகவேண்டும்? இவளது தவம் எதற்கு? உலகை விடுவதற்கு மற்றவர்கள் தவம் புரிவர் என்ருல் இவளோ உலகை உண்டாக்க வேண்டும் என்பதற்கே தவம் புரிகிருள். இவளது உபாஸனு மார்க்கமும் ஸ்ரீவித்யா என்றே பேசப்படுகிறது. மூலாதாரத்தில் இவள் தபோக்கினியாகக் காந்தினுலும், சிரத்தில் ஸஹஸ்ரார உச்சிக்கு ஆரோகணித்து சுந்தரி ஆகும்போது அமுத மழை வர்ஷிக்கிருள். ஜடமில்லை இவள்; ஞானமாதா எனக் காட்டவே ஜபமாலையும், ஞான முத்திரையும் தாங்கியிருக்கிருள், அபயம் தந்து, வர முத்திரையும் காட்டுகிருள். நெற்றியில் ஞானக் கண்ணேடும், இதழ்களில் புன்னகையோடும் காணப்படுகிருள். ஞானமுதம் பாய்ச்சுவேன் எனக் காட்டவே அமுதத்தைப் பிறப்பிக்கும் மதியைத் தலையில் சூடியிருக்கிருள்.

இதிலுள்ள ஒன்பது துர்க்கைகளும், கொல்லூர் மூகாம்பிகையும் பத்து திக்குகளிலிருந்து நம்மை காத்து ரக்ஷிக்கின்றனர். அவர்களது தியான சுலோகங்களும், மூலமந்திரங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.*

நவ துர்க்கா த்யானம்

துர்கே சூலினி ஜாதவேதஸி மஹாசாந்த்யாஹ்வயே சாபரி
ஜ்வாலா துர்க்ஸிவராபிதே லவணகே தீபாபிதே ஹ்யாஸுரி ।
ஏஹ்யம்பே புரதோ மமாத்ய பயக்ருத்ரோகாரி பீடாதிமான்
வித்வஸ்தான் குரு தேஹி ஸௌக்யமதுலம் பக்திம்
ததாவ்யஹதாம் ॥

செவ்வாய்கிழமை, ராகுகால பூஜைக்கு எல்லா துர்க்கையுமே ஏற்றவள். திருவாரூர் பிரகாரத்திலுள்ள துர்க்கைக்கு ராகுகால துர்க்கை என்றே பெயர். இமயத்தில் ஜோதிர்மடம் என்ற ஊரில் நவ துர்க்கா ஆலயம் உள்ளது.

மூல துர்க்கை

இவள் சர்வ தேவதைகளின் சக்தியினின்று தோன்றியவள். இவளேதான் அஷ்ட தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கை. மூன்று சக்திக்கும் மூலமானவள்.

தியானம்

ஸிம்ஹஸ்தா சசிசேகரா மரகத ப்ரக்யை : சதுர்பிர் புஜை :
சங்கம் சக்ர தனு : சராமஸ்ச ததநீ நேத்ரை : த்ரிபி : சோபித : ।
ஆமுக் தபங்கத ஹார கங்கண ரணத் காஞ்சீ ரணந் நூபுரா
துர்கா துர்கதிஹாரிணீ பவதுவோரத் ஞேல்லஸத் குண்டலா ॥

மூலமந்திரம்

'ஓம் ஹ்ரீம் தும் துர்காயை நம :'

அஷ்ட தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

அஷ்டா தசபுஜா மத்யே வாமே சாஸ்ய தசானனு ।
தக்ஷிணேஷ்டபுஜாலஷ்மீர் மஹதிதி ஸமர்சகயேத் ॥

---

* ''ஸ்ரீவித்யா உபாசக ரத்னம்'' ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளை (ஆச்சாள்புரம்) தேவியின் கிருபைக்கு பூரண பாத்திரமானவர். அவர் இலவசமாக வெளியிட்டுள்ள 'ஸ்ரீ நவ துர்க்கா' என்ற புத்தகத்திலிருந்து இம்மந்திரங்கள் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பதினெட்டு கைகளுடன் கூடிய (சப்த சதி மத்யம சரித்திர) மகாலக்ஷ்மியையும், இடது பக்கத்தில் பத்து முகங்களுடன் கூடிய (பிரதம சரித்திர) மகா காளியையும் வலது பக்கத்தில் எட்டு கைகளுடன் கூடிய (உத்தர சரித்திர) மகா சரஸ்வதியையும் வைத்து பூஜிக்கவேண்டும்.—சப்த சதி—வைக்ருத்ய ரகஸ்யம்.

இந்த அஷ்ட தசபுஜ மகாலக்ஷ்மி சந்நிதிகள் வெகு சிலதான். தருமையாதீனத்திலுள்ள கோவிலிலும், சேலம், இடப்பாடி ஸ்ரீ கந்தாஸ்ரமத்தில் ஸ்ரீமத் சாந்தானந்த சுவாமிகள் அனுக்கிரகம் காரணமாக காட்சி தரும் துர்க்கையும் தரிசிக்க வேண்டியவர்கள். மலேயாவில் இந்த துர்க்கை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள். ஆச்சாள்புரம் ஆலயத்திலும் இவளை தரிசிக்கலாம்.

வன துர்க்கை

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தில் 'ஆத்ம வித்யா, மகா வித்யா, ஸ்ரீவித்யா, காம சேவிதா' என்கிற நாமத்திற்கு ஸ்ரீ பாஸ்கர ராயர் பாஷ்யம் எழுதுகையில் 'மகா வித்யா' என்றால் வன துர்க்கை என்று குறிப்பிட்டிருக்கிறார். வனம் என்றால் காடு. வன துர்கா என்றால் தன்னிடம் சரணடைந்தவர்களை சம்சாரமாகிய காட்டிலிருந்து காப்பாற்றுபவள் என்று அர்த்தம்.

தியானம்

ஸௌவர்ணாம்புஜ மத்யகாம் த்ரிநயனாம் ஸௌதாமினி ஸந்நிபாம்
சக்ரம் சங்க வராபயாநி தததீம் இந்தோ : கலாம் பிப்ரதீம் ।
க்ரைவேயாங்கத ஹார குண்டலதராம் ஆகண்டலாத்யை :
ஸ்துதாம்
த்யாயேத் விந்த்ய நிவாஸினீம் சசிமுகீம் பார்ச்வஸ்த பஞ்சா-
னனாம் ॥

மூலமந்திரம்

''ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் தும் உத்திஷ்ட புருஷி கிம் ஸ்வபிஷி
பயம் மே ஸமு பஸ்திதம் । யதிசக்ய மசக்யம்வா தன்மே
பகவதி சமய ஸ்வாஹா''

தருமபுர ஆதீனத்தில் ஆனந்த பரவசர் பூங்காவில் வன துர்க்கை ஸிம்ஹ வாகினியாக கோயில் கொண்டிருக்கிறாள்.

கம்பர் வழிபட்ட வன துர்க்கை

நவ துர்க்கா ஸ்தலங்களில் ஒன்று கதிராமங்கலம். இது குற்றாலத்திற்கும், நரசிங்கன் பேட்டைக்கும் இடையில் உள்ளது. காவிரி இங்கு உத்தரவாஹினியாக ஓடுகிறாள். இங்குள்ள வன துர்க்கை மிருகண்டு முனிவரால் பூஜிக்கப்பட்டவள். இவள் அருள் பரிபூரணமாகப் பெற்றவர் கம்பர்.

ஒருநாள் பெருமழை பெய்து கம்பர் வசித்த வீட்டுக் கூரையின் கீற்றுகள் காற்றில் பறந்துவிடவே ஒழுகலாயிற்று. கம்பர் இந்த வன துர்க்கையைப் பிரார்த்தித்து கண்ணயர்ந்து விட்டார். காலையில் எழுந்தபோது கூறை நெற்கதிர்களால் வேயப் பட்டிருப்பது கண்டு ஆச்சரியப்பட்டு கதிர் வேய்ந்த மங்கலம் என்று சிறப்பித்துப் பாடினார். இதற்கு சிவமல்லிகா வனம் என்ற பெயரும் உண்டு.

பொன்னியின் வயலோங்கி பூசுரர் நிலைத்து வாழும்
தன்னிகர் கம்பன் வாழ்ந்த தனி நகராகும் வெண்ணெய்
பொன்னகரமமர்ந்த துர்க்காதேவி பொற்பாதம் போற்றிப்
பன்னரும் புகழும் பொன்னும் பதவியும் பெற்று வாழ்வோம்.

சூலினி துர்க்கா

திரிபுர ஸம்ஹாரம் செய்ய முனைந்த சிவபெருமானுக்கு சக்தி கொடுத்து அவருக்கு உறுதுணையாய் சூலமேந்திய கையுடன் இருந்ததால் சூலினி துர்க்கா எனப் பெயர் பெற்றாள்.

பெரும்பாலும் துர்க்கை காளி உருவங்கள் எந்த ஆயுதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சூலம் இல்லாமல் இருக்காது. அம்பர் மாகாளம் காளி சூலினியாகவே விளங்குகிறாள். இவள் கன்னியாகவே இருப்பவள். பயக்ஷயாம்பிகை என்ற நாமத்துடன் விளங்குகிறாள். பூஜிப்பவர்கூட கையினால் தொடாது கோலால் ஆடை மாலை அணிவிப்பர்.

தியானம்

பிப்ராணு சூல பாணுஸ்யரி ஸதர கதா சாப பாசான் கராப்ஜை:
மேக ச்யாமா கிரீடோல்லிகித ஜலதரா பீஷணுபூஷணுட்யா ।
ஸிம்ஹஸ் கந்தா திரூடா சதஸ்ருபிரஸிகேடான் விதாபி: பரீதா
கன்யாபி: பின்ன தைத்யா பவது பவபயத்வம் ஸினீ சூலினீ வ: ॥

மூலமந்திரம்

ஜ்வல ஜ்வல சூலினி துஷ்டக்ரஹ ஹூம் பட் ஸ்வாஹா

திரிபுரதகனம் நடைபெற்ற தலம் என்று தமிழ் நாட்டில் இரு இடங்கள் பிரசித்தம். ஒன்று திருவதிகை, மற்றொன்று திருவிற் கோலம் எனப்படும் கூவம். திருவதிகையில் காளி சூல பாணி யாகவே காணப்படுகிறாள்.

கூவம் என்ற ஊருக்கு திருவிற்கோலம் என்றும் பெயர். திரிபுர தகனத்தின்போது சிவபெருமான் மேருவை வில்லாக வளைத்ததால் இப் பெயர். அவருடைய தேர் விநாயகரை பூஜிக்காததால் அச்சு முறிந்தது. தேரின் அச்சுக்கு கூபரம் என்று பெயர். கூபரம் கூவரமாகி கூவமாகிவிட்டது.

இங்குள்ள காளி இறைவனோடு வாதுக்கு அழைத்ததால் தர்க்கமாதா என்று அழைக்கப்படுகிறாள். இந்த தர்க்கமாதா இப்போது தக்காத்தாள் ஆகிவிட்டது. இறைவன் பெயர் திரிபுராந்தகேஸ்வரர்.

ஜாதவேதோ துர்க்கா

சிவன் நெற்றிக் கண்களிலின்றும் எழுந்த தீப்பிழம்பை அக்னி சுவரூபமாக இருந்து கங்கையில் கொண்டுபோய் சேர்த்தவள் இவள்.

தியானம்

வித்யுத்நாம ஸமப்ரபாம் ம்ருகபதி ஸ்கந்தஸ்திதாம் பீஷணாம்
கன்யாபி: கரவாள கேட விலஸத் ஹஸ்தாபி ராஸேவிதாம் ।
ஹஸ்தைஸ் சக்ர கதாஸி கேட விசிகான் சாபம் குணம் தர்ஜநீம்
பிப்ராணா மனலாத்மிகாம் சசிதராம் துர்காம் த்ரிநேத்ராம் பஜே ॥

மூலமந்திரம்

ஜாதவேதஸே ஸுனவாம ஸோம மராதியதோ நிதஹாதிவேத:
ஸந: பர்ஷததி துர்காணிவிச்வா நாவேவ ஸிந்தும் துரிதாத்யக்னி:

சாந்தி துர்க்கா

கடன் ரோகம் பிசாசு உபத்திரவங்கள் இவைகளை ஒழிப்பதாலும் தக்ஷ யக்ஞத்தில் சிவனுக்கு உண்டான கோபத்தை பராசக்தி தணித்த காரணத்தினாலும் சாந்தி துர்க்கை எனப் பெயர் பெற்றாள்.

தியானம்

சங்கம் சக்ரமஸிம்ச சர்மச சரம் சாபம் கதாம் சூலகம்
பிப்ராணா வரதாபயா ம்ருதகடான் ரத்நௌக பாத்ரம் ததா ।
பூஷாபிர் மகுடாதிபி: பரிவ்ருதாம் ஹேமாம்பரா மம்பிகாம்
த்யாயேத் சந்த்ரகலான்விதாம் ஸுரகணைரீட்யாம்
ஜகன்மங்களாம் ॥

மூலமந்திரம்

ஓம் துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே

கோவாவில் சாந்தி துர்க்கைக்கு ஆலயம் உள்ளது.

சபரீ துர்க்கா

அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் அளிக்க சிவபெருமான் சென்றபோது வேட ரூபத்தில் சென்றார். அம்பிகையும் வேட்டுவப் பெண் கோலத்தில் சென்றாள். வேட்டுவ கோலம் பூண்டதால் சபரீ என்றழைக்கப்படுகிறாள்.

தியானம்

குஞ்ஜா பலா கல்பித ஹாரரம்யாம்
சுருத்யோ: சிகண்டம் பிகிநோ வஹந்தீம் |
கோதண்ட பாணௌ ததநீம் கராப்யாம்
கடிஸ்த வல்காம் சபரீம் ஸ்மராமி ||

மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்ரோம் ஐம்

ஜ்வாலா துர்க்கா

ஸ்ரீ லலிதாவேி பண்டாசுரனோடு சண்டையிடும்போது சத்ரு சேனை உள்ளே வராதிருக்க ஜ்வாலையாக இந்த துர்க்கை நின்று சக்தி சேனையைக் காப்பாற்றினாள்.

தியானம்

ஜ்வாலா மாலா வலீடா ஜ்வலந சரதனு: சங்க சக்ராஸிகேடான்
சூலம் ஸந்தர்ஜநீம்யா கரஸரஸிருஹை: ஸந்ததானா த்ரிநேத்ரா |
ஔர்வாக்னிம் ஸங்கிரந்தீ ரணபுவி திதிஜான் நாசயந்தீபராஸா
துர்கா ஜாஜ்வல்யமானா பவது மமஸதா
ஸிம்ஹஸம்ஸ்தா புரஸ்தாத் ||

மூலமந்திரம்

ஹ்ராம் ஹ்ரீம் ஸௌ: க்லௌம் ஐம்ஸ்ரீம் ஜ்வத்துர்கே ஏஹ்யேஹி, ஸ்புரப்ரஸ்புர ஆதிவிஷ்ணு ஸோதரி, அஸ்த்ர ஜ்வலத்துர்கே, ஆவேசயாவேசய ஜ்வலத்துர்காய வித்மஹே ஜாஜ்வல்யவானாயதீமஹி | தன்னோபடபா நல: ப்ரசோதயாத் || வலமவரயூம் ஜ்வலத் துர்காஸ்த்ரே ஹூம் பட்ஸ்வாஹா ||

லவண துர்க்கா

லவணாசுரன் உலகத்திற்கு தீங்கிழைத்தான். அவனை அழித்து வரும்படி ராமர் லக்ஷ்மணனுக்குக் கட்டளையிட்டார். லக்ஷ்மணன் வெற்றியுடன் திரும்பி வரவேண்டும் என்று ராமர் துர்க்கையைப் பிரார்த்தித்தார். அவளே லவண துர்க்கை.

தியானம்

கரகமல விராஜத் சக்ரசங்காஸி சூலா
பரிலஸிதகிரீடா பாடிதானேக தைத்யா |
த்ரிணயனல ஸிதாங்கி திக்ம ரச்மி ப்ரகாசா
பவன ஸகநி பாங்கீ லாவணீ பாது துர்கா || பாது காத்யாயனீவ: ||

மூலமந்திரம்

ஓம் சிடி சிடி சண்டாள்யை மஹா சண்டாள்யை அமுகம் மேம் வசமானய ஸ்வாஹா.

தீப துர்க்கா

குண்டலினி யோகத்தில் ஈடுபட்ட யோகிகளுக்கு இந்த சக்தியானவள் அவர்கள் ஹிருதயத்திலுள்ள அக்ஞானத்தைப் போக்கி ஞான ஒளி வீசச் செய்கிருள்.

தியானம்

தீப துர்கா மஹாதேவி அத்யாச்சர்ய ஸ்வரூபிணி ।
தீ பாக்ருதிர் திவ்யதேஹா வதுஸர்வம் ஜகன்மயி ॥
ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் மஹாதேவி ப்ரத்யக்ஷம் மமதேவதா ।
பூஜயே தேவி ப்ரத்யக்ஷம் ஸர்வகார்ய ப்ரவேதனே ॥

மூலமந்திரம்

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் அமும் துர்கே ஏஹ்யேஹி ஆவேசய ஆவேசய க்ரோம் தும் துர்கே க்ரோம் ஹ்ரீம் ஆம் ஹூம் பட் ஸ்வாஹா.

ஆஸுரி துர்க்கா

தேவர்களும் அசுரர்களும் அமிருதம் கடைந்தபோது தேவர்கள் அமிருதம் பெறவும் அசுரர்களுக்கு அமிருதம் கிடைக்காது போகவும் இவள் அசுரர்களை மோகிக்கும்படிச் செய்து தேவர்களுக்கு அருளினுள்.

தியானம்

சரச்சந்த்ர காந்தி : வராபீதி சூலான்
ஸ்ருணிம் ஹஸ்த பத்மை : ததானாம்பு ஜஸ்தா ।
விபூஷாம் பராட்யாஹ்ரியஞ்ஞோபவீதா
முதேநா தர்வ புத்ரி கரோத்வாஸுரி ந : ॥

மூலமந்திரம்

ஓம் கடுகே கடுகபத்ரே ஸுபகே ஆஸுரி ரக்தே
ரக்த வாஸஸே அதர்வணஸ்ய துஹிதே அகோரே கோரகர்ம
காரிகே அமுகஸ்ய கதிம் தஹ தஹ உபவிஸ்டஸ்ய குதம் தஹ
தஹ ஸுப்தஸ்ய மனோ தஹ தஹ ப்ரபுத்தஸ்ய ஹ்ருதயம்
தஹ தஹ ஹன ஹன பச பச தாவத்தஹ தாவத்பச யாவன்
மேவசமாயாதி ஹூம் பட் ஸ்வாஹா ॥

ஜய துர்க்கா

அர்ஜுனனும் ராமரும் போரில் வெற்றிபெற வழிபட்டது இவளைத்தான்.

தியானம்

காலப்ராபாம் கடாக்ஷை ரரிகுலபயதாம் மௌளிபந்தேந்து ரேகாம்
சக்ரம் சங்கம் க்ருபாணம் த்ரிசிகமபி கரைருத்வஹந்திம்
த்ரிநேத்ராம் ।
ஸிம்மஸ்கந்தா திருடாம் த்ரிபுவனமகிலம் தேஜஸா பூரயந்திம்
த்யாயேத்தூர்காம் ஜயாக்யாம் த்ரிதசபரிவ்ருதாம் ஸேவிதாம்
ஸித்திகாமை : ॥

மூலமந்திரம் ஓம் துர்கே துர்க்கே ரக்ஷிணி ஸ்வாஹா ।

மூகாம்பிகை

தியானம்

பாஸ்வத் ரத்னாபரண வஸனாலங்க்ருதே சாருஹஸ்தை :
சங்கம் சக்ரம் வரத மபயம் ஸம்வஹந்தி த்ரிநேத்ரீ ।
ஹேம ப்ரக்யே ப்ரணதவர ஸந்தாத்ரி பத்மாஸனஸ்தே
காருண்யார்த்ரே பகவதி மஹாலக்ஷ்மி மாம் ரக்ஷ நித்யம் ॥

மூலமந்திரம்

ஓம் ஐம் கௌரி ஐம் கௌரி ஐம் பரமேச்வரி ஐம் ஸ்வாஹா ।

மலையாளிகளுக்கு மிகவும் முக்கியமான தெய்வம். ஆதிசங்கரருடன் தொடர்புள்ள தலம் கொல்லூர். இத்தலம் பெருமைபற்றி ஸ்காந்த புராணத்தில் மூன்று அத்தியாயங்களில் வருணிக்கப் பட்டுள்ளது. கம்ஹாசுரன் என்பவனை தேவி பைரவியாக அவதரித்து சம்ஹரித்த தலம். இவள் அசுரனை ஊமையாக்கியதால் மூகாம்பிகை எனப் பெயர். சந்நிதியில் ஸ்ரீசக்கிரம் உள்ளது.

மூகாம்பிகையைத் தரிசிப்பதற்கு வருவோர் முதல் நாள் 'க்ஷேத்ரோபவாசம்' என்ற விரதம் அநுஷ்டிப்பது வழக்கம். மறு நாள் சங்கல்பம் ஆனதும் சௌபர்ணி நதியில் ஸ்நானம் செய்வார்கள். பிறகு தட்டில் தேங்காய், பழம் எடுத்துக்கொண்டு அதை விட்டுக் கண்ணை எடுக்காமல் நேராக அம்பிகையைத் தரிசிக்கப் போவார்கள். கோவில் வாசலில் வீரபத்திரருடைய பிரும்மாண்டமான சிலை ஒன்று இருக்கிறது. தேவியைத் தரிசிப்பதற்கு முன் அந்த வீரபத்திரரின் சிலையைப் பார்க்கக் கூடாது என்கிறார்கள். அப்படிப் பார்த்தால் அவர்களுடைய மனோரதம் ஈடேறாதாம். இரவில் மிளகும், வெல்லமும், இன்னும் பல பொருள்களும் சேர்த்த ஒரு பானகத்தைக் கடைசியாக நிவேதனம் செய்வது வழக்கம். இங்கே தங்கினால் குளிர் ஜுரம் வந்துவிடும்; இந்தப் பானகந்தான் அதற்கு மருந்தாக உதவுகிறது.

மூகாம்பிகை திருவுரு தங்ககவசம்தான். காதணிகளாக இரத்ன ஸ்ரீசக்ரங்கள் மின்னுகின்றன. தேவியின் முன்பு ஜோதிர்லிங்கம் காணப்படுகிறது. இங்கு அம்பிகைலிங்க உருவிலேயே இருக்கிறாள். லிங்கத்தின் மத்தியில் தங்க ரேகை ஓடுகிறது. இது அர்த்தநாரீ சொரூபம். சௌபர்ணீ நதிக்கரை ஸ்நானம் கட்டத்தில் ஆதிசங்கரர் வன துர்க்கையைப் பிரதிஷ்டை செய்கிறார்.

திருவிடைமருதூரில் அம்மன் சன்னிதிக்கருகில் மூகாம்பிகைக்கு சன்னிதியுள்ளது. தவம் செய்யும் திருக்கோலத்தில் இருக்கிறாள். இம் மூகாம்பிகை மிகவும் வரசித்தி யுடையவள் அவளுக்கு முன்பு மேரு இருக்கிறது. இந்த மூகாம்பிகை ஆலய கோபுரம் தென்னாட்டு கோபுரம் போல இராது. ஏதோ ஊசிக் கோபுரம் போல இருக்கும்.

தேவி கீதை 7

தேவி பாகவதத்தில் பராசக்தியே பர்வதராஜனுக்கும், தேவர்களுக்கும் 'தேவி கீதை'யை உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. இது தத்துவ ரகசியார்த்தங்கள் கொண்டது. அதன் சுருக்கம்:

"நான் சொல்லப்போவதை நீங்கள் கேட்பதிலிருந்தே நீங்கள் அனைவரும் என் சொரூபமாகி விடுவீர்கள்...என்னிடம் என்றுமே நீங்காத மாயை என்ற சக்தியுண்டு. ஆத்மா தன்னிடம் நீக்கமற கலந்துள்ள மாயா காரிய சம்பந்தத்தால் பிறவிக்கே காரணமாக வுள்ள கர்மத்தை அடைகிறது. ஞானத்திற்கு ஆனந்தம் எப்படி நிரந்தரமோ அப்படியே இந்த மாய கர்மமானது ஆன்மாவுக்கு நித்தியமாகும். மாயா காரிய இயக்கத்தினால் ஆத்மாவானது அறிவிலியாகப் பல பிறவிகள் எடுத்து அப்பிறவிகள்தோறும் அதன் கர்மங்கள் கழிந்து வரும்;இது அந்த ஆத்மாவுக்கே தெரியாது.

என் சுய வடிவமோ மாறுதலற்றதாகவும், கண்ணுக்கு புலப் படாததாகவும், மாயையோடு சேர்ந்ததாகவும், சகல காரணங் களுக்கும் காரணங்களாகவும், தத்துவங்கள் அனைத்திற்கும் ஆதிமூலமாகவும், சத்சித் ஆனந்த ரூபமாகவும், இச்சை கிரியை ஞானம் சக்திகளுக்கு இடமாகவும், ஹ்ரீம்கார மந்திரமாகவும் இருக்கிறது. பரமாத்மாவுக்கு பிறப்பும், இல்லை; மரணமும் இல்லை; ஒன்றிலிருந்து உண்டாவதும் இல்லை. கர்மப் பிறப்பும் இல்லை. இது நிலையானது, நித்தியமானது.

மூன்றெழுத்து மந்திரம் ஹ்ரீம்

தேவியைத் தியானித்து பின் தேவியின் பிரதான நாமமாக இருக்கும் மூன்று எழுத்துக்களாகிய மந்திரத்தை தியானார்த்தம், வாசக வாச்சியம் என்ற இரு வழிகளாலும் பாவிக்க வேண்டும். அம் மூன்று எழுத்துகளாவன: ஹகாரம், ரகாரம், ஈகாரம். இம் மூன்று எழுத்துகளுடன் கூடி ஹ்ரீம்காரம் ஸ்வரூபமாகிய துரீய மாகும். இவற்றில் ஹகாரம் என்ற பருவுடல் (ஸ்தூல சரீரம்) ரகாரம் என்று நுண்ணுடல் (சூக்ஷ்ம சரீரம்) ஈகாரம் ஆகிய காரண உடல்-இம் மூன்று அக்ஷரங்களுடன் கூடிய ஹ்ரீம் மந்திரத்தை தியானம் செய்து பிராண அபான வாயுக்களை மூக்கின் மத்தியில் சமநிலையில் நிறுத்தி எதையும் விரும்பாத நிஷ்காம சிந்தையோடு அம்பிகையை தியானிக்க வேண்டும்.

ஜீவாத்மா, பரமாத்மா ஐக்கியத்தையே யோகிகள் யோகம் என்று கூறுகின்றனர். இந்த முக்தியை அடைவதற்கு மூன்று வழிகள். அவை கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம். கர்ம யோகத்தை உடலாலும், ஞான யோகத்தை அறிவாலும், பக்தி யோகத்தை மனதினாலும் தன் வசப்படுத்தலாம்.

பக்தி யோகம், தாமஸ பக்தி, ராஜஸ பக்தி, சாத்வீக பக்தி, என மூன்று வகைப்படும். தாமஸ பக்தி பிறரை வருத்துவதாகவும், ஆடம்பரமாகவும் பொறாமை குரோதங்களுடன் இருந்துக்கொண்டே பக்தி செய்வது. ராஜஸ பக்தி, பிறருக்குத் துன்பம் செய்யாமல் தனக்கு மட்டும் நல்லதை செய்துக்கொண்டு ஒரு இச்சையை வளர்த்துக்கொண்டு பக்தி செய்வது. ஸாத்வீக பக்தி, பாவத்தைக் கழிப்பதற்காக செயல்களனைத்தையுமே ஈசுவரார்ப்பணம் செய்தல்.

கடைசியில் கூறியதுதான் உத்தமம். ''இந்த பக்தி எவனுக்கு உண்டாகிறதோ அவனுக்கு என் அறிவுருவமான சிதாக்னியில் லயிப்பு உண்டாகும். பக்தி, ஞானம் இரண்டிற்கும் வைராக்கியமே எல்லையாக விளங்குகிறது.

இத்தகைய ஞானத்தையும் இந்த ஞானமுள்ள பக்தியும் கொண்டவனது செயல்கள் எதுவாயினும் அது கரும யோகம் எனப்படும். அவை என்னையே எப்போதும் வணங்குதல், வழிபாடு செய்தல், ஜாதி வேற்றுமை பகை உணர்வு இல்லாதிருத்தல், என் தலங்களை தரிசித்தல், என் வரலாறுகளைக் கேட்டல். இத்தகையவன் எதையும் எனக்கு புறம்பானதாக பாவிக்க மாட்டான்.''

தேவியின் விரதங்கள்

தேவிக்குப் பிரியமான விரதங்கள்.

அநந்த திரிதியை விரதம், ரசகல்யாணி விரதம், ஆருத்திரா விரதம், செவ்வாய், வெள்ளி விரதம், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி விரதம், பிரதோஷ விரதம், புரட்டாசி, சித்திரை மாதங்களில் வரும் நவராத்திரி விரதம், சோமவார விரதம்.

ரசகல்யாணி விரதம் என்பது அநந்த திரிதியையோடு கூடிய நாள். ஆருத்திரா, திருவாதிரை நட்சத்திரத்துடன் திருதியை கூடிய நாள். பிரதோஷம் தேவி மகிழ பரமசிவன் அந்த வேளையில் (திரயோதசி) நடனமாடிய நேரம்.

தேவிக்குப் பிரியமான விழாக்கள் ஊஞ்சல் உற்சவம் (டோலோ விழா) பள்ளியறை உற்சவம், திருப்பள்ளி எழுச்சி, வசந்த விழா.

''எனது பக்தர்களுக்கும், சுமங்கலிகளுக்கும், கன்னிகைகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும் உணவளிப்பது எனக்கு மிகுந்த ப்ரீதியை அளிப்பதாகும்'' என்று தேவியே கூறுகிறாள்.

தேவி கிரியையில் தன்னை பூஜிப்பது பற்றி* அம்பிகை கூறுவதாவது: "காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, சுத்தமான இடத்தில் அமர்ந்து, தன் தலையின் மத்தியில் ஒரு மலர்ந்த தாமரை இருப்பதாகப் பாவித்துக்கொண்டு, அதில் குருவை மிருஹீ முத்திரை வைத்து தியானிக்க வேண்டும். பின் மாத்ருகா நியாசமும், ஹ்ருல்லேகா நியாசமும் செய்யவேண்டும். (51 அக்ஷரங்களை உடலில் பல இடங்களில் பாவித்தல் மாத்ருகா நியாஸம்) ஹ்ருல்லேகா நியாஸம் மூலாதாரத்தில் ஹகாரத்தையும், இருதயத்தில் ரகாரத்தையும், புருவ மத்தியில் ஈகாரத்தையும், சிரசில் ஹ்ரீம்காரத்தையும், பாவிக்கவேண்டும்.

என் இடமான இருதயகமலத்தில் பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் ஐந்து பிரேத ஆசனமாக நினைத்து என் பாத மூலத்தில் இருப்பதாக பாவிக்கவேண்டும்.

இந்த பஞ்சகர்த்தர்களும் பஞ்ச பூதங்களுக்கு கர்தாக்களாக இருக்கும்போது இவர்களை பிரேத ரூபமாக ஏன் பாவிக்க வேண்டும்? நான் அவர்களை ஆசனமாகக்கொண்டே சிருஷ்டி, காத்தல், அழித்தல் முதலிய தொழில்களையும் செய்து வருகிறேன்." இந்த ஐவரும் பிரேதங்கள் என்றும், தேவியின் ஆசனங்கள் என்றும் சாக்தேச தந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. (பஞ்சப் பிரேதாசனாசீனா பஞ்சப் பிரும்ம ஸ்வரூபிணி என்கிற லலிதா சகஸ்ரநாம நாமாவலையும் கவனிக்கவும்.)

ஆவரண வேதங்களைப் பூஜித்து என்னை பூஜிக்கவேண்டும். ஹ்ருல்லேகா என்னும் மந்திரமே எனக்கு உகந்ததாதலால் அந்த மந்திரத்தில் கண்ணாடியில் பிம்பம் தெரிவதுபோல நான் விளங்குவதால் அம்மந்திரத்தைக் கொண்டே என் பூஜைக்குரிய எல்லா மந்திரங்களையும் சொல்லவேண்டும்."

---

*சக்தி வழிபாட்டை மந்திர சாஸ்திரங்கள் விரிவாகக் கூறுகின்றன. அம்மந்திர சாஸ்திரங்களை மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) கௌலமார்க்கம். (2) மிச்ரம் (கர்மம் உபாசனை இரண்டும் கலந்தது, (3) ஸமயம் என்னும் சாஸ்திரங்கள். தந்திர சாஸ்திரங்கள் எல்லாமே மோக்ஷத்தையே லட்சியமாகக் கொண்டவை. ஸமயம் (ஸஹ+மய) என்ற வார்த்தைக்கு அர்த்தம். "அவன் நானாதல்" மிச்ரமார்க்கம் யோக சாதனைகள் கொண்டது.

கௌலமார்க்கம் மனிதனின் நீச ஆசைகள் பெற உதவுகிறது. இத்தகைய வாமாசார தந்திரங்கள் அறுபத்தி நான்கு. மஹா ஸம்மோஹன தந்திரம் (நாக்கை அறுத்துக்கொண்டு உபாசித்தல்). கலாவாதம் (காமாசாரமாக வழிபடுவது). த்ரோதலோத்திரம் (64 யக்ஷிணிகளை வசியம் செய்யும் வித்தை) இம்மாதிரி பல. இவை அப்பியசிப்பவனுக்கு நாசமே விளைவிக்கும். இவை பற்றிய முழு விவரங்கள் பிரதிபாவின் 'ஜகந்மாதா லலிதா'வில் காணலாம்.

KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

துர்க்கா, காளி, சண்டி, பகவதி சந்நிதிகள்

யாதுமாகி நின்ருய்-காளி எங்கும் நீ நிறைந்தாய் ;
தீது நன்மையெல்லாம் - காளி !-தெய்வ லீலை யன்ரே ?
பூத மைந்தும் ஆனுய்-காளி! - பொறிகளைந்தும் ஆனுய்;
போதமாகி நின்ருய்-காளி! - பொறியை விஞ்சி நின்ருய் !

—பாரதியார்

துர்க்கா தேவி சந்நிதிகளை மூன்ருகப் பிரிக்கலாம். காளி சந்நிதிகள், சண்டி சந்நிதிகள், பகவதியம்மன் சந்நிதிகள், இம் மூன்று வகை அம்பிகைகளுமே ரௌத்திர ரூப முள்ளவர்கள்தான்.

முன் காலத்தில் வழிபாடு என்ற பெயரால் உயிர் பலிகள் கொடுக்கப்பட்டு வந்தன. வாமாசார வழிபாட்டின்படி வசியம், பில்லி, சூன்யம் முதலியவைகள் நிறைவேற்ற இவ்வழிபாடு உபயோகிக்கப்பட்டது. மது, மாமிசம், மச்சம், மைதுனம் ஆகியவைகளும் சக்தி வழிபாட்டில் அனுசரிக்கப்பட்டு வந்தன. பல இடங்களில் நரபலியும் நிறைவேற்றப்பட்டு வந்தன. இந்த உயிர் பலிகளும் வாமாசார முறை வழிபாடுகளும் தவருன மார்க்கங்கள் என்பதை உணர்த்தி தேவியை ஆத்மார்த்தமாக வழிபட ஏற்பாடு செய்தவர் ஆதிசங்கரர்தான்.

பல சந்நிதிகளிலுள்ள உக்கிரமான தேவதைகளை சாந்த ஸ்வரூபியாக்கி அந்த சந்நிதிகளில் ஸ்ரீ சக்கிரத்தை பிரதிஷ்டை செய்த பெருமை அவருக்கே உண்டு. இனி, சந்நிதிகளுக்குச் சென்று தேவியை தரிசித்து வரலாம்.

துர்க்கா சந்நிதிகள்

மங்களூரிலிருந்து 25 மைல் தூரத்தில் 'கடில்' உள்ளது. நந்தினி நதி இங்கு ஓடுகிறது. பண்டாசுர வதம் நடைபெற்ற தலம் இது. பண்டாசுரனை வதம் செய்ய பராசக்தி அழகிய மோகினியாக ஆடிப்பாடிக் கொண்டு நந்தினி நதிக்கரையில் சுற்றி வருகிருள். அசுரன் இம் மோகினியை சுற்றி அலைகிருன். அவனை மிகவும் அலைக்கழித்தபின் தேவி ஒரு சிவலிங்க உருவில் நந்தினி நதியின் நடுவில் அமர்கிருள். ஆவேசத்துடன் ஓடிவந்த அசுரனை துர்க்கையாக மாறி வதம் செய்கிருள்.

கடில் தலத்தில் தேவி லிங்க உருவமாகவே காட்சி தருகிறாள். பெயர் துர்க்கா பரமேஸ்வரி. அபிஷேகக் காலத்தில்தான் தேவி லிங்க ரூபமாக இருப்பதைக் காண முடியும். மற்ற நேரங்களில் தேவியின் கவசத்தைத்தான் காண முடியும்; ஆலயம் நதியின் நடுவில் இருப்பதால் இருபுறமும் பாலங்கள் உள்ளன.

காசியில் துர்க்கைக்கு ஒரு விசேஷ சந்நிதியுள்ளது. இங்கு ஒரு காலத்தில் நரபலி கொடுக்கப்பட்டு வந்ததாம். ஆதிசங்கரர் அதை நிறுத்தி அம்மனை சாந்த நிலையில் பூஜிப்பதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கிறார். டில்லியில் ராமகிருஷ்ணபுரத்திற்கு அருகில் துர்க்காவாடி என்ற இடத்தில் துர்க்கைக்கு ஒரு சிறு ஆலயம் உள்ளது.

பம்பாய் நகரின் அதிதேவதை மும்பா தேவி துர்க்கையின் அம்சத்தினள்தான். மும்பை நகர் பம்பை நகராகி பம்பாய் ஆகிவிட்டது. பஞ்ச வடியில் ராமன் இருந்தபோது மாரீசன் மானாக வந்ததும், அம்மானைத் துரத்திச் சென்று கொன்றதும் ராமாயணத்தில் படித்திருக்கிறோம். அம் மாயமானைக் கொல்ல ராமனுக்கு சக்தியருளியவளே இத்தேவிதான் என்று அங்கு சொல்கிறார்கள்.

திருநெல்வேலி தாழையூத்துப் பாதையில் கங்கைகொண்டான் என்று ஒரு தலம் உள்ளது. இதற்கருகிலுள்ள பராஞ்சேரியில் சயன துர்க்கை (படுத்துள்ள கோலம்)யை தரிசிக்கலாம்.

பழையாறையிலும், பட்டீஸ்வரத்திலுமுள்ளவர்கள் விஷ்ணு துர்க்கை. பழையாறை துர்க்கை, எட்டு கைகளுடன் காட்சி அளிக்கிறாள். தமிழ்நாடு, ஆந்திர எல்லையிலுள்ள நாகலாபுரம் வேதநாராயணர் கோவிலிலும் அழகான விஷ்ணு துர்க்கை, விநாயகருடன் துவாரபாலகர்கள்போல அமைக்கப்பட்டிருக்கிறாள்.

பல்லவர்களுக்குப் பின் வந்த சோழர்கள் துர்க்கை வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினர். தஞ்சைக்கு அருகில் விஜயாலய சோழன் துர்க்கைக்கு கோயில் எடுத்தான். இவள் உருவம் மிக பயங்கரமானது. இச்சிலையைத் தஞ்சைக் கலைக்கூடத்தில் காணலாம்.

தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பக்கத்திலுள்ள புஞ்சை என்ற ஊரில் துர்க்கையின் மிக அழகான உருவம் உள்ளது. இதற்கருகிலுள்ள சேந்தமங்கலத்தில் சுயம்புவான துர்க்கை இருக்கிறாள். மாயூரத்திற்கு அருகில் மற்றொரு இடமான நனி பள்ளியில் அபூர்வ உருவமுள்ள துர்க்கையைக் காணலாம். மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் இரு கைகளில் சங்கு சக்கரம் ஏந்தி ஒரு கையை இடுப்பில் வைத்து ஒரு கால் மடக்கி கனகச்சித அழகோடு துர்க்கை காட்சியளிக்கிறாள். கலை உலகில் இத்துர்க்கை மிக அபூர்வ சிருஷ்டி என்பதில் ஆட்சேபம் எதுவும்

இருக்க முடியாது. மிக உக்கிரமான காளி உருவத்தைக் காண வேண்டும் என்றால் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோவிலுக்கும், கோவை மாவட்டத்திலுள்ள பேரூருக்கும் செல்ல வேண்டும்.

விஜயவாடாவில் உள்ள குன்று ஒன்றிலுள்ள மல்லிகார்ஜுன ஆலயத்தில் கனக துர்க்கைக்கு ஒரு சந்நிதியுள்ளது. ஆதிசங்கரர் இந்த ஆலயத்திற்கு வந்து ஸ்ரீ சக்கிரப் பிரதிஷ்டை செய்திருக்கிறார். சண்டிகாதேவி என்றே இந்தஅம்மன் அழைக்கப்படுகிறாள்.

மைசூர் ராஜ்யத்தில் பாதாமிக்கு வடக்கே 16 மைலில் ஐகோளே என்கிற ஊர் உள்ளது. இங்குள்ள கோயில்களில் அழகானது துர்க்கையினுடையதுதான். பார்ப்பதற்கு தாராசுரம் ஐராவதேஸ்வரர் ஆலயம்போல் உள்ளது. சாளுக்கிய வம்ச அரசர்கள் வழிபட்ட துர்க்கை இவள். மிக ஒயிலாக நிற்கும் பாணியை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

தமிழ்நாட்டில் சரித்திர வாயிலாக துர்க்கை வழிபாட்டை நாம் அறிவது பல்லவர் காலத்தில்தான். மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராஹர் குகையிலும், மகிஷாசுரமர்த்தனி மண்டபத்திலும் செஞ்சிக்கருகிலுள்ள சிங்கவரம்ஆலயத்திலும் துர்க்கை மகிஷாசுர மர்த்தினியாகக் காட்சியளிக்கிறாள். மகாபலிபுரத்திற்கு அருகிலுள்ள சாலவன் குப்பம் கிராமத்திலுள்ள புலிக்குகை துர்க்கைக்காகவே எடுக்கப்பட்டது என்று பல்லவ சரித்திரம் கூறுகிறது. மகாபலிபுரத்தில் பல மண்டபங்கள் துர்க்கைக்காகவே கட்டப்பட்டன.

வைத்தீஸ்வரன் கோவிலிருந்து மணமேடு போகும் பாதையிலுள்ள திருவாளப்புதூரின்அம்மன் மிகவும் வரப்பிரசாதி. துர்க்கை சந்நிதி என்றே இந்தஊர் அழைக்கப்படுகிறது. திருவாள் ஒளிப்புத்தூர் திருவாளப்புத்தூர் ஆகிவிட்டது. கோடிக்கரை என்னும் வேதாரண்யத்தில் துர்க்கை சந்நிதி உள்ளது. இவளை ராமர் பூஜித்திருக்கிறார்.

காளி சந்நிதிகள்

கல்கத்தா காளி

ஸங்கியமானம் ஸதல மார்யை ப்ருந்தை:
ப்ருந்தார காணும் ஸரிதஸ் தடேஸ்தி
ய: காளிகாம் பச்யதி காலகேசீம் தத்வாஸ்ய
காலாதபி நைவ பீதி:

—காவியகண்ட கணபதி (உமா ஸகஸ்ரம்)

காளி என்றதுமே பலருக்கு கல்கத்தா காளிதான் நினைவுக்கு வரும். காளிகட்டம் என்கிற பெயர்தான் மருவி கல்கத்தா என்றாகி

விட்டது. இக்காளி பயங்கர ரூபத்தை உடையவள். பிரளய காலத்தில் சர்வகோடி ஜீவராசிகளையும் தன்னிடத்தே இழுத்து உள்ளடக்கிவிடும் மகா சக்தியை இக்காளி உருவகப்படுத்துகிருள். இது முக்யமான சக்தி பீடங்களில் ஒன்று.

தக்ஷிணேஸ்வரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அருளிய காளி கோயில் கொண்டிருக்கிருள். இவள் ராமகிருஷ்ணருக்கு பிரத்யக்ஷமான தெய்வம்.

காளிகா தேவியின் நர்த்தன கோலம் வங்காளத்துக்கே உரியது. வங்கக் கவிகள் சுடுகாட்டை மனிதனுடைய ஹிருதயத்திற்கு ஒப்பிடுகிருர்கள். காளியின் நடனத்தை நம் ஹிருதயத்தில் அவ்வப்போது நினைத்து மேலோங்கும் ஆசாபாசங்கள் சுடுகாட்டில் சிதை நிக்கிரியையாவதுபோல் உருவகப்படுத்தி யிருக்கிருர்கள். வங்காளத்தில் சிவபெருமானுக்கு அவ்வளவாக மதிப்பில்லை. காளியின் காலடியில்தான் அவர் கிடக்கிருர்.

காளியின் ரௌத்திராகாரம் எல்லைக்கு மீறிப் போய்விட்டது. அதை அடக்க சிவபெருமான் காளியின் கால்களில் மிதிபடுகிருர். கால் பட்டதும் குழந்தையாக மாறி 'வீல்' என்று அழுகிருர். அம்பிகையின் தாய்ப்பாசம் அழும் குழந்தையின் பால் அவள் கவனத்தை இழுக்கிறது. காளியின் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது.

நவராத்திரியின்போது வங்காளிகள் காளி உருவை மிகப் பெரிய அளவில் தயாரித்து பூஜித்து, பின்னர் ஆற்றிலோ குளத்திலோ விடுவது வழக்கம். இதற்கு ''கௌரி குளித்தல்'' என்று பெயர். வங்காளிகள் தயாரிக்கும் காளி உருவம் பூமியில் கிடக்கும் சிவபெருமான்மீது நின்றுகொண்டு தலைவிரி கோலமாக சிவந்த நாக்கு வெளியே தொங்க பயங்கர ரூபம் கொண்டதாக இருக்கும்.

வங்கத்தில் மாளயத்துடன் ஆரம்பமாகும் துர்க்கா பூஜா தீபாவளி இரவுடன் முடிவடைகிறது. காலத்தைத்தான் காளியாக வங்காளிகள் உருவகப்படுத்தி வழிபடுகிருர்கள்.

காளி உருவச் சிலைகள் பல கடற்கரை ஓரங்களிலும் புதை பொருள்களாகக் கிடைத்ததிலிருந்து துர்க்கை பூஜை மிகத் தொன்மையான காலம் முதற்கொண்டே இப்பகுதியில் இருந்து வருகிறதென்று தெரிகிறது. ஜாக்ரத காளி, பாகட்காளி என்று அங்கு பல வகை காளிகள் வழிபடப்படுகின்றனர்.

காளஹஸ்தியின் மலை ஒன்றில் காளி கோயில் கொண்டிருக்கிருள். மலை ஏறுவது மிகவும் சிரமம்.

காளிதாஸன் வழிபட்ட காளி

உஜ்ஜெயினிலுள்ள காளிகோவில் மிக பிரசித்தியுள்ளதாகும். ஆஜானுபாகுவான பயங்கர உருவம். இக்காளிகா தேவியின் அருளால்தான் காளிதாசன் மிகப் பெரும் பண்டிதனானான். இந்த கோவிலிலுள்ள ஒரு விசேஷம் ஒரு தடவை பூஜை செய்துவிட்ட நிர்மால்யத்தை அலம்பிவிட்டு மீண்டும் பூஜைக்கு உபயோகிக்க லாம். இக்கோவிலில் மகாகாளருக்கும் சந்நிதி உள்ளது.

ஊருக்கு வெளியில் ஒரு காளி கோவில் உள்ளது. இங்குள்ள தேவி விக்கிரமாதித்தனால் பூஜிக்கப்பட்டவள்.

குஜராத்தில் பார்ஹத், பாலா, அரசூர் என்ற மூன்று இடங்கள் பிரபல தேவி சந்நிதிகளாக விளங்குகின்றன. தேவி பார்ஹத் என்ற இடத்தில் பத்ரகாளியாக விளங்குகிறாள். பார்ஹத் குன்று காளிகா தேவியின் சக்கிரம்போல அமைந் துள்ளது. இக் கோவிலில் ராணா பிரதாபசிம்மன் காளிக்கு காணிக்கையாக அளித்த போர்வாள் உள்ளது.

ஹிமாசலத்தில் சிம்லா (சியாமளா) முதல் கல்கா (காளிகா வரை ஒன்பது தேவி சந்நிதிகள் உள்ளன. கல்காவில் கோவில் கொண்டிருப்பவள் காளிகாதேவி.

ஆந்திர தேசத்தில் காளி தேவியின் பிரசித்திபெற்ற ஆலயம் வாரங்கல்லில் உள்ளது. சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஒரு குன்றில் பத்திரகாளியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. மலைமீது காளியின் ஆலயம் அமைந்திருப்பது தென்னாட்டில் இங்கும் மைசூரிலும்தான். மிகஅமைதியான இந்தஇடத்தில் பிரம்மாண்ட ரூபத்தில் உள்ள பத்திரகாளியைத் தன்னந்தனியே தரிசிக்க நேர்ந்தால் நெஞ்சுத் துணிவு நிறைய வேண்டும். ஆயினும் அவ்வளவு உக்கிரத்திலும் அம்மனின் புன்னகை அரும்பும் முகம் பார்ப்பவர்களை பரவசப்படுத்துகிறது. பிரபல சாளுக்கிய மன்னனான புலிகேசி இக்காளியை வழிபட்டு வந்தவன். இக் கோயில் அவனாலேயே கி. பி. 625-ல் கட்டப்பட்டதென்று கூறப் படுகிறது. வாரங்கலைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காகதீய அரசி இத் தேவியைத் தரிசிக்காமல் உணவு கொள்வதில்லை.

மாயவரம் அருகிலுள்ள திருமலைராயன் பட்டினத்தில் 'ஆயிரம்' காளியம்மன் கோயில் கொண்டிருக்கிறாள். மரத்தால் ஆன உருவம். ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி மாதத்தில் இந்த சிலை இருக்கும் பெட்டியைத் திறந்து சிலையை பூஜித்து எல்லா நிவேதனத்தையும் ஆயிரக்கணக்கு எண்ணிக்கையில் படைத்து மீண்டும் பெட்டிக்குள் வைத்து பூட்டிவிடுவது வழக்கம்.

திருவெண்காட்டில் காளிகாதேவியும் அகோர வீரபத்திரரும் எதிரும் புதிருமாகக் கோயில் கொண்டுள்ளனர், மிக அபூர்வமான

சந்நிதி. சிவபெருமானுடன் போட்டி போட்டுக்கொண்டு நடனமாடியவளாயிற்றே! ஆகவே ஆடும் பெருமானின் தலமான தில்லையிலே அவள் இருக்கத்தானே வேண்டும். தில்லைக்காளிக்கு ஒரு சிறு கோவில் ஊரின் ஒரு கோடியில் உள்ளது. நடனமாடி தோற்ற காளிக்கு திருவாலங்காட்டில் குளக்கரையில் ஒரு கோவில் உள்ளது. மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இந்த போட்டி நடனத்தைக் காணலாம்.

தாக்ஷிண காளி

சேலம் ஜங்ஷனுக்கு அரை மைல் தொலைவிலுள்ள ஜாகீர் அம்மா பாளையத்தில் ஆதிபராசக்தி வீரமாகாளியாகத் தனிக் கோயில் கொண்டிருக்கிறாள். இந்த கோவிலுக்கு காவடி பழனி யாண்டவர் கோயில் என்று பெயர். கல்கத்தா காளியை நினைவு படுத்துகிறார். பெயர் தக்ஷிண காளி.

ஸ்கந்தாஸ்மரத்தில் முருகனுக்கு எதிரில் 18 கைகளையுடைய துர்க்கை சன்னிதி உள்ளது. சுமார் 6½ அடி உயரம். இந்த திருவுருவம் பஞ்ச லோகத்தால் ஆனது.

திருவாரூர்க்கருகிலுள்ள மாலூரில் காளி கோயில் உள்ளது. பிரபல பத்திரிகாசிரியராக விளங்கிய சர். ஆர். எஸ். சர்மா நீண்ட காலமாகவே கல்கத்தாவில் தங்கி காளியை வழிபட்டவர். இவர் தன் பிறந்த ஊரான மாலூரில் கோவில் கட்டி காளியைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்.

சிறுவாச்சூர் மதுரகாளி

திருச்சி பெரம்பலூர் பாதையில் சிறுவாச்சூர் என்ற கிராமத்தில் மிக சக்தி வாய்ந்த மதுரகாளியம்மன் கோயில் கொண்டிருக்கிறாள். மிக சக்தி வாய்ந்த சந்நிதி. நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இவளைக் குலதெய்வமாக வழிபடும் குடும்பங்கள் எவ்வளவோ உள்ளன. காஞ்சி காமகோடி பெரியவர்களின் பூர்வாச்சிரமத்தில் அவர் குடும்பத்துக்கு குலதேவதை இவள்தானும். இந்த ஆலயம் திங்கள் வெள்ளியில் மட்டுமே திறக்கப்படுகிறது. கோவில் மிக மிக பழமையானது. ஆடிட்டர் ஸ்ரீ விஸ்வநாதய்யர் முயற்சியால் கோவில் பழுதுபார்க்கப்பட்டு முன் மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன.

இவளுக்கு சகோதரியாகக் கருதப்படுபவள் தஞ்சை மாவட்டத்திலுள்ள உடையாளூர் செல்வ மாகாளியம்மன். அந்தப் பகுதியிலேயே மாடக்குடி என்ற ஊரிலும் செல்வ மாகாளியம்மன் கோவில் உள்ளது. திருச்சிக்கருகிலுள்ள சமயபுரம் அருகில் மாகாளிக்குடி என்ற ஒரு ஊர் உள்ளது. இங்குள்ள காளி விக்கிரமாதித்தனால் பூஜிக்கப்பட்டவள். கும்பகோணத்திற்கருகிலுள்ள தேப்பெருமாள் நல்லூரில் ஒரு குளக்கரையில் உள்ளது

பச்சைக்காளி, பவழக்காளி சந்நிதி. தேப்பெருமாள் நல்லூரின் பாகவத நாட்டிய மேளா இந்த சந்நிதியில்தான் நடைபெறுவது வழக்கம்.

சென்னை தம்புச்செட்டித் தெருவில் காளிகா தேவிக்கு சந்நிதி இருக்கிறது. இவள் ஆதிசங்கரரால் வழிபடப்பட்டவள். அவர் இங்கு ஸ்ரீசக்கிர பிரதிஷ்டை செய்திருக்கிறார். அதற்குத்தான் பூஜை நடைபெறுகிறது. இந்த காளிக்கு அசுரஸ்வரூபிணி என்று பெயர். சிவாஜி இவளை வழிபட்டிருக்கிறார். இந்த ஆலய கிண்ணித்தேர் (வெண்கலத்தால் ஆனது) மிகப் புகழ் பெற்றது.

சுவர்ண காளி

மதுரைக்கு நேர் கிழக்கில் 40 மைலிலுள்ளது காளையார் கோவில். இங்கு காளிகாதேவி மருதவனத்தில் கோயில் கொண்டிருக்கிறாள். இவளுக்கு சுவர்ணகாளி என்று பெயர்.

சண்டாசுரன் கொடுமையைப்பற்றி தேவர்கள் தேவியைக் கண்டு முறையிட்ட இடம் 'கண்ட தேவி' என வழங்கப்படுகிறது. தேவிக்காக தேவர்கள் நிர்மாணித்த இடம் தேவிக்கோட்டை. அம்பிகை சண்டாசுரனை ஒழித்து வெற்றி கண்ட இடமே வெற்றியூர். வெற்றி பெற்ற தேவிமீது பூ மழை பொழிந்த இடம் பூங்குடி.

நாகைக்கருகிலுள்ள கீழ்வேளூரில் அஞ்சு வட்டத்து அம்மன் சந்நிதியுள்ளது. இந்த சந்நிதிக்கு முன் உள்ள துவாரபாலகிகளைக் கண்டாலே அச்சம் எழும். இவளை தரிசித்தால் ஐந்து வட்டம் என்ன, ஆயிரம் வட்டங்களிலிருந்து ஆபத்து வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது.

தஞ்சை பிருகதீஸ்வரருக்கு காவல் தெய்வமாக உக்கிரகாளியம்மன் கோயில் கொண்டிருக்கிறாள். வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்கு நேர் எதிரே ஒரு மைலிலுள்ள குயவர் தெருவில் இருக்கிறது இக்காளி கோவில், விக்கிரகம் பின்னமாகியிருந்தாலும் மிக உக்கிரமானத் தோற்றம். உயரம் ஐந்தடி. சண்டன் முண்டன் இருவரையும் சம்ஹரிக்கும் கோலம். கண்டியூரிலுள்ள காளியம்மன் சாந்த ஸ்வரூபி.

காஞ்சி காளி

காஞ்சிபுரத்தில் காமாக்ஷி அம்மன் ஆலயம் இருக்கும் காமகோட்டத்தையொட்டி ஒரு காளிகோயில் உள்ளது. இங்குள்ள அம்பிகை முன்பும் ஸ்ரீசக்கிரம் உள்ளது. கையில் பாசம், அங்குசம். ஒரு கையில் கிண்ணம் வைத்திருக்கிறாள். இவளை ஆதிபீடேஸ்வரி என்று அழைக்கிறார்கள். இக்கோயிலில் காய்க்காத புளியமரம் உள்ளது.

இறைவனது கண்களைப் பொத்தியதினால் கரிமேகம் போன்ற நிறம் பெற்று அதைப் போக்க தவஞ் செய்த இடம் இது என்று கூறப்படுகிறது.

காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலய இரண்டாம் பிராகாரத்தில் பிரளய காளி சன்னிதி உள்ளது: பிரளய பந்தினி என்ற பெயருடன் 8 கைகளுடன் கபாலத்தில் பொங்கி வந்த கங்கையை உமையின் ஆக்ஞைப்படி ஏந்தியவள். வெள்ளம் காத்தநாயகி என்றும் அழைக்கப்படுகிறாள்.

வெயிலில் காயும் வெக்காளி

உறையூரில் (திருச்சி மாவட்டம்) சோழன் பாறைக்கு சிறிது தூரத்தில் வெக்காளி அம்பிகை கோயில் கொண்டிருக்கிறாள். கரிகாற் சோழனுடன் தொடர்புள்ள வெக்காளியை கண்ணகி என்றும் சிலர் சொல்லுகின்றனர். கையில் சிலம்பும் உள்ளது.

உறையூர் மண் மாரியால் மேடிட்டபோது அங்குள்ள மக்களை இந்த வெக்காளியே காத்து ரக்ஷித்தாள் என்பது புராண வரலாறு. இவள் இருக்கும் இடம் மீது வெயில் மழையைத் தடுக்க கூரை கிடையாது. அப்படி ஒரு சமயம் போடப்பட்டபோது அது தீக்கிரையாகிவிட்டது. சந்தனக்காப்பு பூச்சொரியல் இவளுக்கு விசேஷ நாட்களில் நடைபெறுகிறது.

கம்பர் மாகாளி

தேரழுந்தூரில் ஆமருவியப்பன் கோவிலுக்குத் தெற்கே கம்பவ்மேடு உள்ளது. இதற்கு வடமேற்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் காளி கோவில் உள்ளது. கம்பன் பூஜித்த காளி இங்கு இருக்கிறாள். பெயர் கம்பன் மாகாளி என்றே வழங்கி வருகிறது.

கோகர்ண பத்ரகாளி

கோகர்ண க்ஷேத்ரத்தின் எல்லையில் பத்ரகாளி கோயில் கொண்டிருக்கிறாள். இந்த தேவி பற்றிய ஒரு சுவாரஸ்யமான புராண வரலாறு.

ஆத்ம லிங்கத்தைப் பெற தவமிருந்த ராவணன் முன்பு சிவபெருமானும், பார்வதியும் தோன்றினார்கள். பார்வதி தேவியின் அழகில் ராவணன் மயங்கினான். ஆத்ம லிங்கத்தை கேட்பதற்குப் பதிலாக பரமசிவனிடம் பார்வதியையே கேட்டு விட்டான். 'சரி அழைத்துப் போ' என்று சிவனும் கூறிவிட்டார். பார்வதி பின் தொடர பெருமையுடன் நடந்தான் ராவணன்.

எதிரில் நாரதர் வந்தார். அவர் ராவணனைப் பார்த்து ''எதற்காக பயங்கரமாக உள்ள இவளை அழைத்துப் போகிறாய். அழகான மண்டோதரிதான் உனக்காக காத்துக் கொண்டிருப் பாளே'' என்றார். திரும்பிப் பார்த்தான் ராவணன். பத்ரகாளி ஸ்வரூபத்தைப் பார்த்து நடுநடுங்கிப் போனான். அந்த காளி அங்கேயே கோயில் கொண்டுவிட்டாள்.

தென் கிழக்கு ஆசியாவில் தென் வியட்நாமின் தலைநகர் சைகானில் ஒரு காளி கோவில் உள்ளது. இரண்டாவது உலக

யுத்தத்தின்போது ஜப்பானியர் குண்டுகளை சைகோன்மீது வீசினர். அச்சமயம் பலர் இக்காளியம்மன் கோவிலில் தஞ்சம் புகுந்தனர். கோவிலின்மீதும் ஜப்பானியர் குண்டு வீசினர். ஆனால் அக் குண்டுகள் வெடிக்காமல் சிதறுண்டு போயின. அது முதல் அம்பிகையின் சக்தியை மக்கள் பெரிதும் போற்றுகிறார்கள். அவ்வூரிலுள்ள புத்த மதத்தினர் உள்பட அக்கோவிலுக்குச் சென்று தேவியை வழிபடுகின்றனர்.

கம்சமர்த்தினி

இமயத்தில் அலகநந்தா நதிக்கரையில் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் மாயா சக்தியான கம்சமர்த்தினி கோயில் கொண்டிருக்கிறாள். சிலை எதுவும் இல்லை. ஒரு குண்டத்திற்குத்தான் பூஜை. பூசாரி கண்ணைக் கட்டிக்கொண்டு பூஜை செய்கிறார்.

காளியாஸோர் என்ற அலகநந்தாவின் கரையில் மார்புவரை உருவமளிக்கும் காளி இருக்கிறாள். இவளை தக்ஷிணகாளி என்கிறார்கள்.

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகர் ஸ்ரீசக்ர ரூபத்தில் ஆதிசங்கரரால் நிர்மாணிக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. அலகநந்தாநதி மத்தியில் ஒரு காளி யந்திரம் இருந்தது. அதற்கு நரபலி கொடுக்கப்பட்டு வந்ததாம். ஆதிசங்கரர் இச்சக்கிரத்தை புரட்டிப் போட்டு அம்பிகையின் உக்கிரத்தைக் குறைக்க ஸ்ரீசக்கரப் பிரதிஷ்டை செய்தாராம்.

சண்டி சந்நிதிகள்

மைசூர் சாமுண்டி

மைசூர் நகரிலிருந்து செல்லும் பெரும் சாலை வழியே இரண்டு மைல் போய்ப் படிக்கட்டுக்கள் ஏறி மலைச் சிகரத்தை அடையலாம். இந்தப் படிக்கட்டுக்கள் பதினேழாம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட தொட்ட தேவராயர் கட்டினார் என்று கூறுகிறார்கள். இப்படிப் படி ஏறிப் போகும் வழியிலே நல்ல கருங்கல் நந்தி ஒன்று படுத்திருக்கும். அதன் உயரம் 16 அடி. கால்களை மடக்கிப் படுத்திருக்கும் பாவனையில் நந்தியிருக்கிறது. அதன் கழுத்தில் அணிந்திருக்கும் மணிகளெல்லாம் ஒலிப்பது போன்ற பிரமையை உண்டாக்கும். தஞ்சைப் பெருஉடையார் கோயில் நந்தி இதைவிடப் பெரியதுதான் என்றாலும், அழகிலே இந்த நந்தி சிறப்பானதாகவே இருக்கிறது. இந்த மலைப்படிகள் ஏற இயலாத பெருமக்கள் காரிலேயே மலைமீது செல்லலாம். நான்கைந்து மைல்கள் வளைந்து வளைந்து பாதை செல்லும். நந்தியைக் காண விருப்பமுள்ளவர்கள் மேல் பக்கம் செல்லும் பாதை வழியாகச் செல்ல வேணும். கீழ்ப்பக்கம் செல்லும் பாதை வழியாகச் சென்றால் நந்தியைப் பார்க்க முடியாது.

மேற்கு நோக்கிச் செல்லும் பாதை கோவிலை நோக்கித் தெற்கே திரும்பும் சந்நிதியில் நம்மை எதிர்கொண்டு வரவேற்க மஹிஷாசுரனே நிற்பான்; கத்தி ஒரு கையும், நாகபாசம் ஒரு கையுமாக ஓங்கி உயர்ந்த வடிவில் நிற்பான் சுதையால் செய்த வடிவில். தலையை எல்லாம் 'பாப்' செய்துகொண்டு அவன் நிற்கும் கோலம் உள்ளத்துக்கு அச்சம் தருவதாகவே இருக்கும். நாம் தாம் அவனையும் கொன்று வெற்றி மாலை சூடிய சாமுண்டி யின் சந்நிதிக்கே செல்கிறவர்கள் ஆயிற்றே. ஆதலால் மஹிஷனைக் கண்டு அஞ்சாமலே மேல் நடக்கலாம்.

காரிலே போயிருந்தால் காரைக் கோவிலின் வடபுறம் உள்ள மைதானத்தில் நிறுத்தி விட்டுக் கோவிலின் கிழவாயில் வந்து சேரலாம். வாயிலை ஒரு நல்ல கோபுரம் அழகு செய்கிறது. கோபுரத்தைப் பார்த்தால் நமது தென் தமிழ் நாட்டுக் கோபுரம் போலவே இருக்கும். கோயில் வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் ஒரு திறந்த வெளிப் பிராகாரம் இருக்கிறது; அதனையும் கடந்து மேல் நடந்தால் மகாமண்டபம் வந்து சேருவோம். அந்த மகா மண்டபத்திலிருந்தே சாமுண்டேசுவரியைத் தரிசனம் செய்ய வேண்டும். இச் சாமுண்டேசுவரி மஹிஷாசுரமர்த்தினியின் வடிவினளே.

விஷ்ணு தர்மோத்திரத்தில் இந்தத் தேவியின் வர்ணனை விளக்கமாக இருக்கிறது. தங்க மயமான மேனியும் இளமையும் உடையவளாய்ச் சிம்மத்தின் மேல் உக்கிரமாக அவள் காட்சி தருவாள். இருபது கைகள் கொண்ட இந்த ஈசுவரி சூலம், கட்கம், சங்கு, சக்கரம், கேடயம், பரசு முதலிய ஆயுதங்களை ஏந்தியவளாய் இருப்பாள். காலின் கீழ், எருமை உடலும், அசுரத் தலையும் கொண்ட மஹிஷன் விழி பிதுங்கிக்கொண்டிருப் பான். அவனைத் தன் கையில் ஏந்திய திரிசூலத்தால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பாள் என்றெல்லாம் இவள் வடிவ வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. இத்தனை வர்ணனைகளும் சரியாய் இருக்கின்றனவா என்று நாம் தெரிந்துக்கொள்ள முடியாது. நாம் எட்ட இருந்துதானே அம்பிகையைத் தரிசிக்க முடிகிறது. தங்கக் கவசம் சாத்தி, கோலாகலமாக விளக்குகளெல்லாம் போட்டு அலங்கரித்திருப்பார்கள். இந்தச் சாமுண்டேசுவரிதான் மைசூர் மகாராஜாக்களின் குலதெய்வம். மிகவும் பழமையான கோயி லாக இருந்ததை 1827-ல் மூன்றும் கிருஷ்ணராஜ உடையார் புதுப்பித்திருக்கிறார். அழகான தங்கச் சிம்ம வாகனம் ஒன்றையும் செய்து வைத்திருக்கிறார். ஏராளமான நகைகளையும் செய்து அன்னைக்கு அணிவித்து மகிழ்ந்திருக்கிறார். அதில் எண்பது சமஸ் கிருத தோத்திரங்கள் பொறிக்கப்பட்ட தங்க நக்ஷத்திர மாலிகை நகை மிக விலை உயர்ந்ததாம்.

இந்தச் சாமுண்டியை ஏதோ உடையார் வம்ச அரச பரம்பரையினர் மட்டுமே வணங்கி வந்தார்கள் என்றில்லை. மைசூரை ஆண்ட ஹைதர் அலியும், அவன் மகன் திப்பு

சுல்தானும் கூட ஆராதித்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் புதுப்புது அணிகளைச் செய்து அனுப்பிக் கொண்டே இருந்திருக்கிறார்கள். அந்த நகைகளெல்லாம் இன்றும் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டுத் தேவிக்கு அணியப்படுகின்றன. சாமுண்டேசுவரி மகா வரப்பிரசாதியான தெய்வம். ஆம்! மடமையையும், சோம்பலையும் தொலைத்து அருள் புரியும் ஆற்றல் உடையவள் அல்லவா அவள்.

சாமுண்டி மலையில் ஏறுவதற்கு மாலை நேரம் உகந்த நேரம். சாமுண்டேசுவரியையும் இரவிலே விளக்கொளியில் கண்டு வணங்குவதுதான் சிறப்பாக இருக்கும். அந்த இரவிலே அந்த மலைமேலே நின்று மின் விளக்குகளால் ஜோதி மயமாகப் பிரகாசிக்கும் மைசூர் நகரைக் காண்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

சண்டிகர் சண்டி

ஹரியானா மாநிலத்தின் தலைநகர் சண்டிகர் அருகில் ஒரு குன்றின்மீது சண்டி இருக்கிறாள். அவள் பெயரில்தான் இந்நகரம் ஏற்பட்டுள்ளது. இக்கோவில் எண்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. வீரம் நிறைந்த பஞ்சாபிகள் வணங்கும் காளி வீரமாகவும் இல்லை, அலங்காரியாகவும் இல்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் என்ற கிராமத்தில் சாமுண்டிக்கு ஒரு ஆலயம் உள்ளது. அவளது கோலம் மயிர்கூச்செறியச் செய்கிறது. சிரசின்மீது சீறும் பாம்பு படமெடுத்தாடுகிறது. நான்கு கரங்கள். ஒன்றில் தீச்சட்டி, ஒன்றில் கட்டாரி. ஒரு கை ஓங்கியபடி இருக்கிறது. மற்றொரு கரம் துடையைத் தொட்டவாறு இருக்கிறது. அசுரர் தலைகள் கொண்ட மாலையை அணிந்திருக்கிறாள். மிக அபூர்வமான சந்நிதி. சோழர் காலத்தில் ஏற்பட்ட கோவில் இது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நீடாமங்கலத்திற்கருகிலுள்ள பூவனூரில் சாமுண்டீஸ்வரிக்கு ஒரு சந்நிதியுள்ளது. இதுவும் சக்தி வாய்ந்த சந்நிதி. விஷக்கடிக்கு இந்த சந்நிதியில் ஒவ்வொரு ஞாயிறும் மந்திரித்த வேர் கட்டுகிறார்கள். பிரமிக்கத்தக்க பலன் இதற்குண்டு.

ஹ்ருஷிகேசத்தில் ஒரு குன்றின் மீது சண்டியும், மற்றொரு குன்றின்மீது மானஸா தேவியும் கோயில் கொண்டுள்ளனர். பல மகான்கள் வழிபட்ட சந்நிதிகள் இவை.

நந்தப் பிரயாகையில் மிகப் பழமையான சண்டிகா கோயில் உள்ளது. அம்பிகை வெள்ளிக் கவசத்துடன் காட்சி தருகிறாள்.

பூரி தலத்தில் பைரவி சக்கரம் வழிபடப்படுகிறது. இது ஒரு சக்தி பீட ஸ்தலம்.

நவபாஷாணத்திலுள்ள திலகேஸ்வர் ஆலயத்தில் எட்டு கைகள் உள்ள மகிஷாசுரமர்த்தினியை தரிசிக்கலாம்,

பகவதி சந்நிதிகள்

காளிக்கு மலையாளிகள் இட்ட பெயர் பகவதி. கேரளாவில் சாஸ்தா கோயில்களும், பகவதி ஆலயங்களுமே பிரசித்தம். மலையாள தேசத்தில் அம்மன் எல்லாருக்குமே பகவதி என்றுதான் பெயர். பகவதி என்று சொன்னாலே போதும். அக்கோயில் இருக்கும் திசை நோக்கி கைகூப்பிக் கும்பிடுகிறார்கள் மலையாளிகள். கேரளாவில் மட்டும் 27000 பகவதி கோயில்கள் உள்ளன.

கேரளத்தில் பத்ரகாளியை வழிபடுகிறார்கள். இது மகிஷாசுர மர்த்தினியின் வேறு வடிவம்தான். இவளேதான் பகவதி எனப் படுகிறாள். முன் காலத்தில் பல அரச குடும்பங்களின் தேவதைகளே இன்று பகவதிமார்களாக விளங்குகிறார்கள். மாடாயிக்காவு பகவதி கோலாத்திரிமார்களின் குலதெய்வம். ஸ்ரீ போர்க்கலி பகவதி, பழச்சியைச் சார்ந்த கோட்டயம் மன்னர்களின் குலதெய்வம்.

திணையரிசி 4 படி எடுத்து வறுத்து கருக்கி நல்லெண்ணெயை விட்டு கஸ்தூரி முதலிய வாசனை திரவியங்களுடன் வருடத்துக்கு ஒரு முறை சாந்து சாத்துவார்கள். இதுதான் அபிஷேகம். காரணம் பகவதி திருஉருவங்கள் அநேகமாக மரத்தினாலானவை.

செங்கனூர், கோட்டாணிக்கரை, கல்லன்குளம், கொல்லூர் ஆகிய ஊர்களிலுள்ள பகவதி சந்நிதிகள் மிக சக்தி வாய்ந்தவை.

மலம்புழா நீர் தேக்கத்திற்குச் செல்லும் வழியில் கல்லன் குளம் பகவதி கோயில் உள்ளது. சிறு குன்றின்மேல் இக்கோயில் அமைந்திருக்கிறது. இங்கு அம்மன் உருவம் இல்லை. ஒரு கை மட்டும்தான் ஒரு பீடத்தின் மேல் இருக்கிறது. தேவிக்கு ஹேமாம்பிகை என்று பெயர். தாக்ஷாயணியின் கை இங்கு விழுந் தாகவும் இது ஒரு சக்தி பீடம் என்றும் சொல்கிறார்கள். இது மிகவும் விசேஷமானத் தலம்.

மத்வாச்சாரியார் பிறந்த இடமான பாதுகா க்ஷேத்திரத்திற்கு அருகில் துர்க்கை குன்று என்றே ஒரு மலை இருக்கிறது. அதிலுள்ள கோயில் மிகவும் பழமையானது. அமைதியான சூழ்நிலையில் இங்கு பகவதி கோயில் கொண்டிருக்கிறாள்.

சோட்டாணிக்கரை (திருப்புணித்துறையிலிருந்து 5 மைல்) பகவதி மலையாள பகவதிகளில் மிகப் பிரசித்தி பெற்றவள். சோட்டாணிக்கரைப் பகவதியை ஆதிசங்கரர் தன் சௌந்தரிய லஹரியில் குறிப்பிட்டிருக்கிறார். மார்பகத்திலிருந்துதான் உருவம்.

சோட்டாணிக்கரை பகவதி அம்மன் சந்நிதியில் எப்போதும் லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் கேட்ட வண்ணம் இருக்கும். காலையில் சரஸ்வதி ஸ்வரூபத்தைக் காட்ட வெண்மை உடையும், பகலில் காளி ஸ்வரூபத்தை உணர்த்த சிவப்பு உடையும், மாலையில் லக்ஷ்மி அம்சத்தை உணர்த்த நீல உடையும்

அம்மனுக்கு அணிவிக்கிறார்கள். ஒரு கையில் சங்கம், ஒரு கையில் ஸ்ரீசக்கிரமும் கொண்டிருக்கிறாள் தேவி. அமர்ந்திருப்பதும் ஸ்ரீசக்கிரத்தின் மேல்தான்.

இவளுடன் போட்டி போடுபவள் கொடுங்கல்லூர் பகவதி. இந்த பகவதியைப்பற்றி மலையாளத்தில் பல பாட்டுகள் உள்ளன. இப்பகவதியின் சந்நிதிக்குமுன் சண்டிகேஸ்வரியின் விக்கிரகம் திறந்த வெளியில் இருக்கிறது. பிரதான சந்நிதிக்கு இடது பக்கத்தில் ஏழு மாதாக்களின் சந்நிதியுள்ளது. பகவதி எட்டுக் கைகளுடன், மூன்று கண்களுடன், கோரப் பற்களுடன் பயங்கர மாகக் காட்சியளிக்கிறாள். ஆதிசங்கரர் இங்கும் ஸ்ரீ சக்கிரத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறார். இத்தலம் திருப்பூரிலிருந்து 20 மைலிலுள்ளது.

மார்ச்-ஏப்ரலில் நடைபெறும் பரணி விழா மிகவும் பேர் போனது. கொடுங்கல்லூரரின் அரசர்களின் குலதெய்வம் இவள். விழாவின்போது மூடியுள்ள கர்ப்பக்கிரகத்தின் கதவுகள் திறந்ததும் கொடுங்கல்லூர் அரசர் ஒரு பட்டுக் குடையை பிரித்துப் பிடிப்பார். அதன்பின்தான் மற்றவர்கள் எல்லோரும் வழிபடலாம். பெரியம்மை குணமாகும் மிக விசேடத் தலம்.

செங்கனூர் (கோட்டயத்திலிருந்து 22 மைல்) சிறிய ஊர்தான் என்றாலும் பகவதியின் பிரசித்தி காரணமாக புகழ் பெற்ற இடமாகும். செங்கோட்டைப் பாதையில் உள்ள இந்த ஊரில் திருப்பூத்தாராட்டு உற்சவம் மிகவும் விசேஷமானது. இங்குள்ள பகவதி மாதம் மூன்று நாள் வீட்டு விலக்காகிறாள். நான்காவது நாள் நீராடுவதே திருப்பூத்தாராட்டு (திருபூப்பு ஆராட்டு) உற்சவ மாகும். இந்த மூன்று நாட்களும் கோயிலை மூடி விடுவார்கள். (பூத்தாராட்டு என்றால் கன்னிப் பெண் புஷ்பவதியாவதைக் குறிப்பிடுகிறது). இவ்விழா பிரதிமாதமும் சிறப்பாக முன்பு நடைபெற்று வந்தது.

ஒரு சமயம் மன்றோ என்கிற ஆங்கிலேய அதிகாரி ‘இது என்ன பேத்தல். கருங்கல் சிலைக்கு மாதவிடாயாவது’ என்று ஏசி இதற்கான உற்சவச் செலவுகளை அனுமதிக்க மறுத்தார். அடுத்த சில மாதங்களில் அவர் மனைவிக்கு மாதவிடாய் கோளாறு ஏற்பட்டுவிட்டது. அந்த அதிகாரி தன் மனைவியை இங்கிலாந் திற்கு அனுப்பி சிகிச்சை செய்து பார்த்தார். வலியால் அவள் துடித்தது நிற்கவில்லை. அவரது நண்பர்கள் பகவதி தேவியிடம் மன்னிப்பு கோரும்படி யோசனை கூறினர். அதன்படி அவர் செய்ய அவர் மனைவியின் நோய் தீர்ந்தது.

அம்மனுக்கு தீட்டு விலகுகிற அன்று அம்மனை நீராட்ட ஆற்றங்கரைக்கு எடுத்துச் செல்கிறார்கள். வரும்போது யானை மேல் பவனி விடுகிறார்கள். வழி முழுதும் தேங்காயை உடைத்து அதில் நெய்யை ஊற்றி விளக்கேற்றி ஆரத்தி எடுக்கிறார்கள். இந்த உற்சவ விக்கிரகம் சந்நிதிக்கு முன் வந்து நிற்கும்போது

தான் மூன்று நாள் மூடப்பட்ட மூலஸ்தான கதவு திறக்கப்பட்டு நிபாராதனை செய்யப்படுகிறது.

கேரளாவில் கொளச்சலுக்கருகில் மந்தைக்காடு என்ற இடத்தில் பகவதி அம்மன் கோயில் உள்ளது. இந்த அம்மனைப் புகைப்படம் எடுத்தால் படம் விழுவதேயில்லையாம். புகைப்பட நிபுணர்களுக்குப் பெரும் புதிராக விளங்குகிறாள் இந்த அம்மன். இங்கு பெரிய புற்றுதான் அம்மன் சந்நிதி. இப்புற்று 15 அடிக்கு மேல் இருக்கிறது. இக்கோவிலில் ஒடுக்கு பூஜை மிக விசேஷம். ஒடுக்கு பூஜை என்றால் பக்கத்தில் இருக்கும் பால்குளம் கண்டன் சாஸ்தா கோவிலிலிருந்து புதுப் பானைகளில் தேன், பால் முதலியவைகளை 18 முழம் மல் துணியால் மூடி இப்பகவதி முன்பு கொண்டுவந்து நிவேதனம் செய்யப்படும். மூன்று நாட்கள் விரதம் இருந்துதான் இப்பூஜை செய்வார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மஞ்சள், சந்தனம், குங்குமப்பூ முதலியவற்றை இப்புற்றுக்கு சாத்துகிறார்கள்.

பயத்தம் பருப்பை வறுத்து அரிசிமாவுடன் கலந்து வெல்லம் ஏலம் சேர்த்து பாகு செலுத்தி கொழுக்கட்டையைப்போல் வேக வைத்து நிவேதனம் செய்கிறார்கள். இப் பிரசாதத்திற்கு 'மண்டைப்பத்து' என்று பெயர்.

திருவனந்தபுரத்தில் ஸ்ரீபத்மநாப சுவாமி கோயிலுக்கு தென் கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் ஆட்டுக்கல் பகவதியம்மன் கோயில் உள்ளது. கோவில் மிகச் சிறியதுதான். இங்கு நவராத்திரி வெள்ளிக்கிழமையன்று 'பொங்கல்' விழா நடைபெறும். இதில் பெண்கள் மட்டும்தான் கலந்துகொள்வர். ஏராளமான பெண் மணிகள் அன்று கூடையில் பொங்கல் பானை, அரிசி, புருப்பு இவைகளை எடுத்துக்கொண்டு இக்கோவில் அருகில் ஏராளமாகக் கூடிவிடுவர். பட்டினியுடன் ஸ்நானம் செய்துவிட்டு செங்கல் அடுப்பு தயாரித்து தயாராக இருப்பார்கள். கோவில் பூசாரி அம்மனுக்கு பூஜை செய்தபின் ஒரு தீவட்டியை ஏற்றிக் கொடுப்பார். அதிலுள்ள நெருப்பைக் கொண்டுதான் எல்லா அடுப்புகளும் பற்றவைக்கப்படும். பொங்கல் தயாரானவுடன் வரிசையாக அம்மன் சந்நிதியில் வைப்பார்கள். பூசாரி அம்மடைய அபிஷேக ஜலத்தை அதன்மீது தெளிப்பார். இது முடிய பகல் 2 மணி ஆகிவிடும். அதற்குப்பிறகு அப்பொங்கலையே தான் அப்பெண்மணிகள் உண்பார்கள். இந்தப் பொங்கல் படையல் உத்ஸவத்திற்கு நூற்றுக்கணக்கானப் பெண்மணிகள் பக்தி சிரத்தையுடன் கலந்துக்கொள்கிறார்கள்.

மாரியம்மன் கோயில்கள் பற்றிய சகல விவரங்களும் 'பிரதிபா' வின் "கருமாரி தரிசனம்" என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

பவானி த்வம் தாஸே மயிவிரத த்ருஷ்டிம் ஸ கருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவானி த்வம் இதி ய: ।
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜஸாயுஜ்ய பதவீம்
முகுந்த பிரஹ்மேந்திர ஸ்புட மகுட நீராஜித பதாம் ॥

—சௌந்தரியலஹரி

பல தேவி சந்நிதிகளுக்குப் போய் வந்தோம். ஆனால் நாமே தேவியாக ஆகும் வழி தெரிந்தவர்கள் ஊர் ஊராகச் சுற்றத் தேவையில்லை. இந்த வழி அம்பிகையின் கருணை பிரபாவத்தைப் பெற்றவர்களுக்கு மட்டுமே சாத்தியம். இதற்கான வழியை ஆதிசங்கரர் விளக்கியுள்ளார்.

ஒரு பக்தன் அம்பிகை முன் நின்றுகொண்டு ''பவானீ!'' என்று ஆரம்பித்து, ''த்வம்'' (நீ) என்று கூறினவுடனேயே தனது அருளைக் கொடுத்துவிடுகிறாளாம்.

பக்தன் 'பவானீ!' என்று விளிச் சொல்லாகக் கருதியதை அம்பிகை வினைச் சொல்லாகக் கொண்டு 'த்வம் பவா நீ' (நீயாக ஆக வேண்டும்) என்று கோரினதாகக் கருதி அவனைத் தானாகவே ஆக்கிவிடுகிறாள். பக்தனுக்குக் கேட்கத் தெரியாவிட்டாலும் தானாகவே சிறந்த பயனைத் தருகிறாள் அம்பிகை. அன்னை பராசக்தி நற்கருமம் செய்வோர் வீடுகளில் லக்ஷ்மியாகவும், பாபிகளிடம் மூதேவியாகவும், பண்பட்ட உள்ளங்களில் புத்தியாகவும் விளங்குகிறாள். நற்குல நங்கையர்களிடம் காணப்படும் பண்பும் நல்லோர்களின் சிரத்தையும் அவளே என்கிறது தேவி மகாத்மியம்.

தேவி நம்மிடமே பல விதங்களில் பல ரூபங்களில் வியாபித்திருகிறாள்.

''விஷ்ணுமாயா சேதனா ச புத்திர் நித்ரா க்ஷுதா ததா சாயா சக்தி ச திருஷ்ணா ச க்ஷாந்திர்-ஜாதிஸ் தத: பரம் விருத்தி ஸ்மிருதிர், தயா சைவ துஷ்டிர் மாதா தத:

பரம| விராந்திர் வியாதிப்ச் சிதிச் சைவ திரியோ விம் சதி ஸங்கியா'' ஆகியவளாக இருக்கிறாள். இதை விளக்கும் சுலோகம்.

1. நமோ தேவ்யை மஹா தேவ்யை சிவாயை ஸததம் நம: ।
நம: பிரகருத்யை பத்ராயை நியதா: ப்ரணதாஸ்ம தாம் ॥

(தேவிக்கு மகா தேவிக்கு, சுப வடிவனளுக்கு, பிரகிருதிக்கு மங்கள ஸ்வரூபிணிக்கு நமஸ்காரம்.)

2. ரௌத்ராயை நமோ நித்யாயை கௌர்யை தாத்ர்யை
நமோ நம: ।
ஜ்யோத்ஸ்னாயை சேந்து ரூபிண்யை ஸுகாயை ஸததம் நம: ॥

(பயங்கர வடிவினள், நித்தியமானவள், கௌரி, உலகை தாங்குபவள், ஒளி வடிவினள், சந்திர பிரபை போன்றவள், இன்ப வடிவினள், அவளுக்கு நமஸ்காரம்.)

3. கல்யாண்யை ப்ரணதாம் வ்ருத்த்யை ஸித்த்யை குர்மோ
நமோ நம: ।
நைர்ருத்யை பூப்ருதாம் லக்ஷ்ம்யை சர்வாண்யைதே
நமோ நம: ॥

(சரணடைந்தோர்க்கு எல்லா நலன்களும் தானே ஆகியவளும், வளர்ச்சியும் வெற்றியும் ஆகியவளும், அலக்ஷ்மியும், லக்ஷ்மியும் ஆகும் சிவ பத்தினிக்கு நமஸ்காரம்.)

4. துர்க்காயை துர்க்கபாராயை ஸாராயை ஸர்வகாரிண்யை ।
க்யாத்யை ததைவ க்ருஷ்ணாயை தூம்ராயை ஸததம் நம: ॥

(கஷ்டங்களை நிவர்த்திக்கும் துர்க்கையாகவும், அனைத்தின் ஸாரமாகவும், அனைத்தையும் ஆக்குபவளாகவும், கியாதி வடிவினளாகவும், புகை வடிவினளாகவும் உள்ளவளுக்கு நமஸ்காரம்.)

5. அதி சௌம்யாதி ரௌத்ராயை நதாஸ்-தஸ்யை நமோ நம: ।
நமோ ஜகத் பிரதிஷ்டாயை தேவ்யை க்ருத்யை நமோ நம: ॥

(இனிய வடிவினள். பயங்கர வடிவினள். ஜகத்தின் ஆதாரமாகவும், இயக்கமாகவும்முள்ள தேவிக்கு நமஸ்காரம்.)

6. யாதேவீ ஸர்வ பூதேஷு (1) விஷ்ணுமாயேதி சப்திதா । நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம: ।
எல்லா உயிர்களிடத்திலும் (விஷ்ணுமாயையாக உள்ளவளுக்கு) நமஸ்காரம் நமஸ்காரம் நமஸ்காரம்

,, (2) சேதனத்ய பிதீயதே ,,
(சைதன்ய வடிவாயுள்ளவளுக்கு)

,, (3) புத்திருபேண ஸம்ஸ்திதா ,,
(புத்தி வடிவில் உறைபவளுக்கு)

யாதேவீ ஸர்வ பூதேஷு (எல்லா உயிர்களிடத்திலும்) (4) நித்திரா ரூபேணே ஸம்ஸ்திதா (நித்திரை வடிவில் உள்ளவளுக்கு) நமஸ்காரம்

.. (5) க்ஷுதா ரூபேணே ஸம்ஸ்திதா (பசி வடிவில் உறைபவளுக்கு) ..

.. (6) சாயா ரூபேணே ஸம்ஸ்திதா (நிழல் வடிவில் உறைபவளுக்கு) ..

.. (7) சக்தி ரூபேணே ஸம்ஸ்திதா (சக்தி வடிவில் உறைபவளுக்கு) ..

.. (8) திருஷ்ணு ரூபேணே ஸம்ஸ்திதா (வேட்கை வடிவில் உறைபவளுக்கு) ..

.. (9) க்ஷாந்தி ரூபேணே ஸம்ஸ்திதா (பொறுமை வடிவிலுள்ளவளுக்கு) ..

.. (10) ஜாதி ரூபேணே ஸம்ஸ்திதா (ஜாதி வடிவிலுறைபவளுக்கு) ..

.. (11) லஜ்ஜா ரூபேணே ஸம்ஸ்திதா (வெட்க வடிவமாக உள்ளவளுக்கு) ..

.. (12) சாந்தி ரூபேணே ஸம்ஸ்திதா (அமைதி வடிவில் உறைபவளுக்கு) ..

சிரத்தா (சிரத்தை ரூபமாகவும்), காந்தி (ஒளி)யாகவும், லக்ஷ்மி ரூபமாகவும், விருத்தி (ஜீவனோபாய) வடிவிலும், ஸ்மிருதி (ஞாபக) வடிவிலும், தயா (கருணை) வடிவிலும், துஷ்டி (திருப்தி) வடிவிலும், மாத்ரு (தாய்) வடிவிலும், பிராந்தி (பய) ரூபமாகவும் விளங்குபவளுக்கு நமஸ்காரம்.

7. இந்த்ரியாணு-மதிஷ்டாத்திரி பூதானுஞ் சாகி லேஷு யா ।
பூதேஷு ஸததம் தஸ்யை வ்யாப்திதேவ்யை நமோ நம ॥

எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி இந்திரியங்களை ஆள்பவளாய் எங்கும் எல்லாப் பொருள்களிடத்தும் வியாபித்து நிற்கின்ருளோ அந்த தேவிக்கு மீண்டும் நமஸ்காரம்.

நாராயணீ ஸ்துதி

[சும்ப நிசும்ப வதம் முடிந்ததும் தேவர்கள் துதிக்கும் ஸ்தோத்திரம் இது. "நாராயணீ ஸ்துதிர் நாம ஸூக்தம் பரமசோபனம்" என்பார்கள்]

1. ஸர்வ மங்கல மங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே ।
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ॥

(எல்லா மங்களங்களிலும் மங்கலப் பொருளாய் விளங்கி எல்லா நன்மைகளையும் அளிப்பவள். எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்பவள். சரணடைவதற்குரியவள். மூன்று கண்களையுடைய நாராயணியே நமஸ்காரம்.)

2. ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசானாம் சக்திபூதே ஸநாதனி ।
குணாச்ரயே குணமயே நாராயணி நமோஸ்துதே ॥

(ஆக்கல், காத்தல், அழித்தல் முத்தொழிலையும் செய்பவளே, என்றும் உள்ளவளே, குணங்களையே வடிவமாகக் கொண்டவளே, நாராயணீ நமஸ்காரம்.)

3. சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணே ।
ஸர்வஸ்யார்த்தி ஹரே தேவி நாராயணி நமோஸ்துதே ॥

(சரணடைந்த தீனர்களையும், துன்புற்றோரையும் காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவளே! எல்லோருடைய துன்பத்தையும் துடைப்பவளே உனக்கு நமஸ்காரம்)

நவசக்திகளான பிரம்மாணீ வடிவெடுத்தவளே, மாஹேசுவரி, கௌமாரீ வடிவு கொண்டவளே, வைஷ்ணவி ரூபம் தாங்கியவளே, பூமியைக் காத்த வாராஹி வடிவினளே, நரசிம்ம உருதாங்கிய நரசிம்ம வடிவினளே, இந்திர சக்தியே, யமி வருண சக்தியே, லக்ஷ்மி, சரஸ்வதி துர்க்கா தேவியுமானவளே நமஸ்காரம்.

4. சர்வ ஸ்வரூபே சர்வேஸே சர்வசக்தி சமன்விதே ।
பயேப்யஸ்- த்ராஹி நோ தேவி துர்க்காதேவி நமோஸ்துதே ॥

அனைத்தின் வடிவாகவும், அனைத்தையும் ஆள்பவளாகவும், சக்தியனைத்தும் பொருந்தியவளாகவும் விளங்கும் தேவியே பயங்கரமானவற்றிலிருந்து எங்களைக் காப்பாய். துர்க்கா தேவியே நமஸ்காரம்.

தேவியை இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் உள்ள சௌந்தர்யலஹரி (22-வது) ஸ்தோத்திரம் மூலம் பிரார்த்திப்பது மிகவும் விசேஷம். சாம வேதத்தில் சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள 'தத்வமஸி' என்ற மகா வாக்கியத்தின் பொருளும் இந்த ஸ்லோகத்தின் பொருளும் ஒன்றே.

ஆத்யகாளி ஸ்வரூப ஸ்தோத்திர நாமங்கள்

மகா நிர்வாண தந்திரத்திலுள்ள இந்த ஸ்தோத்திரத்திலுள்ள விசேஷம் இதிலுள்ள 108 நாமங்களும் 'க' வர்க்கத்திலேயே ஆரம்பிப்பதாகும். தந்திரராஜத்தில் தேவியே சிவனைப் பார்த்து 'க' ஹாரமே உங்களிடம் அடங்கியதுதான் என்றும் அந்த சக்தி எல்லா சித்திகளையும் அளிக்கவல்லது என்கிறாள்.

ஹ்ரிங்
ஷ்ரிங்
கிரிங்
காளி
காலகர்ஷிணி
கராளி
காலிகா
கல்யாணி
கலாவதி
கமலா 10

கபாதீஷா கிருபான்விதா
கலாமாதா
கபர்தினி
கராலாஸ்யா
கருணாம்ருதஸாகரா
கிருபாமயீ
கிருபாகாம
கிரிஸானு
கபிலா
கிருஷ்ணா 20

கிருஷ்ணானந்த விவர்த்தினி
காளராத்ரி
காமருபா
காமபாசவிமோசனி
காதம்பினி
கலிகல்மஷநாசினி
குமாரி பூஜன்யபிரீதா
குமாரி பூஜ்யகலயா
குமாரிபோஜனனந்தா
குமாரிருபதாரிணி 30

கதம்பவன சஞ்சாரா
கதம்பபுஷ்ப சந்தோஷா
கதம்பவனவாஸினி
கதம்பரிபாநராதா
கலாநாதாதிநந்தினி
கலாகாந்தா
கிஷோரி
கதம்ப புஷ்பமாலினி
கலாதாரா
காதம்பரிப்ரியா 40

கபாலபத்ரநிரதா
கங்கால மாலயதாருணி
கமலாஸனா சந்துஷ்டா
கமலாசனவாசினி
கமலாலயமத்யஸ்தா
கமலாமோதமோதினி
கலஹாங்ஹஸகதி
கிலேப்யநாசினி
காமருபிணி
காமருப கிருதவாஸா 50

கர்மபித்தவிலாசினி
கமனீய
கல்பலதா
கமனீயாவிபூஷணா
கமனீயகுணாராத்யா
கோமலாங்கி
கிரிஷோதரி
காணம்ருதசந்தோஹ
கருணனந்தசித்தித
கருணனந்தஜபேஷ்டா 60

கருணார்ச்சனஹாஷித
கருணாரவஸன்மதின
கருணாவரதபாலினி
கஸ்தூரி கௌரபாமோத
கஸ்தூரி திலகோஜ்வலா
கஸ்தூரி பூஜகப்பிரியா
கஸ்தூரி பூஜநாரதா
கஸ்தூரி ஜகுஜ்ஜனனு
கஸ்தூரி மிருகதோஷிணி
கஸ்தூரிபோஜனபதோ 70
கற்பூரமோதமோதிதா
கற்பூரமாலாபரண
கற்பூர சந்தனக்ஷிதா
கற்பூர கரணாஹ்லாதா
கற்பூராம்ருதபாயினி
கற்பூரசாகரஸ்நாதா
கற்பூர ரஸகாரலயா
கூர்ச்சாவிஜஜபப்ரீதா
கூர்ச்ச ஜபப்பாரயாணு
குலிணு 80
கௌலிக ஆராத்யா
கௌலிக பிரியகாமினி
குலாசாரா
கந்துமினி
குலமார்க்க பிரதர்சினி
காசீஸ்வரி
கார்த்நஹாத்ரி
காசீஸ்விரதாயினி
காசீஸ்வரஹ்ருதமோதா
காசீஸ்வரமனோரமா 90
கலாமஞ்சீர சரணு
குவந்தகாஞ்சி விபூஷணு
காஞ்சனாத்திகிருத்காரா
காஞ்சனாசல கௌமுதி
காமவிஜய ஆனந்த
காமவிஜய ஸ்வரூபிணி
குமாதிக்வி
குலிணார்த்தநாசினி
குலகாமினி
க்ரீங் ஷ்ரீங் ஹ்ரீங் மந்திரா
வர்ணேன காலகாந்தக
காதினி 100

நவ சக்திகள்

பிரும்ம சக்தி —பிராம்மி-ஜபமாலை கமண்டலம் தரித்தவள். அன்ன வாகனம்.

